விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம் கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 09 புதன்கிழமை (22.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 124

# மகிந்தவை பிரதமராக்கி மைத்திரியுடன் கைகோர்ப்பு

## நாட்டை பாதுகாக்க இணைவோம் என்கிறார் கோத்தா



(கொழும்பு)

நாட்டை பாதுகாக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கைகோர்த்துக்கொள்ள வேண்டுமென முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## 27-ம் திகதியே 19-ம் திருத்தம்

(கொழும்பு)

19 ஆவது திருத்தம் எதிர்வரும் 27 ஆம் திகதியே சபையில் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், நாடாளுமன்றத்தில் காணப்பட்ட குழப்பங்களையடுத்து சபையை ஒத்திவைத்த சபாநாயகர் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்தினார்.

கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் 19 ஆவது திருத்தத்தை 27 ஆம திகதி சமர்ப் 24 ஆம் பக்கம் பார்க்க....

## வந்தார் பசில்

### ஆதரவாளர்கள் திரண்டு வரவேற்பு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ நேற்று செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவரை வரவேற்பதற்காக இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆதரவாளர் 24 ஆம் பக்கம் பார்க்க....

## தலைக்கவசம் இன்றிப் பயணித்த இளம் குடும்பஸ்தர் விபத்தில் மரணம்

(புன்னாலைக்கட்டுவன்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் தலைக்கவசம் இன்றி பிரயாணம் செய்த இளம் குடும்பஸதர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் புத்தூர் வீதி புன்னாலைக்கட்டுவன் 3-ம் சந்திக்கு அருகில் இடம்பெற்றது.

இதில் சூறாவத்தை வடக்கு சுன்னாகத்தை பிறப்பிடமாக கொண்ட கங்காதேவன் மஜித் (வயது-25) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

நீர்வேலியிலுள்ள தனது உறவினர் வீட்டுக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது குன்றும் குழியுமாக சீரில்லாமல் காணப்பட்ட வீதியில் பிரஸ்தாப நபர் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

இதில் படுகாயமடைந்த குறித்த நபர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட 24 ஆம் பக்கம் பார்க்க....

## ரவி - விமல் வாக்குவாதம்

(கொழும்பு)

நேற்று காலை பாராளுமன்றத்தினுள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மற்றும் நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க இடையில் பாரிய வாக்குவாதம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவர் தில்ருக்ஷி ட்யஸ் விக்ரமசிங்க அப்பதவியில் இருந்து இராஜினாமா 24 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவிற்கு ஆதரவாக போர்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று நாடாளுமன்ற வீதியில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மதியமளவில் கைவிடப்பட்டது. நாடாளுமன்ற உறுப் 24 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த - மைத்திரி சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய சில விடயங்கள் குறித்து இந்த சந்திப் 24 ஆம் பக்கம் பார்க்க....

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு விரைவில் அடிப்படை வசதிகள்

### யாழ் மாவட்ட செயலகம் தீர்மானிப்பு

(யாழ்ப்பாணம்)

மீள்குடியமர்வுக்கு விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளை விரைவாக ஏற்படுத்திக் கொடுப்பதென யாழ் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய விடுவிக்கப்பட்ட வலி வடக்கு, கிழக்குப் பகுதிகளில் குடியமர்ந்த மக்களுக்கு முதற்கட்ட உதவிகள் விரைவாக வழங்கப்பட உள்ள அதே வேளையில் பிரதேச மக்கள் அனைவரும் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் விரைவாக மீளக் குடியமர வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வலி வடக்கு, கிழக்கில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை உதவிகளை ஏற்படுத்திக் கொடுப்பது 24 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VACANCIES

VAVUNIYA CAMPUS, UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

01.FACULTY OF APPLIED SCIENCE

Senior Professor/ Professor of Information & Communication Technology

Instructor in Computer Technology Grade II

02.FACULTY OF BUSINESS STUDIES

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Applied Mathematics & Computing/ Business Economics

03.Instructress in Physical Education Grade III

## SALARY AND OTHER BENEFITS

| Post | Salary Scale |
|---|---|
| Senior Professor | Rs.67,100-13x1425-82,775/-p.m |
| Professor | Rs.56,505-13x1310-73535/-p.m |
| Senior Lecturer Grade I | Rs.45,545-07x1050-52,895/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.39,755-11x790-48,445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27,775-10x645-34225/-p.m |
| Instructor in Computer Technology Gr.II | Rs.26,020-03x645-27,955/-(EB) 28,600-14x645-37630/-p.m |
| Instructress in Physical Education Gr.III | Rs.21370/-18x320-27130/-p.m |

**Note:-**

In addition to the above Salary, the following allowances will also be paid for academic staff.

i)Academic allowance:-

Senior Professor-135% of the basic salary

Professor-130% of the basic salary

Senior Lecturer Gr. I/ Gr. II-120% of the basic salary

Lecturer (Probationary)- 85% of the basic salary

ii) Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff

The following allowances will also be paid for are permanent positions

i) Special allowance - 20% of the basic salary

ii) Cost of living allowance of Rs.7,800/-p.m

iii) Additional monthly allowance-20% of the basic salary.

iv)Interim Allowance 8000/-p.m upto June 2015

v)Further Monthly Compensatory Allowance-20% of the basic salary for Instructress in Physical Education Grade III

**Statutory benefits:**

1.Sabbatical leave entitlement for the holder of the post of Senior Lecturer Grd.11 and above

ii.Membership in Universities Provident Fund and pension scheme in the university System

iii.Gratuity Payment

iv.Employees Trust fund benefits.

v.Free medical Service

**Closing Date:**

**Post of Senior Professor/Professor** -24.07.2015

**Other posts** -23.05.2015

Applications and other documents for the post of Senior Professor/professor shall be sent to the **Vice-Chancellor** with the covering letter. Applications for the other posts shall be sent to the **Deputy Registrar/Academic Establishment, university of Jaffna,Thirunelvely Jaffna.**

Application Forms and other details may be obtained from the office of the Deputy Registrar/Academic Establishments, university of Jaffna, Srilanka, either in person or by post, an a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self-addressed stamped envelope 23X10 c.m in size.

Application forms and other details will also be available in the university website www.jfn.ac.lk Those who wish to send the application forms downloaded from the University website Should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application Form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **Separate forms.**

Applicants from the university System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation.Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRILANKA. (C-765) 21.04.2015

## தேவை

மஞ்சி, மலிபன், நெஸ்லே, ஏமாஸ், ரிஸ்பரி சொக்லெட் தொழிற்சாலைகளுக்கு ஆண், பெண் தேவை.

18-55 வயது. 35000 உயர் சம்பளம்

தொடர்புகளுக்கு :- 0717002057

## விரிவுரைக் கதிரைகள் விற்பனைக்கு

மரத்தாலான விரிவுரை மண்டப கதிரைகள் விற்பனைக்குண்டு

தொடர்பு:-0766038596 (137)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரியசந்தர்ப்பம் தவறவிடாதீகள். விமான நிலையம் (துனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/=-35000/= வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

தொடர்புகளுக்கு:-0766398366 (150)

## பாம்பு தீண்டி பெண் மரணம்

மட்டக்களப்பு, ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஈரளக்குளம் பகுதியில் பாம்பு தீண்டி குடும்ப பெண்ணொருவர் உயிரிழந்தார். ஈரளக்குளம் பெரியவட்டவான் (சின்னதுரைமாரி) எனும் இடத்தைச் சேர்ந்த கணேசமூர்த்தி மாங்களம் (வயது - 50) என்ற ஆறு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்தார். நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை 3 மணியளவில் வீட்டில் இவரை விசப்பாம்பு தீண்டியுள்ளது. (செ-11)

மணப்பெண் ஒப்பனை

Bridal Make-up

ஃபேஷியல்

Facial



பயிற்சி வகுப்புக்களின் புதிய பிரிவு

25.4.2015

சனி காலை 10 மணி முதல்
ஆரம்பமாகின்றன

எமது வழமையான ஏனைய பயிற்சிகளும்
சமகாலத்தில் ஆரம்பமாகும்

கலந்து கொள்ள விரும்புவோர் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்

(கி-766)



தூரிகை

நுண்கலை வளாகம்

மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/ Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Demolition of the Old Maternity Ward – Two Story Building | 500.00 | 20,000.00 | 91 | Materials 1.3 Demolition 1.3 | C8 |
| Construction of 50m OPD Boundary Wall | 500.00 | 45,000.00 | 91 | 2.2 | C8 |
| Renovation works at Ward No 08, Iron Grill Work at Ward No 16 B and Renovation of Coroner's Room & Mortuary Toilet | 500.00 | 30,000.00 | 91 | 1.4 | C8 |

1.Bidding will be conducted through National Competitive Bidding Procedure

2.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

3.Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

4.A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 23.04.2015 until at 4.00 pm on 07.05.2015. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

5.Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 08.05.2015, late bides will be rejected. Bids will be open at 10.15 hrs at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
22/04/2015. (C-764)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகள் சந்தை நிலவரத்தை அறிய யாழ்ப்பாணத்தில் சந்தை தகவல் மையம்

## விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் இரண்டு முக்கிய பயிர்ச்செய்கை பிரதேசத்தை தெரிவு செய்து விவசாயிகள் சந்தை நிலவரங்களை அறிந்து கொள்ள சந்தை தகவல் மையம் அமைக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண விவசாய திணைக்கள பிரதி பணிப்பாளர் கீ. ஹிபால சுந்தரம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 2 விவசாய போதனாசிரியரின் கீழ் இந்த சந்தை தகவல் மையம் முதன்முறையாக அமைக்கப்படவுள்ளது.

இதன்மூலம் விவசாயிகள் யாழ்ப்பாணம், கொழும்பு, தம்புள்ள ஆகிய பிரதான சந்தைகளில் உள்ள மரக்கறிகளின் சந்தை நிலவரங்களை உடனுக்குடன் இணையத்தளத்தினூடாக அறிந்து கொள்ள முடியும்.

அதனூடாக விவசாயிகள் சந்தைப்படுத்தலில் உள்ள பிரச்சினைகளை தெரிந்து கொண்டு தீர்த்துக் கொள்ள முடியும்.பிரதம செயலாளரின் நிதி ஊடாக முதற்கட்டமாக 4 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஏப்ரல் மாதத்திற்கு பின்னர் இதற்கான ஆரம்ப கட்ட பணிகள் இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# நான் மயில்மாளிகைக்கு போவதாக கூறவில்லை

## மகிந்த விளக்கம்

இலங்கை தொழிலாளர் கட்சியின் தலைவரும் வர்த்தகருமான ஏ.எஸ்.பி.லியனகே தன்னுடைய பீகொக் மாளிகையை (மயில் மாளிகை) எனக்கு தருவதாக கூறினார். ஆனால், நான் அங்கு போவதாக கூறவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு அபயராம விஹாரைக்கு நேற்று முன்தினம் அவர் வந்தபோது அங்கு குழுமியிருந்த ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பீகொக் மாளிகையை (மயில் மாளிகை) வேறொருவருக்கு விற்பனை செய்வதற்கு முயற்சித்தமை தொடர்பில் தூய்மையான நிதிசட்டத்தின் கீழே வாக்குமூலமளிப்பதற்கு இலங்கை தொழிலாளர் கட்சியின் தலைவரும் வர்த்தகருமான ஏ.எஸ்.பி.லியனகே, கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா பாடநெறிக்கு (NDES) விண்ணப்பம் கோரல்

கட்டுநாயக்காவில் உள்ள எந்திர தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா 4 வருட பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்பு பயிலுநர் களை சேர்ப்பதற்கான விண் ணப்பங்கள் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் கோரப்பட்டு ள்ளன.

ஜீ.சீ.ஈ.(உயர்தர) பரீட்சையில் கணித பாடங்களில் சித்தியடைந்த 18 வயதிற்கும்25 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்கள் 29/05/2015 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல்வேண்டும் என கேட்கப்பட்டு ள்ளது. இது தொடர்பான விபரங்களை 24/4.2015 ஆம் திகதி வர்த்தமானியில் பார்வையிடலாம். அத்துடன் www.iet.edu.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரத்தையும் விண்ணப்பப்படிவத்தையும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, இல.44 சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# மரண அறிவித்தல்

## செல்வி மனுவேற்பிள்ளை அன்னமலர்

### (சந்திரா- ஓய்வுநிலை ஆசிரியர்)



நெடுந்தீவு- கிழக்கைப் பிறப்பிடமாகவும் பெரியதம்பனை வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்வி மனுவேற்பிள்ளை அன்னமலர் (20.04.2015) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை (ஓய்வுநிலை அதிபர்)- அருள்மேரி தம்பதிகளின் அன்பு மகளும், மேரிசறோஜா (ஓய்வுநிலை அதிபர்) , அருளானந்தம் (ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் போரூட்), மரியநாயகம் (முன்னாள் தபாலதிபர்), சேவியர் தனிநாயகம் (முன்னாள் ஆங்கில ஆசிரிய ஆலோசகர், USA), அன்னபாக்கியம் (பிரதம முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், நெடுந்தீவு), அன்ரன் திருச்செல்வம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கணபதிப்பிள்ளை (ஓய்வுநிலை திடீர் பரிசோதகர் இ.போ.ச), மனோரஞ்சினி, சத்தியா (முன்னாள் ஆசிரியை, USA), வசந்தி (முகாமைத்துவ உதவியாளர், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுதர்சினி , வில்சன் (ஆசிரியை, செட்டிப்புலம் GTMS வேலணை), ஜெகதீபன் (M.Sc,UK) நவதீபன் (UK), ஜெனாதீபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பொறியில்பீடம்- கிளிநொச்சி), துஷ்யந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சித்தியும், கிருஷாந்தினி ( USA) மக்ஸ்வெல் நிஷாந்தன் (கணக்காளர்- கபஜ் றெறன்ஸ் துஷ்யந்தன் (வைத்திய கலாநிதி கொழும்பு), யூட்நிரோஷன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்- வவுனியா), அருணன் ( USA) ஆகியோரின் அன்பு அத்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (23.04.2015) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் புனித சவேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக நெடுந்தீவு- கிழக்கு காட்டு இராமன் சல்லி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**நெடுந்தீவு-12** **குடும்பத்தினர்.**

# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



**சுப்பையா பொன்னுத்துரை**

**(மாப்பிள்ளை)**

**பிறப்பு 1920.02.11** **இறப்பு 2013.04.14**

திதி: சித்தா சதுர்த்தி

அன்புள்ள ஐயாவே
ஆசையாய் எமை வளர்த்த ஐயாவே
ஆறவில்லை உங்கள் நினைவலைகள்
ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

**கோண்டாவில் றோட், கோப்பாய் தெற்கு, இருபாலை.**

**தகவல்: குடும்பத்தினர்.**

# இராசி பலன்

22.04.2015
(சித்திரை 09, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
சதுர்த்தி முன்னிரவு 7.44 மணிவரை
ரோகினி பிற்பகல் 2.43 மணிவரை
இராகுகாலம் 12.01-1.31 மணிவரை
சுபநேரம் 4.31-6.01 மணிவரை
சதுர்த்தி விரதம்
மங்கையற்கரசியார் குருபூசை

வளவன்

**மேடம்:** நினைத்ததை முடித்து நிம்மதி காண முற்படுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**இடபம்:** குடும்ப பொறுப்புகள் கூடும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்:** நண்பர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம், வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிக்கள் கேட்கலாம், விரயங்கள் கூடும் நாள்.

**கடகம்:** வருமானம் பெருகி வளம் காணும் நாள், இல்லத்தாரின் தேவைகளை பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** தொட்ட காரியம் துளிர்விடும் நாள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், செய்தொழிலில் பாராட்டுக்கள் கிடைக்கலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி:** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், தொழில் போட்டிகள் குறையலாம், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பகைவர்களின் தொல்லை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், ஆரோக்கியமான நாள்.

**தனுசு:** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்:** செய்தொழில் மேன்மையுண்டு, வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழும் நாள், பெரியோர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்:** உடன் பிறப்புக்கள் மூலம் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், நீண்ட நாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 184**

## பயத்தை எதிர்கொள்ளல்



...பொதுவாகப் பயம் மிகவும் சக்தியுடன் இருப்பதால் அது உங்களைக் கட்டுப்பாடு இழக்கச் செய்து விடுகிறது.

ஒரு சிறிய கதை...

ஒரு சூஃபி குருவிடம் அவரது சீடன் ஒருவன் தீட்சை கொடுக்குமாறு தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்தான்.

இறுதியில் குரு ஒரு நிபந்தனையுடன் அவனுக்குத் தீட்சை கொடுக்கச் சம்மதித்தார்.

நிபந்தனை என்னவென்றால், அவன் அருகிலிருக்கும் பட்டணத்திற்குச் சென்று அங்கு பர்தா அணிந்து கொண்டிருக்கும் ஒரு பெண்ணை முத்தமிட்டு விட்டு அங்கிருந்து அதற்கப்பாலுள்ள காட்டிற்குச் சென்று அவன் கையிலுள்ள கம்பால் ஒரு புலியை அடித்து விட்டு வரவேண்டும்.

இது மிகவும் எளிதானது என்று மற்ற சீடர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். குரு ஒரு புன்சிரிப்புடன் அவர்களைக் காத்திருக்கச் சொன்னார்.

ஒரு வாரம் கழித்து அந்த சீடன் திரும்பினான். அவன் மிகவும் மோசமாகக் காயமடைந்து இரத்தம் வடிய நின்றுகொண்டிருந்தான்.

குரு அவனிடம் என்ன நடந்தது என்று கேட்டார். சீடன் சொன்னான்: எனக்கு ஏனென்று தெரியவில்லை. ஆனால் நான் பெண்ணை அடித்து புலியை முத்தமிட்டுவிட்டேன்.

(பலத்த சிரிப்பு)

பயம் உங்களை வெறுமனே குருடாக்கிவிடும்! அது சில கணங்களுக்கு உங்கள் சிந்தனையையும் அறிவுக் கூர்மையையும் ஒருங்கே எடுத்துச் சென்றுவிடும்.

அதனால் பயத்தை ஆழமாகப் புரிந்துகொண்டு அதனை வெல்ல வேண்டும்.

பல சம்பவங்களிலும் நீங்கள் கேள்விப்பட்டு இருக்கலாம்... எங்கேனும் ஏதாவது தீவிபத்தோ அல்லது பேரழிவோ ஏற்படும் பொழுது மக்கள் பயத்தில் எல்லாத் திசைகளிலும் ஓடிக்கொண்டிருப்பார்கள். கதவுகளைத் தவறான பக்கம் திறப்பார்கள். சாதாரண காலங்களில் சரியான வாயில் தெரிந்திருந்தும் இப்பொழுது தவறான வாயிலை நோக்கி ஓடிக்கொண்டிருப்பார்கள்.

அவசர காலங்களில் இதுபோன்ற செய்கைகள் சில சமயங்களில் அவர்களது வாழ்க்கையையே இழக்கவும் காரணமாகி விடும். பயம் மிகவும் குருடாக்கி விடும் தன்மையுடையது.

நீங்கள் எப்பொழுதும் உங்கள் பயத்தை அறிந்திருக்க வேண்டும் என்று நான் சொல்வதன் காரணம், விழிப்புணர்வால் மட்டுமே கீழ் நிலைச் சக்திகளை உயர்நிலைச் சக்திகளாக உருமாற்றமடையச் செய்ய முடியும்.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**



# அதிசய உலகம்

**உயிருடன் இருப்பதை விட இவன் செத்துப் போகலாம்: தாயின் குமுறல்...**

இந்தியாவில் மத்தியப் பிரதேசத்தை சேர்ந்த முகேஷ் அஹிர்வார்- சுமித்ரா அஹிர்வாரின் மகன் மஹேந்திரா அஹிர்வாருக்கு தற்போது 12 வயது ஆகின்றது. பிறவியிலேயே முதுகெலும்பு பாதிப்புடன் பிறந்ததால் மஹேந்திராவின் கழுத்தும் தலையும் தோள்பட்டையை ஒட்டி நிற்காமல் 180 டிகிரி கோணத்தில் தொங்கி விடுகின்றது.


இதனால் நிற்கவோ, நடக்கவோ முடியாமல் தொங்கிய தலையுடன் மெதுவாக தவழ்ந்து மட்டுமே செல்லும் இவனது நிலையை மாற்ற கூலித்தொழிலாளிகளான மஹேந்திராவின் பெற்றோர் சுமார் 50 இற்கும் மேற்பட்ட டாக்டர்களிடம் சிகிச்சை அளித்தும் முன்னேற்றம் காணப்படவில்லை.

குளிப்பது, உணவு உண்பது, கழிப்பறைக்கு செல்வது உள்பட அனைத்து தேவைகளுக்கு தாயார் சுமித்ராவின் உதவியை நாடி ஒரு குழந்தையைப் போல் வீட்டில் வளையவரும் மஹேந்திரா படும் அவஸ்தை அக்கம்பக்கத்தில் உள்ள சில பிள்ளைகளுக்கு கேலிப் பொருளாகிவிட்டுள்ளது.




அதுமட்டுமின்றி, பெற்றவர்கள் செய்த பாவம் தான் பிள்ளைக்கு இந்த நோய் வடிவில் வந்து தாக்கியுள்ளது என்று ஊராரும, உறவினர்களும் கூறும் வேளையில் ஈட்டி முனையை விட கூர்மையாக தாக்கும் இந்த வார்த்தைகள் முகேஷ அஹிர்வார்- சுமித்ரா அஹிர்வார் தம்பதியரை ரத்தக் கண்ணீர் வடிக்க வைக்கின்றது.

இந்தியாவிலேயே மிகப்பெரிய மருத்துவ மனையான டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில அனுமதித்து சுமார் 2 வார காலம் பல பரிசோதனைகள் செய்து பார்த்தும் மஹேந்திராவுக்கு என்ன சிகிச்சை அளித்து, எப்படி குணப்படுத்துவது? என்பது தெரியாமல் டாக்டர்கள் குழம்பிப்போய் உள்ளனர். வயதாக, ஆக மஹேந்திராவின் எடையும் அதிகரித்துக்கொண்டே வருவதால் அவனை தூக்கிக்கொண்டு திரிய முடியாத நிலையில் இருக்கும் சுமித்ரா வேதனை அடைந்துள்ளார். டாக்டர்களால் அவனை குணப்படுத்த முடியவில்லை என்றால, கடவுள் அவனை அழைத்துக்கொள்ளட்டும். எங்கள் கண் எதிரில் அவன் அவதிப்படுவதை பார்த்துக்கொண்டிருக்க எங்களால் இயலவில்லை என அவர் கண்ணீர் மல்க கூறுகிறார்.



# சமைப்போம் சுவைப்போம்

## தேங்காய்ப் பால் கேக்



**தே.பொருட்கள்:**

பால்-750 மில்லி

தேங்காய்-1

சர்க்கரை-1/2 கிலோ

சர்க்கரை- 11/2 கிலோ,

நெய்- 50 கிராம்

பாதாம் பருப்பு, முந்திரி தலா 20,

வென்னிலா எசன்ஸ்-2 தேக்கரண்டி.

**செய்முறை**

முந்திரி, பாதாம் பருப்பை சிறிது நெய்யில் வறுத்து, நொறுக்கி வைக்கவும். தேங்காயை துருவிக் கொள்ளவும். பாலை பாத்திரத்தில் ஊற்றி, பாதி அளவாகும் வரை காய்ச்சவும். அதில், தேங்காய்த் துருவல், சர்க்கரை சேர்த்து கிளறவும். கெட்டிப்பதம் வந்ததும் எசன்ஸ், மீதி நெய் சேர்த்து கிளறுங்கள் கலவை நன்கு சுருண்டு வரும்போது இறக்கி, நெய் தடவி தாம்பாளத்தில் கொட்டி சமமாக பரப்பவும்.

அதன்மீது நொறுக்கிய பாதாம், முந்திரியை தூவி நன்கு அழுத்தி விடுங்கள் சற்று நேரம் கழித்து, துண்டு போட்டு சாப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுதல் நிறுவன ஆளணியினர் தேவை

**ஆய்வு உதவியாளர்கள் தேவை**

சிறுவர் உரிமையும் பாதுகாப்பும் குடும்ப வன்முறை, அதீத குடிப் பழக்கம், இளைஞர் எதிர்காலம், கல்விப் பெறுபேறு ஆகியவை தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்வதற்குப் பொருத்தமான ஆய்வு உதவியாளர்களாகப் பணியாற்றத் தகுதியுடையோர் கல்வித் தகைமை, திறமை, அனுபவம், விருப்பம் என்பவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பியுங்கள்.

**குரல்வளம் மிக்கவர் தேவை**

பாடு பாப்பா சிறுவர் பாடல்கள் இறுவெட்டு தயாரிப்பதற்காகக் குரல் வளம் மிக்க முன்பள்ளி ஆசிரியர்கள் தங்கள் திறமை, தகுதி என்பவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பியுங்கள்.

**உளவள சமூக நல சேவையாளர் தேவை**

உளவள சமூக நல சேவையாளர்களாகப் பணியாற்றத் தகுதியும் அனுபவமும் உடையோர் தகைமைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பியுங்கள்.

**ஆளணியினர் தேவை**

நிறுவன முயற்சிகளை முன்னெடுக்கப் பொருத்தமான ஆளணியினரைத் தெரிவு செய்வதற்காக க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானம் அல்லது கணிதம் பிரிவில் தோற்றி மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தகுதியும் திறமையும் உடையோர் விண்ணப்பியுங்கள்.

**தேவையைக் குறிப்பிட்டு தனித்தனியாக விண்ணப்பியுங்கள்.**
**விண்ணப்ப முடிவுத் திகதி: 30.04.2015**
**முகவரி: ஆறுதல் நிறுவனம் ,**
**51, வைமன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 31 செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: வைத்தியர்<br>தொ.இ: B/580 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 21 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/1027 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 35 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ அரச தொழில்<br>தொ.இ: B/584 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 36 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: G/1034 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 14 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/594 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 41 செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: G/1038 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 12<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் O/L சுவிஸ் PR<br>தொ.இ: B/595 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 47 செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/1042 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## மகிந்த விடயத்தில் கவனமாக செயற்பட்டிருக்க வேண்டுமாம்

### பிரதியமைச்சர் வசந்த அட்வைஸ்

முன்னாள் ஜனாதிபதியை இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணை க்குழுவிற்கு அழைக்கும் விடயத்தில் மிகவும் கவனமாக செயற்பட்டிருக்கலாம் என பிரதியமைச்சர் வசந்த சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி போன்ற முக்கியமான நபர்களை இலஞ்ச ஆணைக்குழுவிற்கு அழைக்கும் போது உறுதிப்படுத்தக்கூடிய சாட்சியங்கள் இருக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பழிவாங்கும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தால், அதனை தாம் ஏற்றுக்கொள்ள போவதில்லை எனவும் வசந்த சேனாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-5)

## அரச வைத்தியர்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரிப்பு

அரசாங்க வைத்தியர்களுக்கான மாதாந்த மேலதிக கொடுப்பனவு இம்மாதம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. இக்கொடுப்பனவு இம்மாதம் முதல் 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என சுகாதார சுதேச வைத்திய அமைச்சு உத்தியோகபூர்வ அறிவித்தலை விடுத்துள்ளது.

அமைச்சின் செயலாளர் ஆர்.பி. திஸாநாயக்கவின் கையொப்பமிடப்பட்ட சுற்றறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கையின்படி இம்மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாவுடன் வைத்தியர்களுக்கான மொத்த மேலதிக கொடுப்பனவு 35 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


வாழ்க்கையில் வெறுப்பா?
பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
(C-478)
கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776

எமது வைத்திய நிலையத்தில் மீண்டும் வழமைபோல் எலும்பு முறிவு,நெறிவு (ORTHOEDIC) கிளினிக் நடைபெறுகின்றது.
077 873 0129


# INVITATION FOR BID (IFB)
# MINISTRY OF LOCAL GOVERNMENT AND PROVINCIAL COUNCILS
# ZONAL EDUCATION OFFICE, THUNUKKAI
# NORTHERN PROVINCIAL COUNCIL

**Transforming the School Education System as the Foundation of a Knowledge Hub Project (TSEP)**
**Credit No :- 5037-LK**
**Construction of Building**

**1.**The Democratic Socialist Republic of Sri Lanka has received a credit from the **International Development Association (IDA) and Australian Aid** toward the cost of **Transforming the School Education System as the Foundation of a Knowledge Hub Project (TSEP)**, and it intends to apply part of the proceeds of this credit to payments for the Construction works listed in the table below.

**2.**The Chairman, **Regional Procurement Committee** on **behalf of the Zonal Education Office, Thunukkai** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works listed in the table below.

**3.**To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for the Grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).

**4.**Qualifications requirements are indicated in Section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5).

**5.**Interested bidders may obtain further information from the addresses given below in paragraph 6 for respectively and inspect the bidding documents at the same place on any working days from 9.00 hrs to 16.00 hrs

**6.**A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the below mentioned address **from 22-Apr-2015** until **13-May-2015** from 9.00 hrs to 15.00 hrs on working days upon payment of a non – refundable fees of **Rs. 2,500.00.** The method of payment should be by cash.

School Works Branch, Zonal Education Office, **Thunukkai** (T.No: **0212060031**, Fax: **0212060030**)

**7.**Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Zonal Education Office, Thunukkai on or before 13.00 hrs on 14-May-2015** Late Bids will be rejected. Bidders must write Bid ID on left hand upper corner of envelop for each. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

**8.**Pre bid meeting will be held at the **Zonal Education Office, Thunukkai on 30-Apr-2015** at **10.00 hrs**

**9.**Bid shall be valid up to **30-Jul-2015**.

**10.**Bids shall be accompanied by a Bid Security as per the information given in the table.

**11.**Each package will be evaluated separately and accordingly substantially responsive lowest evaluated bidder will be selected for award.

| Bid No | Description of Work | Estimated Cost (Rs. In Millions) | Contract Period( Days ) | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Till |
| TSEP/NP/DSW /W/2015/68 | Renovation of Classroom Building at Mu/Siraddikulam G.T.M.S | 5.08 | 120 | C7 or above (Buildings) | 64,000.00 | 27.08.2015 |

**The Chairman,**
**Regional Procurement Committee,**
**Zonal Education Office, Thunukkai.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச அபிவிருத்திகோரி

# கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**இந்திய ரோலர்களின் அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்துவதோடு கடற்றொழில் உபகரணங்கள் சூறையாடப்படுவதைத் தடுக்கக் கோருதல் உள்ளிட்ட 10 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இன்று முற்பகல் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக வடமராட்சி கிழக்கு மக்கள் அமைப்புக்களின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

நாட்டில் எமது மாவட்டத்தில் பல்வேறு பகுதிகள் காபெற், கொங்றீற் வீதிகள் போடப்பட்டு அதி சொகுசு வாகனங்கள் பயணிக்கின்ற நிலையில் யுத்தத்தாலும், சுனாமியாலும் முழுமையாக பாதிக்கப்பட்டு உயிர், சொத்துக்களை இழந்த நிலையில் 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட எமது வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இப்போதும் குன்றும் குழியுமாகவும், தூசிகள், சேறுகள் படிந்த பாதையினால்தான் பயணங்களைத் தொடர்கின்றோம். பிற பிரதேசங்களோடு ஒப்பிடும் போது எமது பிரதேசம் அபிவிருத்திகளில் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுவதாக உணர்கின்றோம்.

இந் நிலையில் எமது பிரதேச அபிவிருத்தி புறக்கணிக்கப்படுவது தொடர்பாக நாம் சம்பந்தப்பட்டவர்களிடம் நேரடியாகவும், கடிதங்கள் மூலமும், பல்வேறு வழிகளிலும் பல்வேறு கோரிக்கைகளை விடுத்திருந்தோம். அவை எவையும முழுமையாக 5 வருடங்கள் கடந்தும் நிறைவேற்றப்படவில்லை.

இவை தொடர்பில் மத்திய அரசு, மாகாண அரசு, உள்ளூராட்சிமன்றம் என்பன அசமந்தப் போக்கில் செயற்படுவதாக நாம் உணர்கின்றோம். மேலும் எமது வடமராட்சி கிழக்கிலிருந்து அருகி வருகின்ற வளங்களான கனிய மணல், குடிநீர் என்பனவும் பல வருடங்களாக மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கும் வழங்கி வருகின்றோம். எமது பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் பிறருக்காக உதவிகளை வழங்குகின்றவர்களாகவே இருக்கின்றது. அபிவிருத்தியில் பின் தள்ளப்பட்டவர்களாகவே இருக்கின்றனர்.

எனவே

1.வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்கென தனியான பிரதேசசபை ஒன்றினை உருவாக்குதல்.

2.நகரங்களை இணைக்கும் பிரதான வீதிகள், உள்ளக வீதிகளை அமைத்துத்தரக் கோருதல்.

3.வீட்டு வசதிகள் வழங்கப்படாத குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கக் கோருதல்.

4.பிரதேச வளங்கள் சூறையாடுதலை கட்டுப்படுத்தி சூறையாடப்பட்ட இடங்களில் வளப்பாதுகாப்பிற்காக மரங்களை நாட்டுதல்.

5.வேலையற்றிருக்கும் வடமராட்சி கிழக்கு இளைஞர், யுவதிகளுக்காக தொழிற்சாலைகள் அமைத்து தொழில் வழங்குதல்.

6.எமது பிரதேச கடல் வளங்களை ஆக்கிரமிக்கும் தென்பகுதி மீனவர்களின் நடவடிக்கைகளை தடுக்கக் கோருதல்.

7.இந்திய ரோலர்களின் அத்துமீறல்கள், கடற்றொழில் உபகரணங்கள் சூறையாடப்படுவதைத் தடுக்கக் கோருதலும், மீனவர்கள் தாக்கப்படுவதை கண்டித்தலும்.

8.தற்போது மீன்பிடித் தொழிலில் போதிய வருமானம் ஈட்ட முடியாததனால் அம்மக்களிற்கு நிவாரணம் வழங்கக் கோருதல்.

9.பனை தென்னை வள உற்பத்தியாளர்களது நலன்கருதி ஒரு வெல்ல உற்பத்தி நிலையத்தை நிறுவக்கோருதல்.

10.விவசாயிகளின் உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக மானியங்கள், சலுகைகளை வழங்கக்கோருதல்

உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இன்று முற்பகல் 10 மணி முதல் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்றிலில் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## எந்தவிதமான தொடர்புமில்லை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் இன்று நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்திற்கும் தமக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி அமைப்பு அறிவித்துள்ளது.

இன்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்னால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆர்ப்பாட்டத்திற்கும் தமக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி அமைப்பின் தலைவர் அ.சா.அரியகுமார் அறிவித்துள்ளார்.

மேலும் எமது பிரதேசத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன.

அவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக வடக்கு மாகாண முதலமைச்சருடனும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் கலந்துரையாட தீர்மானித்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## ஆசிரிய கலாசாலையில் ஆங்கில தினவிழா

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆங்கில மன்றம் நடத்தும் ஆங்கில தின விழா நாளை மறுதினம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலையின் ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆங்கில மன்றத் தலைவர் தா.சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கு. வர்ணகுலராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## யாழ். நகரில் 80 வீதமான நடைபாதை வியாபார நிலையங்கள் அகற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நிரந்தர வியாபார நிலையங்களுக்கு இடையூறாக இருந்த 80 வீதமான நடைபாதை வியாபார நிலையங்கள் அகற்றப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் செ. பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். நகரில் உள்ள நடைபாதை வியாபார நிலையங்கள் தமக்கு இடையூறாக இருப்பதாகவும் அவற்றை அகற்ற வேண்டும் எனவும் யாழ். நகரிலுள்ள நிரந்தர வியாபாரிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

வியாபாரிகளின் இக் கோரிக்கைக்கு இணங்க நடைபாதை வியாபார நிலையங்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து நடைபாதை வியாபாரத்தால் இடையூறு விளைவிக்கும் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் கோவில் அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் 20 ஆம் திகதி ஆரம்பமான அதேவேளை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை உற்சவம் இடம்பெறவுள்ளது. (இ

## இரண்டில் ஒன்று அகற்றப்படும்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சில வீதிகளில் ஒரு மின் கம்பத்தில் இரண்டு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

மின் விளக்குகள் பொருத்தப்படாமல் பல வீதிகள் இருக்கும் பட்சத்தில் இரண்டு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளமை தொடர்பாக யாழ். மாநகர சபை ஆணையாளர் செ. பிரணவநாதனை தொடர்பு கொண்டு கேட்ட போது,

யாழ். மாநகர சபையால் பொருத்தப்பட்ட மின் விளக்குகள் இருந்த மின் கம்பங்களில் இலங்கை மின்சார சபையால் 1000 மின் விளக்குகள் பொருத்தும் திட்டத்தில் சில வீதிகளில் இரண்டு மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன. விரைவில் இரண்டு மின் விளக்குகள் பெருத்தப்பட்டுள்ள மின் கம்பங்களில் இருந்து ஒரு மின்விளக்கு அகற்றப்பட்டு மின் விளக்கு இல்லாத வீதிகளுக்கு பொருத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## ஏழிசை மாலையின் 6-வது இசைநிகழ்ச்சி

தென்மராட்சி கல்வி வலயத்தின் முதன்மை ஆசிரியர் மற்றும் இசை ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து நடத்தும் ஏழிசை மாலை மாதாந்த இசை நிகழ்ச்சியின் ஆறாவது நிகழ்ச்சி நாளை மறுதினம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளதோடு சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி. அஞ்சலிதேவி சாந்தசீலன், முல்லைத்தீவு கல்வி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. உதயராணி முனீஸ்வரன் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இனத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. கிருபாசக்தி சுகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ




## இளைஞர்சங்கம் நடத்தும் போட்டிகள் ஞாயிறன்று

அரியாலை ஸ்ரீஞானவைரவர் கோவில் அலங்கார உற்சவத்தை முன்னிட்டு அரியாலை ஸ்ரீஞானவைரவர் கோவில் இளைஞர் சங்கம் நடத்தும் திருமுறை மனனப் போட்டி,சமய அறிவுப்போட்டி மற்றும் பண்ணிசைப்போட்டி என்பன நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் யாவும் எதிர்வரும் 26 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணிக்கு அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தில் ஆரம்பமாகும்.

சமய அறிவுப்போட்டிக்கான வினாக்கொத்து உட்பட போட்டி பற்றிய விபரங்கள் ஆலய மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு எனும் மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.

திருமுறை மனனப்போட்டி மற்றும் சமய அறிவுப்போட்டிக்கு ஒவ்வொரு பிரிவிலும் 35இற்கு மேல் புள்ளிகள் பெற்ற முதல் 10 இடங்களுக்குப் பரிசு வழங்கப்படும். பண்ணிசைப் போட்டிக்கு முதல் 3 இடங்களுக்குப் பரிசு வழங்கப்படும்.

பரிசில்கள் யாவும் எதிர்வரும் முதலாம் திகதி (வெள்ளிக்கிழமை) வைரவர் சாந்தி அன்று இரவு 7 மணிக்கு வழங்கப்படும் என அரியாலை ஸ்ரீஞானவைரவர் கோவில் இளைஞர் சங்கம் அறிவித்துள்ளது. (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம் வெளிநாட்டுக்கு விஜயம்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஸி டயஸ் வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி அவர் இவ்வாறு வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை இன்று 22 ஆம் திகதி அவர் நாடு திரும்புவார் என ஆணைக்குழுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தை, நாடாளுமன்ற செயலாளர் நாயகம் நேற்று முன்தினம் நாடாளுமன்றிற்கு சமுக



மளிக்கமாறு அழைத்திருந்தார்.

எனினும், அவர் வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்ட காரணத்தினால் ஆணைக்குழுவின் தலைவரே சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை சந்தித்தார் என தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

வடமராட்சி வலயத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய அதிபர் பதவி தரம்II க்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கீழ் வரும் தகைமையுடைய அதிபர், ஆசிரியர்கள் குறித்த பாடசாலைகளுக்கான அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரி பின்வரும் தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும். 1.இலங்கை அதிபர் சேவையில் தரம்2-II ற்கு மேற்பட்ட தரமுடையவர்கள் அல்லது இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 2-I ற்கு மேற்பட்ட தரமுடையவர்களும்,

2.இலங்கை அதிபர் சேவையிலுள்ள அதிபர் கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.(இவர்களுக்கு பிரிவு 4 பொருத்தமாகாது.)

3.வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

4.விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக்குறைந்து மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.

5.விண்ணப்பதாரி ஆக்க்குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

6. இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களது பொருத்தமான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத பட்சத்தில் மாத்திரம் ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 04.05.2015.

8.விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்கு தோற்றுதல் வேண்டும். தேவையேற்படின் எழுத்துப் பரீட்சைக்கும் தோற்றுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாகப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் அறிவித்துள்ளார். (இ-3)

## உள்நாட்டுப் போர் தீவிரம்

# ஏமனை நோக்கி பயணித்த அமெரிக்க போர்க் கப்பல்!

(ஏடன்)

**ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு உதவும் ஈரானுக்கு எதிராக விமானம் தாங்கிய அமெரிக்க போர்க் கப்பல் புறப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.**

ஏமனில் ஜனாதிபதி ஹவுதி ஆதரவு படைகளை எதிர்த்து ஈரானின் ஆதரவோடு ஷியாப் பிரிவு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சண்டையிட்டு அந்நாட்டில் முன்னேறி வருகின்றனர். பல நகரங்களை அவர்கள் தங்கள் வசம் வைத்துள்ளனர்.

ஈரானைத் தவிர இவர்களுக்கு ஏமன் முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லா சலே ஆதரவு படையும் சண்டையில் ஈடுபடுகின்றனர்.

ஏமன் அரசுக்கு ஆதரவாக சன்னி பிரிவு மக்கள் அதிகம் நிறைந்த சவுதி அரேபியா தலைமையில் வளைகுடா நாடுகளின் படைகள் போர் நடத்தி வருகின்றன.

கடந்த மாதம் 26 ஆம் திகதியில் நடந்து வரும் கடுமையான போரில் இதுவரை சுமார் 700 பேர் பலியாகி உள்ளனர்.

சுமார் 3 ஆயிரம் பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அந்த நாட்டின் பெரும்பகுதி மக்கள் இடம் பெயர்ந்துவிட்டனர்.

நிலைமையை மோசமாக்கி வரும் ஹவுதிகளுக்கு ஈரான் ஆதரவு அளிப்பதை பல நாடுகள் கண்டித்துள்ளன.

அமெரிக்கா இதற்காக தொடர்ந்து ஈரானை எதிர்த்து வந்த நிலையில், அமெரிக்காவின் இரண்டு போர்க் கப்பல்கள் ஏமன் நாட்டை நோக்கி விரைந்து வந்துகொண்டிருப்பதாக அமெரிக்க பெண்டகன் அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.

சவுதி அரேபிய படைகள் நடத்தும் போருக்கு அமெரிக்கா ஆதரவாக இருக்கும் நிலையில் அவர்களுக்கு நேரடி உதவியை அமெரிக்கா இதுவரை வழங்கவில்லை.

தடை செய்யப்பட்ட ஆயுதங்களை ஈரான் அரசு ஹவுதி படைகளுக்கு வழங்கி வருவதை கண்காணிக்கும் விதமாக தற்போது அமெரிக்கா தனது அதிநவீன இரண்டு போர்க் கப்பல்களை ஏமனுக்கு அனுப்பியுள்ளது.

இதன் மூலம் இந்த விவகாரத்தில் ஈரானை மட்டும் நேரடியாக அமெரிக்கா எதிர்க்க முற்பட்டுள்ளது.

யு.எஸ்.எஸ். தியோடர் ரூஸ்வெல்ட் என்ற அந்த அமெரிக்க போர்க் கப்பல் ஏமன் கடற்பகுதியில் நிறுத்தப்பட்டு, ஆயுதங்களை ஏற்றி வரும் ஈரான் கப்பல்களை நிறுத்தும் என்று கூறப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க பாதுகாப்புத்துறை அதிகாரி கேர்னல் ஸ்டீவ் வாரன் கூறும்போது, ஏமன் கடலை நோக்கி தியோடர் ரூஸ்வெல்ட் புறப்பட்டது.

ஏடன் துறைமுகத்துக்கு நுழையும் ஈரான் கப்பல்களை கண்காணித்து தடுத்து நிறுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மத்திய தரைக்கடல் படகு விபத்து மீட்கப்பட்ட உடல்கள் மால்டாவுக்கு

(ரோம்)



லிபியா கடற்கரைக்கு அருகே மத்திய தரைக் கடலில் படகு கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் உடலகள் நேற்று முன்தினம் மால்டா நாட்டுக்கு மீட்டுக் கொண்டு வரப்பட்டன.

கடந்த சனிக்கிழமை சுமார் 700 பயணிகளை ஏற்றிக்கொண்டு மத்திய தரைக்கடல் வழியாகச் சென்றுகொண்டிருந்த ஒரு படகு, லிபியா கடற்கரைக்கு அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

அந்தப் பகுதியில் அப்போது அங்கு பயணித்துக் கொண்டிருந்த சரக்குக் கப்பல் ஒன்றைப் பார்ப்பதற்காக, பல பயணிகள் படகின் ஒரு பக்கத்துக்குச் சென்றனர்.

அதன் காரணமாக சமநிலை இழந்த படகு கவிழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த விபத்தில் இதுவரை 28 பேரை இத்தாலிய கடலோர காவற்படை உயிருடன் மீட்டுள்ளது. இவர்கள் அனைவரும் மால்டாவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளார்கள்.

சில நாட்களுக்குப் பின்னர் இவர்கள் இத்தாலிக்கு கொண்டு செல்லப்படுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும்24 உடல்களையும்இத்தாலிய கடலோர காவற்படை மீட்டுள்ளது. (இ-5)

## சீனா - பாகிஸ்தானுக்கிடையே 51 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

சீனா - பாகிஸ்தான் இடையே பாதுகாப்பு, வர்த்தகம், எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 51 ஒப்பந்தங்கள் நேற்று முன்தினம் கையெழுத்தாகின.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் பிரதமர் நவாஸ் ஷெரீப், சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

பாகிஸ்தானின் குவாதர் துறைமுகத்தையும் சீனாவின் மேற்குப் பகுதியையும் இணைக்கும் 3,000 கி.மீ. நீளமுள்ள சீனா-பாகிஸ்தான் பொருளாதாரப் பணியை முறைப்படி ஜீ ஜின்பிங் தொடங்கி வைத்தார்.

இது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் வழியாக அமைக்கப்படுகிறது. 3 ஆண்டுகளில் இது அமைக்கப்படும்.

முன்னதாக, காலையில் சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங், அவரது மனைவி பெங் லியுவான் சிறப்பு விமானம் மூலம் ராவல்பிண்டி விமானப் படை விமான தளத்தில் வந்திறங்கினர்.

பாகிஸ்தான் ஜனாதிபதி மம்னூன் ஹுசேன், பிரதமர் நவாஸ் ஷெரீப், இராணுவத் தலைமைத் தளபதி ரஹீல் ஷெரீப், மத்திய அமைச்சர்கள் விமான தளத்துக்கு நேரில் சென்று சீன ஜனாதிபதியை வரவேற்றனர்.

இரு நாடுகளிடையே, எரிசக்தி, பாதுகாப்பு, பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில், 50 பில்லியன் டொலர் மதிப்பிலான புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இராணுவத் தளபாடங்கள் வழங்குவது குறித்தும் ஒப்பந்தம் ஏற்பட்டது.

சீன ஜனாதிபதியின் பாகிஸ்தான் பயணம் பல்வேறு முறை ஒத்திவைக்கப்பட்டது. தற்போது இரு நாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.


இந்த ஆண்டு அவர் மேற் கொள்ளும் முதல் வெளிநாட்டுப் பயணம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக, சீன ஜனாதிபதியின் சிறப்பு விமானம், பாகிஸ்தான் வான் எல்லைக்குள் பிரவேசித்ததும், அதற்கு வழித்துணையாக பாகிஸ்தானின் ஜேஎஃப்-17 தண்டர் ஜெட் போர் விமானங்கள் உடன் பறந்து வந்தன.

ஜேஎஃப்-17 தண்டர் ஜெட் போர் விமானங்கள், சீனாவின் உதவியுடன் பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்டவை.

பாகிஸ்தானின் மிக உயரிய விருதான "நிஷான்-ஏ-பாகிஸ்தான்", ஜீ ஜின்பிங்குக்கு வழங்கப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்சத்தை பல்வேறு பரிமாணங்களில் சிந்தித்த அல்பேர்ட் ஐன்ஸ்டீன்



கடந்த 2005ஆம் ஆண்டை உலக பௌதீக ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபையும் உலக தூய பிரயோக பௌதீக சம்மேளனமும் இணைந்து பிரகடனம் செய்தன. இப்பிரகடனம் 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. அதன் மூலகர்த்தாவாக இருப்பவர் மாபெரும் விஞ்ஞானியான அல்பேர்ட் ஐன்ஸ்டீன் ஆவார். பௌதீகவியல் என்பது இயற்கையின் பௌதீக பொருட்களை ஆராய்கின்ற விஞ்ஞானமாகும். குறிப்பாக பௌதீக இயக்கம் ஒளி, ஒலி, மின், வெப்பம், காந்தம் போன்ற சக்தி வகைகளையே ஆராய்கின்றது. பௌதீகவியலின் செல்வாக்கு அருகிவருகின்ற இக்காலப்பகுதியில் அதனை உயரச் செய்யவேண்டுமாயின் இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன் உயிர்நீத்த அல்பேர்ட் ஐன்ஸ்டீனை நினைத்துப் பார்க்க வேண்டும். பௌதீகவியலுக்கு தங்களை அர்ப்பணித்த கலிலியோ கலிலி, கெப்லர், நியூட்டன், மார்க்ஸ்வெல் வரிசையில் இவரும் புரட்சிகரமான விஞ்ஞானி யாவார்.

உலக வரலாற்றில் 1905 ஆம் ஆண்டு மிக முக்கியமான ஆண்டாகும். இவ்வாண்டிலேதான் அமெரிக்காவின் ரைட் சகோதரர்கள் முதன்முதலாக பறக்கும் விமானத்தை வடிவமைத்தார்கள். 1905 ரஷ்யாவிலே புரட்சிகரமான ஆண்டாக கருதப்பட்டது. இவ்வாண்டிலேதான் ஐன்ஸ்டீன் அவர்களும் உலகத்தை உலுக்கிய ஐந்து கட்டுரைகளை வரைந்தார். சேர் ஐசாக் நியூட்டன் நவீன விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுகின்றார். ஆனால் ஐன்ஸ்டீனோ புரட்சிகர விஞ்ஞானத்தின் தந்தையாக பலராலும் வர்ணிக்கப்படுகின்றார்.

இவர் 1879 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி ஜேர்மன் நாட்டிலே உல்ப் என்னும் இடத்திலே பிறந்தார். தனது கல்வியை ஜேர்மனின் முனிச் நகர ஜிம்னாசியத்திலும் பின்னர் உயர் கல்வியை சுவிட்சர்லாந்தின் சூரிச் (Zurich) சமஷ்டி தொழில் நுட்பவியல் நிறுவகத்திலும் மேற்கொண்டார். பின்னர் வேலை தேடும் படலத்தை மேற்கொண்ட ஐன்ஸ்டீன் தொண்டராசிரியராகவும் சூரிச் ஆவணக்காப்பகத்தில் தொழில்நுட்பவியல் நிபுணராகவும் தொழில்புரிந்தார். இந் நேரத்தில் ஆய்வுக்கட்டுரைகளை வாசித்து ஆராய்ச்சி செய்தார். சார்பு இயல் ஒளியின் விளைவு, பிரெளனியின் இயக்கம் மூலக்கூற்று விசைகள், ஒளியின் உற்பத்தி நிலைமாற்றம் சம்பந்தப்பட்ட ஒரு நாடியறிமுறை என்னும் தலைப்புக்களில் ஐந்துகட்டுரைகளை வரைந்து ஜேர்மன் விஞ்ஞானசஞ்சிகையில் வெளியிட்டார்.

கணிதவியல் நேர்கோடுகளை வரைகின்றோம். ஆனால் ஐன்ஸ்டீன் சிந்தனையின்படி எல்லாம் வரைகோடுகளேயாகும். தரம் 10, 11 மாணவர்கள் நேர்கோட்டு இயக்கம் பற்றிய சேர் ஐசாக் நியூட்னின் 3 விதிகளைக் கற்கின்றார்கள். அதில் இரண்டாவது விதி P=mf என்னும் சமன் பாட்டின் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது. இதில் வேகம் அதிகரித்துச் செல்லும்போது திணிவு M இல் மாற்றம் ஏற்படும் என ஐன்ஸ் டீன் விளக்குகிறார். பிரபஞ்சத்தில் ஒளியின் வேகத்தை எந்தப் பொருளும் மிஞ்சாது. பிரபஞ்ச இயக்கத்தில் ஒளியின் வேகம் ஒரு மாறிலியாகும்.

அடுத்து திணிவுக்கும் சக்திக்கும் இடையேயான தொடர்பை அழகாக விளக்குகின்றார். ஒரு திணிவின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க அது சக்தியாக மாறுகின்றது. இவ்வாறு பொருளொன்று சக்தியாக மாறுவதையும் சக்தி பொருளாக மாறுவதையும் விளக்குகின்றார். அணுவொன்றிலிருந்து வெளியேறும் சக்தியை அளவிடுவதற்கு $E=MC^2$ என்னும் கணித சூத்திரத்தை கண்டுபிடித்துத் தந்த பெருமை ஐன்ஸ்டீனையே சாரும். அதாவது M திணிவுடைய அணுவொன்றிலிருந்து வெளியேறும் சக்தியானது அத்திணிவை ஒளியின் வர்க்கத்தால் பெருக்குவதற்கு சமனாகும். விஞ்ஞானத்திலே கண்டுபிடிப்புக்கள் உய்த்தறிமுறை, தொகுத்தறிமுறை இரண்டும் கலந்த விஞ்ஞானமுறை என்பவற்றின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றது. அல்பேர்ட் ஐன்ஸ்டீனைப் பொறுத்தவரை உள்ளுணர்வுமூலம் பகுத்தறிமுறைமூலம் எளிமையாக தனது சிந்தனைகளை வெளிப்படுத்தினார். பின்னால் வந்த விஞ்ஞானிகள் பரிசோதனைமூலம் இவ்விதிகளை மெய்ப்பித்தார்கள். இதனால் அவருக்கு நோபல் பரிசு வழங்கி உலகம் கௌரவித்தது.

எனவே அல்பேர்ட் ஐன்ஸ்டீனின் 60 ஆவது நினைவுதினத்தில் அவரின் பௌதீகவியல் விதிகளை மாத்திரமல்ல அவரின் குணவியல்புகளையும் நாம் கற்கவேண்டும். அவர் ஜேர்மன் நாட்டிலே ஜிம்னாசியத்தில் கற்றபோது ஆசிரியர்களின் அணுகுமுறை அவருக்குப் பிடிக்கவில்லை. இதனால் ஒருசில ஆண்டுகள் பாடசாலைப் படிப்பை இடை நிறுத்தினார். சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் பாடசாலைப் படிப்பு அவருக்கு உகந்ததாக அமைந்தது. பாடசாலைப் படிப்பில் கணிதம், பௌதீகவியல் ஆகிய பாடங்களில் உயர் புள்ளிகளைப் பெற்றார். பின்னர் சூரிச் பெடரல் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் பட்டம் பெற்ற இவர் பல சாதனைகளைப் படைத்தார். இதனையடுத்து ஜேர்மனியிலுள்ள பராக் பல்கலைக்கழகம், பெர்லின் பல்கலைக்கழகம் என்பவற்றில் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

அப்போது ஹிட்லர் (Hitlor) யூதர்களுக்கு எதிரான வன்முறைகளை மேற்கொண்டு 60 இலட்சம் யூதர்களையும் கொன்றொழித்தார். இவரது நாஜிக்கட்சி 1936களில் ஆட்சியைக் கைப்பற்றி பல கொடுமைகளை இழைத்தது. அப்போது ஹிட்லரின் இனவாதத்திற்கும் வன்முறைகளுக்கு எதிராகவும் சமாதானத்தையும் மனிதாபிமானத்தையும் வலியுறுத்தி ஊர்வலம் நடத்தினார். ஹிட்லரின் பயங்கரவாதத்திலிருந்து தப்பித்து ஐக்கிய அமெரிக்க நாட்டிற்குச் சென்று பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அந்நாட்களில் அணுசக்தி தொடர்பான பரிசோதனைகளில் ஈடுபட்டார். இவர் அஹிம்சாவாதியாக, சமாதானவிரும்பியாக வாழ்ந்தார். இந்திய விடுதலைப் போராட்டத்தின் தலைவரும் வழிகாட்டியுமான மகாத்மாகாந்தி அடிகளை நேசித்தார். இந்த உலகத்தில் காந்தியடிகளைப் போன்று ஒரு மனிதர் வாழ்ந்தாரா? என எதிர்காலச் சந்ததியினர் ஐயுறுவர் என ஒரு சந்தர்ப்பத்தில் ஐன்ஸ்டீன் கூறினார். இவர் இயற்கை நேயமுள்ள கலைஞருமாவார். பியானோ வாசிப்பதில் தேர்ச்சியுள்ளவராக இருந்தார். 1879 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி பிறந்த அவரது 100 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 1979களில் மக்கள் சீனக்குடியரசிலும் அவரது பௌதீகவியற் கோட்பாடுகள் புத்தூக்கத்துடன் போதிக்கப்பட்டன. ஐன்ஸ்டீன் கோட்பாடுகளின் கருமூலம் ஒளி நொடிக்கு 300,000 கிலோமீற்றர் அல்லது 186,284 மைல் தொலைவேகத்தில் செல்கின்றது என்று அறிவியல் அறிஞர்கள் கணித்துள்ளனர். அது நிலவுலகின் இயக்க வேகத்தால் மாறுபடவில்லையென்று மைக்கேல்சன் மாறிலியின் ஆராய்ச்சி காட்டியுள்ளது. இதிலிருந்து அவர் தம் பாரிய விளக்கத்தை உருவாக்கினார்.

புதிரை விளக்கவந்த புதிரான விசும்பை ஐன்ஸ்டீன் ஒழித்துக்கட்டினார். அதனிலும் சிறந்த விளக்கமாக வாரன்ஸ் குறுக்கத்தை அவர் கையாண்டார். ஆனால் அவ்விளக்கம் வாரன்ஸ்ஸும் வியக்கத்தக்க வகையில் அமைந்தது. ஒளி மட்டுமன்றி இயற்கையில் எல்லா இயக்கங்களுமே எங்கும் ஒரேநிலையில் ஒரேவகையில்தான் நடைபெறுகின்றன. ஆனால் இயங்கு தளங்களின் தொடர்பால் அவை மாறுபாடடைகின்றன. இம்மாறுபாடுகளை வாரன்ஸ் வாய்ப்பாடு விளக்குகின்றது.

நீளம், அகலம், உயரம் என்ற 3 இட அளவைகள் மட்டும் வாரன்ஸ் வாய்ப்பாட்டால் மாறுபடுவதாக ஐன்ஸ்டீன் கொள்ளவில்லை. காலமும் அதேவகையில் மாறுபடும் என்று அவர் துணிந்துரைத்தார்.

**மேலும் கருமூலத்தில் இருந்து கிளைத்த பாரிய கிளைக் கோட்பாடுகள்:**

1. எந்தப் பொருளும் ஒளிவேகத்திற்கு மேல் விரைந்து செல்ல முடியாது. ஏனென்றால் அந்த வேகத்தை எட்டும் பொருள் வேகமாகவே மாறிவிடும்.

2. ஒளிவேகத்தை நோக்கிபொருள் விளையுந்தோறும் பருமன் அளவு குறுகுகிறது. ஆனால் எடைமானம் பெருக்கமுறுகிறது.

3. வேகம் அல்லது ஆற்றல் ஒரு பண்பு. பொருள் மற்றொரு பண்பு அன்று. இரண்டும் ஒன்று என்று ஐன்ஸ்டீன் காட்டினார். அத்துடன் இரண்டு தொலைவையும் ஆற்றலை எடைமானம் ஒளிவேகத்தின் வர்க்கம் என்று காட்டினார். இவ்வாய்ப்பாடு அணுக்குண்டுக்கான தயாரிப்பிற்கு உதவியாய் இருந்தது. அணு ஊழியையும் தொடக்கி வைத்தது.

ஒளிவேகம், வேகத்தின் எல்லை மட்டுமல்ல, பருமன், எடைமானம் ஆகியவற்றின் எல்லையும் அதுவே. ஏனெனில் ஒளிவேகம் மிகுந்தோறும் எடைமானம் மிகுவதால், உச்ச வேகமே உச்ச எடைமானம் ஆகும். ஒளிவேகம் வேகத்தின் எல்லையாதலால், எடைமானத்தின் எல்லையும் அதுவே. வேகம் குறையும்தோறும் பருமன் பெருகுகிறது. வேகத்தின் குறைந்த எல்லை ஒளிவேகத்தின் குறைந்த எல்லையே. ஆகவே பருமன் எல்லையும் ஒளிவேக எல்லையாகவே அமைகின்றது.

இயற்கை எல்லையற்றது என்று ஐன்ஸ்டீன் காலம்வரை மக்களும் கவிஞரும் அறிஞரும் கருதிவந்தனர். எல்லையற்றது என்பதற்கு ஐன்ஸ்டீன் ஒளிவேகம் என்ற பாரிய எல்லையை ஒப்பாக்கினார். இது பொருளின் எல்லைமட்டுமல்ல பொருள் உலகின் எல்லை. அதாவது அண்டங்கள் அடங்கிய இயற்கையின் எல்லையாகும்.

இயற்கை எல்லையற்றது மட்டுமல்ல வடிவமற்றது என்று யாவரும் இதுவரை எண்ணிவந்தனர். இதில் வியப்புக்கு இடமில்லை. ஏனெனில் எல்லையற்ற பொருளுக்கு வடிவமும் இருக்கமுடியாது. ஆனால் ஐன்ஸ்டீன் இயற்கைக்கு எல்லை தந்ததனால் அதற்கு வடிவமும் உருவமும் காணமுடிந்தது.

யூக்கிளிட் காலம்முதல் இரண்டு இடங்களின் மிகக் குறுகிய இடைவெளி அவற்றிடையேயுள்ள நேர்வரை என்றே எல்லோரும் கருதிவந்திருக்கின்றார்கள். சிறிய அளவைகளில் இது அனுபவத்திற்கு ஒத்ததே. ஆனால் ஒரு நேர்வரையை நீட்டிக்கொண்டே போனால் அது உலகைச் சுற்றிக்கொண்டு புறப்பட்ட இடத்துக்கே வந்து சேர்ந்துவிடும். அப்போது நிலவுலகின் சுற்றளவான 24ஆயிரம் மைல் தொலைவுக்கு மேற்பட்ட நீளமுள்ள ஒருவட்டமாகிவிடும். இந்த வட்டத்தின் ஒரு கூறினையே நிலவுலக மக்களாகிய நாம் நேர்வரை என்கின்றோம். இயற்கையின் நேர்வரை இதுபோன்ற இன்னும் பாரிய ஒரு வட்டமேயாகும். ஒளியின் இயக்கமும் இயற்கையின் எல்லையும் இவ் வட்டமேயல்லாது வேறில்லை. ஆகவே இயற்கை வளைந்த அதாவது உருண்டையான வடிவமுடையது. அதன் இயக்கங்கள் எல்லாம் வளைந்த வட்ட இயக்கங்களே.

பொருளும் ஆற்றலும் ஒன்றே என்ற தத்துவம் வகுத்ததுடன் ஐன்ஸ்டீன் நிற்கவில்லை. அதன் உதவியால் அவர் அணு ஆக்கம், அண்டத்தின் ஆக்கம் ஆகிய இரண்டையும் ஒரே இயற்கை நிலையில் கொண்டு இணைக்கப் பாடுபட்டார். அதில் வெற்றியும் கண்டார்.

அணு உண்மையில் நடுவே ஒரு கருவுள்ளும் அதனை சூழ்ந்து சுற்றிவரும் எதிர் மின்னிகளும் உடையதே. கருவுளோ நேர் மின்னிகள் திரளும். நொதுமின்னிகள் திரளும் சேர்ந்திணைந்தது. இவற்றுள் பட்ட நேர் மின்னிகளும் எதிர்மின்னிகளும் நொது மின்னிகளும் பொருட்கூறுகளல்ல. ஆற்றல்வெளி எனும் அகல் கனத்தில் நிகழும் இரு வகை இயக்க சுழிகளே என்று ஐன்ஸ்டீன் கண்டார்.

அண்டங்களும் கோலங்களும் இயங்கும் அதே நியதியிலேயே மின்னி எதிர் மின்னிகளும் இயங்குகின்றன. அது மட்டுமன்று மின்னி எதிர் மின்னி இயக்கங்களும் அண்டத்தின் இயக்கமும் ஒரே ஆற்றல் கனத்தின்சுழி எதிர் சுழிகளால் ஆக்கம் பெறுபவையே என்று ஐன்ஸ்டீன் கணித்துக்காட்டினார்.

ஐன்ஸ்டீன் இந்த விளக்கம் 1949 இல் அவர் முற்றுவித்த ஒன்றுபட்ட களக்கோட்பாடாகும். ஐன்ஸ்டீன் தத்துவத்தால் ஏற்பட்ட மற்றொரு கருத்துப் புரட்சி நியூட்டன் காலத்திய நிலயீர்ப்பு கோட்பாடு, பொருள் ஈர்ப்புக் கோட்பாடு ஆகிய இரண்டும் அடிபட்டுப் போனதேயாகும். இயக்கத்தின் ஆற்றலே அதன் எடைமான மாதலால் ஈர்ப்பாற்றல் அதன் எதிர் ஆற்றலேயாகும் என்பதே ஐன்ஸ்டீன் கருத்து. இதை அவர் காட்சியளவையாலும் கணிப்பளவையாலும் காட்டினார்.

ஓடும் வண்டியில் நிற்பவரும் உண்மையில் ஓட்டத்தில் பங்கு கொள்பவரே. வண்டி திடீரென நின்றால் அவர் உடலின் ஓட்டம் அவரைத் தள்ளிவிடுகின்றது. வண்டி நேராகச் செல்வதற்கு மாறாக சுழன்று செல்லுமேயானால் உடலின் இயக்கம் ஓடும் ஓட்டத்திற்கு எதிரானதாகவேயிருக்கும். ஈர்ப்பாற்றலும் நிலயீர்ப்பாற்றலும் இவையே என ஐன்ஸ்டீன் கணித்துக்காட்டினார். உலகயூதர்கள் 1947ஆம் ஆண்டு இஸ்ரேல் எனும் தனியரசை உருவாக்கினார்கள். அதன் இரண்டாவது பிரதமராக பதவியேற்க வருமாறு பேரறிஞர் ஐன்ஸ்டீனை அழைத்த போது அவர் அதனை விரும்பவில்லை. இது அவரது தீர்க்க தரிசனத்தை புலப்படுத்துகின்றது. இங்கிலாந்து தத்துவ விஞ்ஞானி பேடன் ரஸல் (Burtrant Rusell) கைவிரல் விட்டு எண்ணக் கூடியவர்களே ஐன்ஸ்டீனின் நூல்களைக் கற்றிருக்கிறார்கள் என குறிப்பிடுகின்றார். எனவே இவரது பௌதீகக் கோட்பாடுகளை நவீன தகவல் தொழில்நுட்ப வழிமுறைகளில் அறிந்து அவரைப்போல் இயற்கை, சமூகம் மனிதநேய முள்ளவர்களாக வாழ்வோமாக.

திரு.பி.முத்துலிங்கம்
ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுபோகச் செய்கை அனுமதி இரத்தாகும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் பகுதி ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தில் பயிர்ச் செய்கை செய்யாதவர்களுக்கு, அக்கராயன்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக்கான அனுமதி எதிர்காலத்தில் வழங்கப்படமாட்டாது என கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன், தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அக்கராயன் குளத்திலிருந்து ஸ்கந்தபுரத்துக்கான ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதிலும் ஏற்று நீர்ப்பாசனத்திட்ட பகுதியில் அமைந்துள்ள காணிகளில் சில குடும்பங்கள் வசிக்காமையினால் ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் முழுமையாக செயற்படவில்லை.

ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்தில் செய்கை செய்யாதவர்களுக்கு, அக்கராயன் குளத்தின் கீழ் சிறுபோக செய்கை செய்வதற்கான அனுமதி எதிர்காலத்தில் இரத்துச் செய்யப்படும் என அவர் தெரிவித்தார். (இ)

# பனங்கைப்பணிப் பயிற்சி வகுப்புகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 40 பயனாளிகளைக்கொண்ட இரண்டு பனங் கைப்பணி பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு கிழக்கு பனை தென்னை கூட்டுறவு சங்க அலுவலகத்திலும், முள்ளியவளை மாமூலை கிராம அபிவிருத்திச்சங்கக் கட்டடத்திலும் நடைபொற்றது. இதனை முல்லைத்தீவு மாவட்ட பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் உலக உணவுத்திட்டத்தின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

உலக உணவு த்திட்டத்தின் வடக்கு மாகாண த்திலேயே முதலாவது அபிவிரு த்தித்திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வு பனை அபிவிருத்திச் சபை யின் முல்லை. மாவட்ட இணைப்பாளர் பா.றஜிபரன் தலைமையில் நடைபெற்றது.



இதில் பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் க.விஜிந் தன், உலக உணவு த்திட்ட பிரதி நிதிகள், முல்லை. மாவட்ட இணை யங்களின் பொது முகாமையாளர், மற்றும் முல்லை. கிழக்கு, மேற்கு ப.தெ.கூ.அ.ச. தலைவர், பொது முகாமையாளர்கள் என பலரும் பங்குபற்றியிருந்தனர். (இ-281)

# ஒருவீதிக்கு இருபெயர்கள்




(மன்னார்)

மன்னார் பனங்கட்டுகொட்டு பகுதியின் பிரதான வீதி ஆரம்ப காலம் முதல் பனங்கட்டுகொட்டு வீதி என அனைவராலும் அழைக்கப்பட்டு வந்தது.

இதனை சிலர் கடலோர வீதி எனவும் அழைத்து வந்தனர். இந் நிலையில் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த சமூக ஆர்வலர்களின் முயற்சியால் குறித்த வீதி மன்னார் நகரசபையின் அனுமதியுடன் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி "தனிநாயகம் அடிகளார் வீதி" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

குறித்த பெயர் மாற்றும் நிகழ்வில் நகரசபையின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

எனினும் அண்மையில் மன்னார் நகர சபை வீதிகளுக்கான பெயர் பலகை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தது. இதற்கு அமைவாக மன்னார் பனங்கொட்டு பகுதியிலுள்ள தனிநாயகம் அடிகளார் வீதி என்று அமைக்கப்பட்டிருந்த வீதியின பெயர்ப் பலகைக்கு அருகில் மீண்டும் பனங்கட்டுகொட்டு வீதி என புதிய பெயர்ப்பலகை நடப்பட்டுள்ளது.

இது மக்கள் மத்தியில் வியப்பையும் கடும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக மன்னார் நகர சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கு இன்று கொடுப்பனவு

(வவுனியா)


**வடக்கு மாகாணத்தில், முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்கும் திட்டம், இன்று வவுனியாவில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு அலுவலக தகவல் தெரிவிக்கின்றது.**

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களை இரு பிரிவுகளாக பிரித்து, கழுத்துக்கு கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு 3 ஆயிரம் ரூபாவும், இடுப்புக்கு கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

கொடுப்பனவு வழங்கும் ஆரம்ப நிகழ்வு இன்று 23 ஆம் திகதி வவுனியா பம்பைமடுவிலுள்ள வைகறை நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது எனவும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் இந்த திட்டத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார் எனவும் தெரிய வருகிறது.

இந்த மாதாந்த உதவித் தொகை வழங்குவதற்கான பயனாளிகள் தெரிவு, வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவு ரீதியில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் சேகரிக்கப்பட்டது. மத்திய அரசின் சமூக சேவை அமைச்சால் மாற்றுவலுவுடையோருக்கு மாதாந்தம் வழங்கப்படும் 3ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை பெறாதவர்கள் இந்த மாகாண உதவித் தொகையை பெற்றுக் கொள்ளும் வகையில் செய்யப்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் மேலும தெரிவிக்கின்றன. (இ)

# கால்நடைகள் வளர்ப்புத் தொடர்பில் கிளிநொச்சி மக்களுக்கு நெருக்கடி



(கிளிநொச்சி)

சிகிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு தொடர்பில் பாரிய இடர்பாடுகளை எதிர்கொள்வதாக இரணைமடு விவசாய சம்மேளன செயலாளர் மு.சிவமோகன் கருத்து தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்ததுடன் இரணைமடு குளத்தின் அபிவிருத்தி தொடர்பிலும் கருத்து தெரிவித்தார்.

இரணைமடு குளத்தில் ஜூலை மாதமளவில் அபிவிருத்தி பணிகளை ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறித்த விடயம் தொடர்பில் நீர்ப்பாசனத் திணைக்களம் தமக்கு வாக்குறுதி அளித்துள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (இ-5)





## விபத்தில் இருவர் படுகாயம்

கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சீமெந்து ஏற்றிய நிலையில் வீதியில் தரித்து நின்றிருந்த பாரவூர்தி மீது பேருந்து மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

பேருந்தின் சாரதியும் நடத்துநரும் இவ்விபத்தில் படுகாயமடைந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், பேருந்து விபத்துக்குள்ளாகியமையடுத்து, பயணிகள் பிறிதொரு பேருந்து மூலம் தங்கள் பயணத்தை தொடர்ந்தனர் எனத் தெரிவித்தனர். (இ)

# முல்லை. சனசமூக நிலையங்களுக்கான தளபாட உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு



(முல்லைத்தீவு)

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் முல்லைத்தீவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் இரு சனசமூக நிலையங்களுக்கான தளபாட உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வெட்டுவாய்க்கால் மற்றும் அளம்பில் தெற்கு சனசமூக நிலையங்களே ரவிகரனால் கடந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் உள்வாங்கப்பட்டன. வருகின்ற ஆண்டுகளில் இன்னும் பல கிராமங்களை இத்திட்டத்தினுள் உள்வாங்கி, அதிகளவான மக்கள் ஊடகச் செய்திகளை வாசிக்கும் வாய்ப்பை வழங்குவதனூடாக, ஆரோக்கியமான சனநாயகத்தை கட்டி எழுப்புவதே இங்கு இலக்காகிறது என்று நிகழ்வில் உரையாற்றிய ரவிகரன் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1121

## வைஜெயந்தி எடுத்த முடிபு

மன்னர் நரேந்திரவர்மரின் ஒரே செல்வப் புதல்வியான வைஜெயந்தி தன் சிறு வயதிலேயே தாயை இழந்தபிறகு, அவளை மன்னர் மிகவும் கண்ணும் கருத்துமாய் வளர்த்தார். எந்த ஒரு விடயத்திலும் அவள் மனம் கோணாதவாறு அவள் விரும்பிய வாறே நடந்து வந்தார். இயற்கையிலேயே மிக அழகான வைஜெயந்தி, திருமணப் பருவத்தை எட்டினாள்.

ஒருநாள், வைஜெயந்தி தன் தோழிகளுடன் மலைமீதிருந்த ராஜேஸ்வரி கோயிலுக்குச் சென்றாள். தரிசனம் முடிந்தபிறகு தோழிகள் கோயிலை விட்டு வெளியேறி மலையிலிருந்து இறங்க, வைஜெயந்தி கோயிலைப் பிரதட்சிணமாகச் சுற்றி வந்தாள்.


அப்போது கோயிலின் பின்புறம் ஒரு சிற்பி பாறையில் செதுக்கிக் கொண்டிருந்த சிற்பம் அவளை மிகவும் கவர்ந்தது. "மிக அழகான சிற்பம்!" என்று அவள் பாராட்ட அந்த சிற்பி அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"நான் இளவரசி வைஜெயந்தி!" என்று அவள் கூறியதும், அவன் அவளைத் தலைகுனிந்து வணங்கி, "வணக்கம் தேவி! என் பெயர் விஜயன்!" என்றான்.

"நீங்கள் என்னுடைய உருவத்தையும் சிலையாக வடிப்பீர்களா?" என்று வைஜெயந்தி கேட்டாள். "அதை என்னுடைய பாக்கியமாகக் கருதுகிறேன் தேவி! உங்கள் சிற்பத்தை பளிங்கில் செதுக்கித் தருகிறேன்.

ஆனால் அதற்கு ஒரு மாதம் ஆகும். வாரத்தில் ஒரு நாள் நீங்கள் என் முன் ஒரு மணி நேரம் வந்து அமர வேண்டும்," என்றான் விஜயன். "ஆகட்டும்! கட்டாயம் வருகிறேன்! ஆனால் இந்த விடயம் நமக்குள் ரகசியமாக இருக்கட்டும்!" என்றாள்.

அதற்கு விஜயன், "தேவி! அதோ, மலையின் கீழ் தெரிகிறதே ஒரு குடிசை! அதுதான் என் வீடு! தயவு செய்து நீங்கள் அங்கே வந்து விடுங்கள்! என்னுடைய பாட்டியும், நானும் மட்டும் அங்கிருக்கிறோம்!" என்றான். அதற்கு வைஜெயந்தி "ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் ராஜேஸ்வரி கோயிலுக்கு வருவது என் வழக்கம். இங்கு தேவியை தரிசனம் செய்த பிறகு, தனியாக உங்கள் வீட்டிற்கு வருகிறேன்!" என்றாள்.



பிறகு, மலையிலிருந்து கீழிறங்கி மற்ற தோழிகளுடன் சேர்ந்து கொண்டு வீடு திரும்பினாள். அடுத்த வெள்ளிக்கிழமை, தான் மட்டும் தனியாக வந்து ராஜேஸ்வரியை தரிசனம் செய்து முடித்த பின், அவள் விஜயனின் இல்லம் அடைந்தாள்.

அவளைக் கண்டதும் விஜயன் அவளை மிகுந்த உற்சாகத்துடன்வரவேற்றான். அங்கிருந்த மரத்தின் கிளைகளில் மலர்ந்திருந்த ஒரு மலரைப் பறிக்கும் விதமாக அவளை ஒயிலாக நிறக வைத்து, அதைப் பளிங்குக் கல்லில் ஓவியமாக முதலில் வரைந்து கொண்டான். பிறகு, அவளை பளிங்குக் கலலில் செதுக்கத் தொடங்கினான். அதற்குள் விஜயனின் பாட்டி அவளுக்கு ஒரு பணியாரம் தந்து உபசரித்தாள்.

அத்தனை சுவையான பணியாரத்தை வைஜெயந்தி அரண்மனையில் கூட அது நாள் வரை உண்டதில்லை. "பாட்டி! இத்தனை ருசியான பணியாரம். நான் இது வரை சுவைத்ததேயில்லை!" என்று தன் மகிழ்ச்சியை அவள் வெளிப்படுத்தினாள். அதைக் கேட்டு பாட்டி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

அதற்குப் பிறகு ஒவ்வொரு வாரமும் வெள்ளிக் கிழமை தோறும் வைஜெயந்தி விஜயனின் வீட்டிற்கு வந்தாள். விஜயன் தன் திறமை அனைத்தையும் ஈடுபடுத்தி மிகச் சிறப்பாக மூன்றே வாரங்களில் சிலையை பெரும்பாலும் செதுக்கி விட்டான். வைஜெயந்தி தன்னுடைய அழகான பளிங்குச் சிலையைவிட, விஜயனின் கம்பீரமான அழகையும், குணத்தையும் மிகவும் ரசித்தாள். அவள் பலவிதமான கனவுகளுடன் அரண்மனைக்குத் திரும்பினாள்.

மறுநாள் காலை, வைஜெயந்தி நந்தவனத்தில் ஒரு ரோஜாப்பூவைப் பறித்துக் கொண்டிருக்கையில், "அந்த ரோஜாவை விட நீ மிகவும் அழகாயிருக்கிறாய் வைஜெயந்தி!" என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்ப, அங்கே ஒரு இளவரசன் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். அப்போது தான், முதல் நாள் இரவு தன் தந்தை தன்னிடம் பக்கத்து நாட்டு இளவரசன் தங்கள் அரண்மனைக்கு விருந்தினனாக வந்திருப்பதை அறிவித்தது நினைவிற்கு வந்தது.

"உங்கள் வரவு நல்வரவாகுக!" என்று சொல்லிவிட்டு, வைஜெயந்தி உடனே அந்தப்புரம் திரும்பி விட்டாள். அன்றிரவு அவள் தந்தை, "வைஜெயந்தி! உன்னை அந்த இளவரசன் ஜெயந்தன் நந்தவனத்தில் பார்த்தான் அல்லவா! உன்னை அவன் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான். உன்னுடைய அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்...

(தொடரும்)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

04.2015 22

- 1500 - பிரேசிலைக் கண்ட முதல் ஐரோப்பியர் போரத்துக்கீசரான பேதுரோ கப்ரால்.
- 1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் பெஞ்சமின் கிரியெர்சன் தலைமையில் நடு மிசிசிப்பியைத் தாக்கினர்.
- 1889 - நடுப் பகலில் பல்லாயிரக் கணக்கானோர் காணிகளைக் கைப்பற்றுவதற்காக ஓடினார்கள். சில மணி நேரங்களில் ஐக்கிய அமெரிக்காவில் ஒக்லஹோமா நகரம் மற்றும் கத்ரி (Guthrie) ஆகியவற்றில் 10,000 பேர் அங்கிருந்த வெற்றுக் காணிகளைக் கைப்பற்றிக் குடியேறினர்.
- 1898 - அமெரிக்க கடற்படையினர் கியூபாவின் துறைமுகங்களை முற்றுகையிட்டு ஸ்பானிய சரக்குக் கப்பல் ஒன்றைக் கைப்பற்றினர்.
- 1912 - ரஷ்யாவின் பொதுவுடமைக் கட்சியின் பத்திரிகை ப்ராவ்டா சென் பீட்டர்ஸ்பேர்க் இலிருந்து வெளிவர ஆரம்பித்தது.
- 1915 - முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தின் ஈப்ர (Ypres) ஜேர்மனி முதன் முதலாக குளோரீன் வாயுவை வேதியியல் ஆயுதமாகப் பாவித்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் நியூகினியின் ஒல்லாந்தியா என்ற இடத்தில் தரையிறங்கினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: குரோவேசியாவில் ஜசெனோவாச் வதை முகாம் கைதிகள் சிறையுடைப்பில் ஈடுபட்டபோது 520 கைதிகள் கொல்லப்பட்டனர். 80 பேர் தப்பியோடினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் பெர்லினில் எபெர்ஸ்வால்ட் நகரை இலகுவாகக் கைப்பற்றியதைக் கேள்வியுற்ற ஹிட்லர தனது தோல்வியை ஒப்புக் கொண்டார்.
- 1970 - முதலாவது பூமிதினம் கொண்டாடப்பட்டது.
- 1983 - ஹிட்லரின் நாட்குறிப்புகள் கிழக்கு ஜேர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டதாக டேர் ஸ்டேர்ன் என்ற ஜேர்மனிய இதழ் அறிவித்தது.
- 1997 - அல்ஜீரியாவில் கெமிஸ்ரி என்ற இடத்தில் 93 கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1997 - பெருவின் தலைநகர் லீமாவில் ஜப்பானிய தூதுவர் இல்லத்தில் 126 நாட்களாகப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த 71 பேர் அரசுப் படைகளின் தாக்குதலின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.
- 2000 - ஆனையிறவு படைத்தளம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது.
- 2006 - இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் உள்ள ஆய்வு மையத்தில் பிரமோஸ் ஏவுகணை வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1724 - இம்மானுவேல் கண்ட், ஜேர்மனியைச் சேர்ந்த தத்துவவியலாளர் (இ. 1804)
- **1870 - விளாடிமிர் லெனின், ரஷ்யப் புரட்சியாளர், லெனினிசம் என்ற கோட்பாட்டின் நிறுவுனர (இ. 1924)**
- 1876 - ரொபேர்ட் பாரானி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1936)
- 1909 - ரீட்டா லெவி-மொண்டால்சினி, நோபல் பரிசு பெற்ற இத்தாலியர்
- 1919 - டொனால்ட் கிராம், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 2001)
- 1940 - க. சட்டநாதன், ஈழத்தின் குறிப்பிடத்தக்க சிறுகதையாளர்

### இறப்புகள்

- 1994 - ரிச்சார்ட் நிக்சன், ஐக்கிய அமெரிக்காவின 37ஆவது ஜனாதிபதி (பி. 1913)
- 2013 - லால்குடி ஜெயராமன் வயலின் மேதை (பி.1930)

### சிறப்பு நாள்

- பூமிதினம்

### விளாடிமிர் லெனின்



விளாடிமிர் லெனின் 22 ஏப்ரல் 1870 இல் ரஷ்யாவில் வால்கா நதியின் கரையோரம் உள்ள சிம்பிர்ஸ்க் எனும் நகரத்தில் பிறந்தார்.

இவருடைய இயற்பெயர் விளாடிமிர் இலீச் உல்யானவ் என்பதாகும்.

தொழிலாளர் விடுதலை இயக்கம் என்பதை தொடங்கி ரஷ்யாவில் தொழிலாளர்களிடையே காரல் மார்க்ஸின் கொள்கைகளை பரப்புரை செய்தார்.

ரஷ்யாவில் பொதுவுடமை ஆட்சியை நிறுவுவதற்குக் காரணமாக இருந்த முக்கிய அரசியல் தலைவர் லெனின் ஆவார்.

ரஷ்யாவில் பொதுவுடமை அரசை நிறுவுவதற்குக் கண்ணுங் கருத்துமாகப் பாடுபட்டார். 1917 நவம்பர் முதற்கொண்டு உலகெங்கும் பொதுவுடமை ஆட்சி தொடர்ந்து விரிவடைந்து வந்தது. .

லெனின் புரட்சி இயக்கங்களை நிறுவுவதில் மிகுந்த அனுபவம் உடையவர். ஒரு நாட்டுக்கு உகந்த முறைகளைப் பிற நாடுகளுக்கும் பயன்படுத்துவதை வன்மையாக எதிர்த்தவர். நாட்டுக்கும் உலகத்துக்கும் ஏற்ற முறையில் புரட்சி இயக்கங்களை உருவாக்க வேண்டும் என்ற உறுதியான கொள்கை உடையவர்.

அவர் புரட்சி நடவடிக்கைகளில் மிகுந்த ஈடுபாடு உடையவராக இருந்தார். வன்முறை இன்றியமையாதது என்று அவர் வலியுறுத்தி வந்தார். "வர்க்கப் போராட்டத்தில் ஒரு சிக்கல் கூட வன்முறையின்றி தீர்க்கப்பட்டதாக வரலாறே இல்லை!" என்று அவர் வலியுறுத்தினார். "தொழிலாளர் சர்வாதிகாரம்" பற்றி மார்க்ஸ் இங்குமங்குமாய்த்தான் குறிப்பிட்டுள்ளார். ஆனால், லெனின் இந்தக் கோட்பாட்டைத் தீவிர வெறியுடன் பின்பற்றினார். "தொழிலாளர் சர்வாதிகாரம் என்பது வன்முறையின் அடிப்படை அமைந்த அதிகாரமேயன்றி வேறில்லை. அந்த அதிகாரத்தை சட்டத்தினாலோ, ஆட்சியினாலோ கட்டுப்படுத்த முடியாதது" என்று அவர் நம்பினார்.

அவருக்குத் திசு தடித்தல் என்னும் நோய் முற்றியது. பேச முடியாத நிலையும் ஏற்பட்டது. டிசெம்பரில் இவரது வலக்கையும் செயல் இழந்தது. அது முதல் முற்றிலும் செயலற்ற நிலையிலேயே இருந்த லெனின் தனது 54ஆம் வயதில் 1924-ஆம் ஆண்டு ஜனவரி 21-ஆம் திகதி மூளை நரம்பு வெடித்து மரணமடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

...'நீங்க சொல்லுங்கள். நீங்க சொல்ற இடத்துக்கு வந்துடறேன்' என்றேன்.

இடம் சொன்னார். சந்தித்தோம். சுற்றி வளைக்காமல் மளமளவென விடயத்துக்கு வந்தார். 'நீங்க என் படத்தை டைரக்ட் பண்ணனும்' என்றார்.

ஏற்கனவே கிழக்கு வாசல் பட வெற்றி விழாவில் மைக்கிலேயே வெளிப்படையாக கேட்டவர், இப்போது இரண்டாவது தடவையாகவும் கேட்டார்.

'பண்ணலாம் சார். நீங்களே இப்படி கூப்பிட்டு கேட்பது என் பாக்கியம்' என்றேன்.

'யார் தயாரிச்சா உங்களுக்கு சரியா இருக்கும்?' இது ரஜினி சாரின் அடுத்த கேள்வி.

'சார் நீங்க யாரை சொல்றீங்களோ அந்த கம்பெனிக்கு டைரக்ட் பண்றேன்' என்றேன்.

'நான் நாலைந்து கம்பெனி சொல்றேன். அதுல உங்களுக்கு சரியா தோன்றும் கம்பெனியை சொல்லுங்க' என்றவர், ஏவி.எம். நிறுவனத்துடன் மேலும் 5 கம்பெனிகள் பெயரைச் சொன்னார்.

எனக்கு ஏவி.எம். நிறுவனத்தில் ஒரு படம் பண்ணவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ரஜினி சார் சொன்ன பட்டியலில் ஏவி.எம்.மும் இருந்ததால் உடனே, 'ஏவி.எம்.முக்கு பண்ணலாம்' என்று சொல்லிவிட்டேன்.

உடனே ஏவி.எம். சரவணன் சாருக்கு போன் போட்டார். அடுத்த பத்தாவது நிமிடத்தில் சரவணன் சாரும் நாங்கள் இருந்த இடத்துக்கு வந்துவிட்டார்.

அடுத்த பத்தாவது நிமிடத்தில் ஏவி.எம். தயாரிப்பில் ரஜினி நடிக்க, நான் இயக்குவது உறுதி செய்யப்பட்டது.



ரஜினி-மீனா- எஜமான்

**இளையராஜா**

அப்போது ஏவி.எம். நிறுவனங்களின் படங்களுக்கு இளையராஜா இசையமைக்காமல் இருந்தார். என் படங்களில் அவரது பங்களிப்பு மகததானது. சின்னக்கவுண்டர் படத்தின வெற்றிக்கு இளையராஜாவின் பாடல்கள்காரணமாக அமைந்திருந்ததை யாரும் மறுக்கமுடியாது. அதனால் இந்தப் படத்திலும் இளையராஜா இருக்க வேண்டும் என்று விரும்பினேன்.

என் விருப்பத்தைச் சொன்னதும், 'அவங்களுக்குள்ள 'மிஸ் அண்டரஸ்டாண்டிங்' இருக்கே!' என்று ஒரு கணம் ரஜினி சார் தயங்க, 'சார்! நான பேசிப்பார்க்கிறேன். ராஜா சார் மறுக்க மாட்டார்' என்றேன்.

பேசினேன். இளையராஜா இசையமைக்க ஒப்புக்கொண்டார். இதனால ஏவி.எம்- இளையராஜா இசைப்பந்தம் மறுபடியும் தொடர்ந்தது. இதன் பிறகு ஏவி.எம்.மில் இளையராஜா வுக்கென தனி அறை ஏற்படுத்தப்பட்டு, அங்கேயே தனது இசையமைப்பைத் தொடர்ந்தது வரலாறு.

படம் பற்றி பேசும்போது 'என்ன மாதிரி கதை?' என்று கேட்டார் ரஜினி.

நான் 'ஜில்லா கலெக்டர்' என்ற பெயரில் ஒரு கதையை சொன்னேன். 'பிரமாதம்' என்றார். ஏவி.எம்.மில் பூஜையும் போட்டாயிற்று. பூஜை போட்ட அன்றே படத்தின் எல்லா ஏரியாக்களும் விற்றுப் போனது.

தயாரிப்பாளர் ஏவி.எம். சரவணன் சாரிடமும் கதையை சொன்னேன். 'கதை நன்றாக இருக்கிறது. ஆனால் பெரிய அளவில் செலவு வைக்கும்' என்றார்.


பிறகு ஒரு மாதம் உட்கார்ந்து வேறொரு கதை தயார் செய்தேன். அந்தக் கதைதான் 'எஜமான்.'

**மீனா**

ரஜினியுடன் மீனாவை ஜோடியாக நடிக்க வைக்கவும் தடையிருந்தது. ரஜினி சாரே, 'என்னை 'அங்கிள்'னு கூப்பிட்ட பொண்ணு. இப்ப என் ஜோடியா நடிச்சா ரசிகர்கள் எப்படி ரியாக்ட் பண்ணுவாங்களோ?' என்று யோசித்தார்.

மீனா அப்போதுதான் கதாநாயகியாக ராஜ்கிரண் ஜோடியாக ஒரு படத்தில் நடித்திருந்தார். என்றாலும் மீனா தான் வைத்தீஸ்வரி கேரக்டருக்கு சரியாக இருப்பார் என்று வற்புறுத்திய பிறகு ரஜினி சார் ஒப்புக்கொண்டார்.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-122

...அய்யா செட்டியாரய்யா... நகையாயிருக்கறப்போது தங்கம் ஒவ்வொரு அங்குலத்துலயும் வேறவேற தரத்துல இருக்கும். உருக்கி ஒண்ணு சேத்தா ஒரே தரத்துக்கு வந்திருது.

நெசந்தானய்யா. சொத்து சாதிய வச்சு சிறுசு பெருசுன்னு அலையிற மனுசப்பய சுடுகாட்டுல சுட்டதும் ஒண்ணாயிடுறானா இல்லையா... அப்படித்தான் இது.

இப்பச் சுட்டு எடுத்த தங்கந்தான் சொக்கத் தங்கமா? இல்லய்யா. இதுல மாசு மருவு கலந்திருக்கு. இதச் சொக்கத்தங்கமாக்க இன்னும் ரெண்டு வேல பாக்கியிருக்கு. இந்தாங்க. காப்பித்தண்ணி குடிங்க. பாத்துக்கிட்டேயிருங்க.

திரும்பவும் தங்கக் கட்டியச் சுட்டுப் பட்டறையில வச்சாரு. எடுத்தாரு சுத்தியல. அடிச்சாரு தங்கத்த. அது எங்க எளக்கம் குடுக்குது- எங்க இறுக்கம் குடுக்குதுன்னு விரல் வழியா மூளைக்குச் சொல்லிக்கிட்டேயிருக்கு சுத்தியலு.

இறுக்கம் குடுத்த தங்கத்த எடுத்தாரு. இளஞ்சூடு காமிச்சாரு. பொறிகாரத்துல போட்டுப் பெரட்டி எடுத்தாரு; உலையில தூக்கி வச்சாரு; உருகும்பதம் கண்டதும் உமியடிச்சாரு; தண்ணிக்குள்ள முக்கினாரு; சூடு அமத்திட்டாரு.

ஆறிப்போன தங்கத்த அடிச்சு அடிச்சு, தங்கக் கட்டியத் தகடா மாத்திப்பிட் டாரு. என்னமோ அருவாமணியில வெண்டக்காயக் குடுத்து வெட்டி எடுக்கிற மாதிரி நீண்டு போன தங்கத்த அங்குல அங்குலமா வெட்னாரு. அடுக்கியும் வச்சுக்கிட்டாரு.

இப்பத்தான் புடம் போடப் போறாரு. சலிச்செடுத்தாரு செம்மண்ண; அதுல கரைச்சு ஊத்துனாரு புளிய; உள்ள போட்டாரு உப்ப. மூனையும் கொழ [illegible]ன்னு கொழச்சாரு. களிப்[illegible] செட்டியாரு.



வந்ததும் தங்கத்துண்டுகள்ல தடவிட்டாரு.

காப்பித் தண்ணியக் குடிச்சுக்கிட்டே கடை வாய்க்குள்ள [illegible]

ஏ பவுனு! நாந்தான் தங்கம்ன்னு மேனா மினுக்கியா அலஞ்சியே! ஒங்கதியப் பாத்தியா? எங்க மனுசப் பொம்[illegible]ளையெல்லாம் மஞ்சப் பூசிக் குளிக்கிறாக. நீ பாவம்! மண்ணப் பூசித்தானக் குளிக்கிற. ஒன் பெருமை தெரிஞ்சு போச்சுடி பிள்ளா; இனி வாயத் தெறக்காத.

என்னமோ காலங்காலமாத் தங்கம் இவரு கூட குடுமிப்பிடிச் சண்ட போட்டதாகவும் இன்னக்கி அது கொட்டத்த இவரு அடக்கிட்டதாகவும் ஏழக்கெழவனுக்கு ஒரு ராசசந்தோசம்.

மண்கொழச்சு அப்புன தங்கத்தகடுகள ஓட்டுல போட்டு ஒல மூடி வச்சு மூடி, அடியில எருக்கூட்டி எரிக்க ஆரம்பிச்சாரு ஆசாரி.

சோறு வெந்துருச்சா கொழஞ்சிருச்சாங்கிறத குழவியில தொவையல் அரைச்சுக்கிட்டே சொல்ற கெழவிகமாதிரி, புடம் போட்ட தங்கம் வேக்காடு குடுத்துருச்சா இல்லையாங்கிறத அனுபவம் சொல்லுது ஆசாரிக்கு.

ஒலமூடி தொறந்து பாத்தா தடவுன உப்பு, புளி, மண்ணு ஒண்ணையுங் காணோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜூன் மாத இறுதிக்குள் தேர்தலை நடத்தி உறுதியான அரசை உருவாக்க வேண்டும்

(கொழும்பு)

**ஜூன் மாத இறுதிக்குள் பாராளுமன்றத் தேர்தலை நடத்தி உறுதியான அரசாங்கத்தை உருவாக்க வேண்டுமெனவும் ஐ.நா.மனிதவுரிமை ஆணைக்குழுவின் இலங்கை தொடர்பான அறிக்கை செப்டெம்பர் மாதம் வெளியிடப்படவுள்ளதனால் அதற்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வலியுறுத்தியுள்ளார்.**



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் இடம் பெற்றது.

இங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்துளளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா. மனிதவுரிமை ஆணைக்குழுவின் இலங்கை தொடர்பான அறிக்கை செப்டெம்பர் மாதம் வரையில் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை செப்டெம்பர் மாதம் வெளியிடப்படவுள்ளது.

எனவே இம்மாத இறுதியில் பாராளுமன்றத்தை கலைத்து ஜூன் மாத இறுதிக்குள் தேர்தலை நடத்தி உறுதியான அரசாங்கத்தை நாம் உருவாக்கவேண்டும். இல்லையேல் செப்டெம்பர் மாதம் அறிக்கை வெளியிடப்பட்டால் பெரும்பாதகமான சூழலை நாம் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

எனவே இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தவேண் டியது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மானிய அடிப்படையில் நன்னீர் மீன்பிடி வலை

வடக்கு மாகாணத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு மானிய அடிப்படையில் நன்னீர் மீன்பிடி வலைகள் வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடியை வாழ்வாதாரமாக கொண்டு 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. அவர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் முகமாக பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

அந்தவகையில்வடமாகாணத் தில் உள்ள 32 பதிவு செய்யப்பட்ட நன்னீர் மீனவ சங்கங்களையும் அழைத்து அவர்களுடன் கலந்து ரையாடல் மேற்கொண்டிருந்தோம். அவர்களின் தேவை களை அறி ந்து அவர்களின் கோரிக்கைக்கு அமை வாக கடந்த வருடம் 30 இலட் சத்துக் கும் மேற்பட்ட மீன் குஞ்சுகளை குளங்களில் விடும் திட்டத்தை மேற் கொண்டிருந் தோம். அவை நிறைவு செய்யப்பட்டு அதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக இந்த நன்னீர் மீன்பிடி வலைகளை பயனாளிகளுக்கு வழங்கவுள்ளோம். அதற்குரிய பயனாளிகள் தெரிவு தற்போது இடம்பெறு கிறது. 70 இலட்சம் ரூபா செலவில் குறித்த வலைகளை கொள் வனவு செய்துள்ளோம். பயனாளிகளுக்கு 50 வீதம் மானிய அடிப்படையில் வலைகள் வழங்கப்படும்.

மானியத்தில் இருந்து பெறப் பட்ட நிதியை தொடர்ந்தும் அவர் களுக்குரிய உபகரணங்களை கொள் வனவு செய்து வழங்கவுள்ளோம்.

எதிர்வரும் மே மாதத்தில் இரு ந்து இந்த வலைகள் குறித்த சங்கங்களின் ஊடாக பயனாளிகளு க்கு வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கிச்சிலிக்கிழங்கு

Botanical Name:Curcuma zedoaria
Family:Zingiberaceae
Engl:Zedoary
Sinh:Harankaha

இது ஈராண்டு வாழக்கூடிய கொடியாகும். மிகுந்த வாசனையுடையது. உருளைவடிவ நீண்ட விரல் போன்ற நீட்டங்களைக் கொண்ட மெல்லிய மஞ்சள் நிறமான கர்ப்பூர வாசனையுடைய மட்டநிலத்தண்டுகளைக்கொண்டது. இலைகள் தனியிலை 30 தொடக்கம் 60 செ.மீற்றர் நீளமுடையது. கூரிய முனைகளைக் கொண்டது. இலையின் நடுநரம்புப் பகுதி ஆழமான ஊதா நிறத்தைக் கொண்டது. பூக்கள் ஒழுங்கற்ற இருபாலான நீண்ட இலைக்காம்புடையது. புனல்வடிவ ஊதாநிறமானவை பழங்கள் கோளவடிவமானவை நீள் வட்ட விதைகள் வெள்ளைநிறமானவை. தைமாதத்திலிருந்து பங்குனிவரை இதன் பூக்களைக் காணலாம்.

மட்டநிலத்தண்டுமூலம் இனவிருத்தி செய்யலாம். நிழலான சதுப்பான மண்வளமுள்ள இடங்களில் கூடுதலாகப் பயிரிடலாம்.

இதன் மட்ட நிலத்தண்டுகள் மருத்துவக் குணமுடையவை. மிகுந்த வாசனையும் உடையது. பசியைத் தூண்டக்கூடியது. காசநோய்கள், மூட்டுக்களில் ஏற்படும் பிடிப்பையும் நீக்கவல்லது. இவற்றைவிட வாய்நாற்றம், குடற்புண், காமாலை ஆகியவற்றுக்கு பயன்படக்கூடியது.



இதன்மட்டநிலத்தண்டுகளை சேகரித்து நன்கு கழுவி சிறுசிறு துண்டுகளாக்கி நிழலில்உலர்த்தி பயன்படுத்தப்படுகிறது.

கிச்சிலிக்கிழங்கு, அதிமதுரம், திப்பிலி இம்மூன்றிலும் 5 கிராம் அளவு எடுத்து 400 மில்லி நீர்விட்டு 225 மில்லியாக சுண்டக்காய்ச்சிய குடிநீரை 30-60 மில்லி அளவு இருமலுக்கு கொடுக்கலாம். இம்மூன்று உலர் சரக்குகளையும் தமிழ் மருந் துக் கடைகளில் வாங்கலாம்.

வீட்டில்மிளகாய்த்தூள்தயாரிக்கும் போது ஒருகிலோ செத்தல் மிளகாய் அளவுக்கு 50 கிராம் உலர்ந்த கிச்சிலிக்கிழங்கை தோல்சுரண்டி வறுத்துச் சேர்த்துக்கொள்ளலாம். இலகுவில் சமித்துக்கொடுக்கும். இதனால் மிகுந்த வாசனையாகவும் மிளகாய்த்தூள் இருக்கும். குடலில் இருக்கும் வாயுவையும் அகற்றக்கூடியது.

குடற்புண் உடையவர்கள் [illegible] மான மிளகாய்த்தூள் பயன்[illegible]தக் கூடாது. அவர்களுக்கு தயாரிக்கும் சரக்குத்தூளில் கிச்சிலிக்கிழங்கை அளவாக சேர்த்தல் வேண்டும். குடற்புண்ணை ஆற்றும் சிறந்த மூலிகையாகும்.



மற்றும் குளியல் பொடியான நலங்குமாவில் கிச்சிலிக்கிழங்கை சேர்க்க முடியும். தற்போது பலவிதமான சவர்க்காரங்கள் மக்களால் பயன்படுத்தப்படுகின்றன. ஆனாலும் தோலில் ஏற்படும் பிரச்சினைகளை நீக்கவும் தோலைப் பராமரிக்கவும் மென்மையாக வைத்திருக்கவும் சிறந்தது மூலிகை குளியல் பொடியாகும் (Herbal bath powder)

வெட்டிவேர்-100 கிராம், கஸ்தூரி மஞ்சள்-100 கிராம், கிச்சிலிக் கிழங்கு -100 கிராம்,சந்தனத்தூள்-100 கிராம், உலர்ந்த எலுமிச்சம்தோல்-50 கிராம், பச்சைப்பயறு-200 கிராம்.

இவற்றைப் பொடித்து அரித்து வைத்துக்கொள்ளவேண்டும். இதைத் தினமும் தேய்த்து உடலில் அரை மணிநேரம் ஊறவிட்டு குளிக்க மேற்படி தோல் நோய்கள் நீங்கி தோல் அழகாகவும் மிருதுவாகவும் இருக்கும்.

கண்ணிற்குள் கீழ் கருவளையம் இருத்தலுக்கு திருநீற்றுப்பச்சை 100 கிராம், கிச்சிலிக்கிழங்கு 50 கிராம் எனச்சேர்த்து அரைத்து கண்களுக்கு கீழ் பூசலாம்.

புண்களுக்குக் கிச்சிலிக் கிழங்கை வெங்காரத்துடன் அரைத்துப்பூசலாம். இதையே சிதைவினால் உண் டாகும் புண்களுக்கும் பூசிவரலாம்.

வாய்நாற்றம் உடையவர்கள் 35 கிராம் கிச்சிலிக்கிழங்கை சிறுதுண்டுகளாக்கி 500 மில்லி நீர் விட்டு கால் பங்காக குடிநீர் காய்ச்சி தாங்கக்கூடிய சூட்டில் வாய்கொப்பளித்து வரலாம்.

குடலில் வாய்வுத் தொல்லை, வயிற்றுப்பொருமல் இருப்பவர்கள் உள்ளி, வெந்தயம், கிச்சிலிக் கிழங்கு மூன்றையும்ஒரேயளவாக எடுத்து அதற்கு 4 பங்கு நீர் விட்டுக் கால் பங்காக குடிநீர் காய்ச்சி 30-60 மில்லிஅளவு காலை, மாலை எடுக்க வாய்வுத் தொல்லை, வயிற்றுக்கோளாறுகள் நீங்கும்.

புதினாக்கீரை, உளுத்தம்பருப்பு, பொட்டுக்கடலை கிச்சிலிக்கிழங்கு, புளி ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்தரைத்து சிறிதளவு வாயிற்போட்டு தண்ணீர் குடிக்க வாய் நாற்றம், குமட்டல், வாந்தி குணமாகும்.

**கறிவேப்பிலை வடகம்**

கறிவேப்பிலை, கிச்சிலிக்கிழங்கு, உப்பு (தேவையானளவு), மிளகு, சாதிபத்திரி, கொத்தமல்லி ஒரேயளவாக எடுத்துக் கழுவி நீர்விட்டரைத்து ஒருகிராம் உருட்டி உலர்த்தவும். இதனை நெய்யில் நல்லெண்ணெயில் பொரித்து உணவுடன் எடுக்க வாயிலைப்பு, பசியின்மை, கழிச்சல், சீரணப்பிணிகள் இவைகள் தீரும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விடயங்களில் பிரதமர் ரணில் தலையீடு செய்ய முடியாது!



## பிரதி வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் விடயங்களில் பிரதமரோ அல்லது நாடாளுமன்றமோ தலையீடு செய்ய முடியாது என பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.**

அவ்வாறு தலையீடு செய்ய முயற்சித்தால் அதனை நாம் எதிர்ககின்றோம்.

அரசியல் சாசனத்தின் 35ம் சரத்து குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டிருந்தார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவிற்கு எதிரான வழக்கு ஒன்றின் போது பதவியில் இருக்கும் காலத்தில் மட்டுமே வழக்குத் தொடர முடியாது என நீதிமன்றம் அறிவித்திருந்தது.

அனைவருக்கும் சட்டத்தை சமனாக்கும் நோக்கில் 19ம் திருத்தச் சட்டம் அமுல் படுத்தப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு சாட்சியாளராகவே அழைக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை பாதுகாப்பதனைப் போனறே, பிரஜைகளின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என அஜித் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினது செயலை எதிர்த்து 55 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடி ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 55 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்துடன் கூடிய கடிதம் ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழு தனது எல்லை மீறி செயற்படுவதாக அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்காக அவரை தமது அலுவலகத்திற்கு வருமாறு ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்தது.

ஆணைக்குழுவின் இந்த நடவடிக்கைக்கு மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 70 | 40 | 40 | 50-60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 90 | 80 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 60 | 50 | 40 | 40 |
| தக்காளி | 40 | 60 | 60 | 60 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 40 | 40 | 40 | 40 | 40 | 30 |
| கரட் | 120 | 120 | 100 | 120 | 120 | 120 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 50 | 40 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 70 | 60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 60 | 80 | 80-100 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 70 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 160 | 140 | 100 | 80 | 80 | 90 |
| வெண்டிக்காய் | 60 | 120 | 40 | 50 | 40-60 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | 60 | 80 | -- | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 50 | 70 | 60 |
| லீக்ஸ் | 200 | 160 | 100 | 160 | 160-180 | 150 |
| பீற்றூட் | 60 | 50 | -- | 60 | 40 | 40 |
| கறிமிளகாய் | 100 | 80 | 80 | 80 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 400 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 200 | 200 | 100 | 160 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 60 | 30 | -- | -- | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 200 | 150 | 120 | 160 | 120-200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 60 | 50 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 100 | 100 | 100 | -- | 120 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | -- | 50 | 40 | 60 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 348

மிது மிதுலா

தினசரி கலண்டரில் இருவரி வாசகம் போல நாளுக்கு நாள் புதுப்புது அர்த்தம் தருவதே வாழ்க்கை...

வேந்தன் பெருமாள்





கமல் நந்தினி




ரவி ராஜா




ஜெயராசா டிலக்சன்




சந்திரா தங்கராசா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீனாவுடனான போர்ப் பயிற்சியை இலங்கை மறைக்க முனைவது ஏன்?

கடந்த மாத இறுதியில் சீன - இலங்கைப் படையினருக்கு இடையில் ஆரம்பிக்கப்பட்ட போர்ப்பயிற்சிக்கு, சீனா வைத்திருக்கும் பெயர் பட்டுப்பாதை ஒத்துழைப்பு 2015 என்பதாகும்.

சீனா தனது கனவுத் திட்டமான பட்டுப் பாதை திட்டத்தை செயற்படுத்துவதற்கு பெருமளவு வளங்களை ஒதுக்கி பல்வேறு நாடுகளையும் தன்பக்கம் திருப்பி வருகிறது. அது முற்றிலும் வணிக நோக்கம் கொண்ட திட்டம் என்றே சீனாவினால் கூறப்பட்டு வந்தாலும அதன் பின்னால் மிகப்பெரிய இராணுவ ஆதிக்க நோக்கம் ஒழிந்து கிடப்பதாக பொதுவான விமர்சனங்கள் உள்ளன.

இலங்கையும் இந்த கடல்சார் பட்டுப்பாதை திட்டத்தில் இணைந்துகொள்ள முன்னைய ஆட்சிக்காலத்தில் ஒப்புதல் வழங்கியிருந்தது. ஆனால் புதிய ஆட்சி அமைந்த பின்னர், பட்டுப் பாதைத் திட்டம் தொடர்பான இலங்கையில் நிலை என்னவென்பது தெளிவற்றதாகவே இருக்கிறது.

**எனினும் பட்டுப்பாதை ஒத்துழைப்பு 2015 என்ற பெயரை இலங்கைப் படையினருடனான போர்ப்பயிற்சிக்கு சீனா சூட்டியிருப்பது முக்கியத்துவம் வாயந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. தனது பட்டுப்பாதை திட்டம் உலகளாவிய செழிப்பையும், வர்த்தக விருத்தியையும் மட்டுமே நோக்கமாகக் கொண்டது என்று சீனா கூறி வந்திருக்கிறது. குறிப்பாக இந்தத் திட்டத்தின் மூலம் ஆசிய நாடுகள் செழிப்படையும் என்று ஆசை காட்டி வந்திருக்கிறது. அதன்மூலமே இந்தத் திட்டத்திற்குள் பல நாடுகளைக் கவர்ந்திழுத்திருக்கிறது.**

ஆனால் இதன் பின்னாலுள்ள இராணுவ நோக்கத்தை, போர்ப்பயிற்சி ஒன்றுக்கு, பட்டுப்பாதை ஒத்துழைப்பு என்று பெயர் சூட்டியதன் மூலம் சீனா சந்தேகம் கொள்ள வைத்திருக்கிறது. அதுவும் தற்போதைய தருணத்தில் இப்படியானதொரு பெயருடன் நடத்தப்படும் போர்ப்பயிற்சியில் ஈடுபடுவது குறித்து இலங்கை அரசாங்கம்கூட சற்று சங்கடத்துக்கு உள்ளாகியிருக்கக்கூடும்.

இந்தியா, சீனா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் சீரான உறவைப் பேணவும், எந்தத் தரப்பையும் சாராமல் செயற்படவும் எத்தனிக்கும், இலங்கை அரசாங்கத்துக்கு, சீனாவின் இந்தப் பெயர் சூட்டல் விருப்பத்துக்குரிய ஒரு விடயமாக இருக்காது.

பட்டுப்பாதை திட்டம் வணிக ரீதியானதல்ல, இராணுவ நோக்கத்தையும் உள்ளடக்கியது என்பதற்கு, சீனாவின் பெயர் சூட்டலே முதல் ஆதாரமாகும். சீனாவில் அரசியல், இராணுவம், பொருளாதாரம் மட்டுமன்றி இலக்கியங்கள்கூட எல்லாமே ஒரே இலக்கினை நோக்கி ஒன்று குவிக்கப்பட்டவை.

அந்தவகையில்தான், சாதாரண வணிகத் தட்டம் என்று வெளிப்படையாகக் கூறிக் கொள்ளப்பட்ட பட்டுப்பாதைத் திட்டத்தின் பெயரிலேயே போர்ப்பயிற்சியையும் சீனா தொடங்கியிருக்கிறது. கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் போது, பாதுகாப்புத் தொடர்பான உடன்பாடு ஒன்றும் செய்து கொள்ளப்பட்டது.

அதுபற்றிய முழுமையான விபரங்கள் அப்போது வெளியிடப்படவில்லை. அந்த உடன்பாட்டில் இடம்பெற்ற கூட்டுப் போர்ப் பயிற்சிகளை மேற்கொள்ளும் திட்டத்தின் கீழ் தான், இந்தப்போர்ப்பயிற்சிநடத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்கு சீனா ஆயுதங்களை வழங்கி உதவி செய்திருந்தது. போர் முடிவுக்கு வந்த பின்னர், சீன பாதுகாப்பு உயர் மட்டங்கள் தொடர்ச்சியாக இலங்கைக்கு மேற்கொண்ட பயணங்களின் மூலம் இலங்கைப் படைகளுடன் நெருக்கம் ஏற்படுத்தப்பட்டது.

**இலங்கை - சீனப் படையினருக்கு இடையில் பயிற்சிகள், ஒத்திகைகள் போன்றவற்றை அதிகரிப்பதன் மூலம், இருதரப்பு உறவுகளை புதிய கட்டத்துக்கு கொண்டுசெல்ல சீனா முடிவெடுத்திருந்தது.**

கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக கொழும்பு, திருகோணமலை உள்ளிட்ட நகரங்கள், சீன ஜெனரல்களின் பயணத் திட்டத்தில் முக்கியமான இடங்களாக இருந்து வந்ததை தெளிவாக அவதானித்திருக்கலாம். இந்தப் பயணங்களின்போதும், சீன ஜனாதிபதியின் பயணத்தின் போதும், இலங்கைப் படையினருக்கு சீனாவில் பயிற்சி வசதிகளை அதிகரிக்கவும் கூட்டுப் 'போர்ப்பயிற்சிகளை மேற்கொள்ளவும் இணக்கப்பாடுகள் எட்டப் பட்டிருந்தன.

இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிப்பதற்கான இடங்களை அதிகரித்துள்ள சீனா இலங்கைப் படையினருடனான பயிற்சிகளின் மூலம் தானும் புதிய அனுபவங்களை கற்றுக் கொள்ள முனைகிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான வெற்றிகரமாகச் செயற்பட்ட இலங்கைப் படையினரின் அனுபங்கள் இப்போது சீனாவுக்குத் தேவைப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாகவே இலங்கையில் நடத்தப்படும் போர்ப்பயிற்சிகள், பாதுகாப்புக் கருத்தரங்குகளில் சீனா முழுமையாகப் பங்கேற்று வந்திருக்கிறது.

குறிப்பாக இலங்கையின் சிறப்பு படைப் பிரிவுகள் கடற்படை விமானப்படையுடன் இணைந்து ஆண்டுதோறும் நடத்தும் நீர்க் காகம் என்ற போர்ப்பயிற்சிக்கு சீனா தனது இராணுவ அணிகளை அனுப்பி வருகிறது.

அதேவேளை, கடற்படை, இராணுவம் ஆகியவற்றினால் ஒழுங்குபடுத்தப்படும் பாதுகாப்புக் கருத்தரங்குகளிலும் சீனா பங்கேற்று வருகிறது. இதற்குப் பிரதான காரணம் சீனாவுக்கும் தீவிரவாத அச்சுறுத்தல்கள் இருக்கின்றன. குறிப்பாக வடமேற்கில் உள்ள சீனாவின் மிகப்பெரிய மாகாணமான ஜின்ஜியாங் மாகாணத்தில் பல தீவிரவாத தாக்குதல்கள் நடந்துள்ளன.

பல இனக்குழுக்கள் வாழுகின்ற ஜின்ஜியாங் மாகாணம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மொங்கோலியா, கசகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன் எல்லையைக் கொண்டுள்ளது. இங்கு இஸ்லாமிய தீவிரவாத அச்சுறுத்தல்கள் இருப்பதுடன் ஆங்காங்கே சில வன்முறைகளும் நடந்திருக்கின்றன. இவற்றை சீனா இரும்புக் கரத்துடன் அடக்க முயன்றாலும், மத்திய ஆசியா, மத்திய கிழக்கு வழியாக தீவிரவாதம் தனது நாட்டுக்குள்ளேயும் நுழைந்துவடுமோ என்று சீனா கவலை கொண்டுள்ளது. எனவே தீவிரவாத முறியடிப்புக் குறித்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் சீனா ஈடுபட்டு வருகிறது.

அதனால்தான், விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்பதில் வெற்றிகண்ட இலங்கைப படைகளின் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வது மற்றும் இலங்கைப் படைகளுடன் இணைந்து போர்ப்பயிற்சிகளில் ஈடுபடுவதில் சீனா ஆர்வம் காட்டி வருகிறது. இந்தியா உள்ளிட்ட நாடுகளும் கூட இந்த விடயத்தில் குறியாகவே இருக்கின்றன என்பது உண்மை.

பட்டுப்பாதை ஒத்துழைப்பு 2015 என்ற பெயரில் சீனாவில் நடத்தப்பட்டுள்ள இருபது நாள் போர்ப்பயிற்சிலும்கூட தீவிரவாத முறியடிப்பு குறித்த பயிற்சிகளே இடம்பெற்றுள்ளன. இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 32 பேரும், சீனாவின் மக்கள் ஆயுத பொலிஸ் படையைச் சேர்ந்த 40 பேருமாக மொத்தம் 72 பேர் இந்தப் போர்ப்பயிற்சியில் பங்கெடுத்திருந்தனர்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ், இந்தப் புதிய போர்ப்பயிற்சியின் முதற்கட்டம் கடந்த மார்ச் மாதம் 29 ஆம் திகதி சீனாவின் தென்பகுதியில் உள்ள குவாங்சோ இராணுவ பயிற்சித் தளத்தில் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த 17 ஆம் திகதியுடன் இந்தப் போர்ப்பயிற்சிகள் நிறைவடைந்தன.

இருநாட்டுப் படைகளும் தத்தமது போராற்றலைப் பெருக்கிக்கொள்ளும் நோக்கில் குறிப்பாக தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் தமது திறனை அதிகரித்துக் கொள்வதற்கே இந்தப் போர்ப்பயிற்சியை மேற்கொண்டன. ஒரு தரப்பிடமிருந்து மற்றத் தரப்பு கற்றுக் கொளவதற்கும், தீவிரவாதம் முறியடிப்பில் தமது ஆற்றலை அதிகரித்துக் கொள்வதற்கும் இந்தப் போர்ப்பயிற்சி மேற்கொள்ளப்பட்டதாக சீனாவின் பாதுகாப்பு இணையத்தளமான சைனா மிலிட்டரி ஒன்லைன் தெரிவித்திருந்தது.

மார்ச் 29 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்ட முதற்கட்டப பயிற்சியின் போது, முன்னேற்றமடைந்துள்ள நவீன தீவிரவாத எதிர்ப்புச் செயற்பாடுகள் மற்றுத் தந்திரோபாய பயிற்சிகள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது. தீவிரவாத எதிர்ப்பு ஒத்திகையின்போது சுடுதல், கைப்பற்றுதல், ஏறுதல் ஆகிய விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

தந்திரோபாய பயிற்சிகளில், பிரதானமாக கட்டடங்களில் தேடுதல் நடத்துதல், பணயக் கைதிகள் மீட்பு விமான, பஸ் கடத்தல்காரர் களுக்கு எதிரான நடவடிக்கை ஆகியன உள்ளடக்கப்பட்டிருந்ததாக சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் பயிற்சித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் சூ ஹாய்ஹுய் தெரிவித்திருந்தார்.

**சீன - இலங்கைப் படைகளுக்கு இடையிலான இந்தப் போர்ப்பயிற்சியின் இரண்டாவது கட்டம், வரும் ஜூன்மாதம் இலங்கையில் இடம பெறவுள்ளது. இதில் பங்கேற்பதற்காக சீன இராணுவத்தின் பல விசேட நடவடிக்கைக் குழுக்கள் இலங்கைக்கு வரவுள்ளன. இந்த இரண்டாவது கட்ட பட்டுப்பாதை ஒத்துழைப்பு** 2015 போர்ப்பயிற்சியில் இலங்கை இராணுவத்தின் தாக்குதல் படைப்பிரிவுகள் மற்றும் சிறப்பு நடவடிக்கைகள் படைப்பிரிவுகள் பங்கேற்கவுள்ளன. இவையே விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் முக்கியமான பங்கை ஆற்றியிருந்தன.

இதற்கிடையே இந்தப் போர்ப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு, முடியும் வரை, இதுபற்றிய தகவல்களை இலங்கை அரசாங்கமோ, இராணுவமோ வெளியில் மூச்சுக்கூட விடவில்லை. தற்போதைய நிலையில் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இலங்கை அரசாங்கம் இதனை மறைத்திருக்காது, அதற்கான அவசியமும் இல்லை.

அதேவேளை இன்றைய நவீன உலகில் போர்ப்பயிற்சிகள் என்பது, நேச நாடுகளுக்கு இடையில் மட்டுமன்றி, பகை நாடுகளுக்கு இடையில் கூட மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இலங்கை அரசாங்கம் இதனை மறைக்க வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் மறைக்க முயன்றுள்ளது. இது எங்கோ இலங்கைக்கு அழுத்தங்கள் உள்ளன என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைக்கு அழைத்தமை புத்தாண்டுப் பரிசாம்- மகிந்த

(கொழும்பு)

**இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு வினால் விசாரணைக்கு அழைக்கப்பட்டமை புத்தாண்டுப் பரிசு என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



ஹம்பேகமுவ ரஜமகா விஹாரையில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தேசிய பாதுகாப்புக்கு இப்போது அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. விஹாரைகளில் பூஜை நடத்தக் கூட சுதந்திரம் இல்லை.

திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு நான் அமைச்சர் பதவியை வழங்கியது ஒரு ஊழல் என்று கூறப்படுகிறது.

நாட்டின் ஜனாதிபதியாக இருந்து கொண்டு, அமைச்சர் ஒருவரை நியமிக்க முடியாவிட்டால், அந்தப் பதவி தேவையற்றது.

அத்துடன், எமது ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த அபிவிருத்தித் திட்டங்கள் புதிய அரசாங்கத்தினால் இப்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மைத்திரி அரசாங்கத்தை குழப்பும் எதிர்க்கட்சியினர்

அரசாங்கத்தை குழப்பும் நோக்கிலேயே எதிர்க்கட்சி செயற்படுவதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

கல்வி இராஜாங்க அமைச்சர் வே.ராதாகிருஸ்ணன் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

19ஆவது அரசியல் அமைப்பு சீர்த் திருத்தத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

உண்மையில் அவர்களுக்கு நாட்டின் மீதோ நாட்டு மக்கள் மீதோ அக்கறை இல்லை.



அவர்களது நோக்கம் அரசாங்கத்தை கவிழ்ப்பதே ஆகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், அவர்கள் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை வலியுறுத்துகின்றனர்.

அது சிறுபான்மை கட்சிகளுக்கு பாதகமான ஒன்றாகவே அமைகின்றது.

புதிய தேர்தல் முறையானது, சிங்கள கட்சிகளின் ஆதிக்கத்தை மீள உறுதிச் செய்துக்கொள்ளும் ஒரு ஏற்பாடே எனவும் கல்வி இராஜாங்க அமைச்சர் வே. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். (இ-5)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு கோத்தபாய கடிதம் அனுப்பிவைப்பு



(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடிதம் ஒன்று அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடித்தத்தில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் அவர் ஆஜராக வேண்டிய தினத்தை வேறு ஒரு தினத்திற்கு மாற்றி தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதம் 23 மற்றும் 27ஆம் திகதிகளில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு கோத்தபாய ராஜபக்ஷவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி மிஹின் லங்கா நிறுவனம் தொடர்பாகவும் ஏப்ரல் 27 ஆம் திகதி அவன்கார்ட் தொடர்பாகவும் முன்னாள் பாதுகாப்பு செயலாளரிடம் விசாரணை மேற்கொள்ளப்படவிருந்தது.

எனினும் குறித்த இரண்டு நாட்களிலும் தன்னால் இலஞ்ச் ஊழல் ஆணைக்குழுவிற்கு தவிர்க்க முடியாத காரணங்களினால் வருகை தர முடியாதென அவர் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். (இ-5)

# விமல் வீரவன்ச குறித்து தீர்மானம் எடுக்கவில்லை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எந்த ஒரு கட்சியையும் அல்லது நபரையும் இதுவரை நீக்கவில்லை என சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை விமல் வீரவன்ச தொடர்பாக எவ்விதமான பேச்சு வார்த்தைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இருப்பினும் விமல் வீரவன்ச உட்பட 36 உறுப்பினர்களுக்கு தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்வதை தடுக்க, தேசிய சுதந்திர முன்னணியை கட்சியில் இருந்து நீக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வேட்புமனு தாக்கல் வழங்கும் வரை குறித்த தீர்மானத்தை வெளியிடாமல் இருப்பதற்கு முடிவெடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

சுதந்திர முன்னணியின் வேட்பு மனு தாக்கல் குழுவின் பிரதானி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்பதனால் இவ்வாறான நிலைமை தோன்றியுள்ளதாக தெரிய வருகிறது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### வெற்றியின் திறவுகோல் விடாமுயற்சி

சரியான நேரத்தில் சரியான முறையில் சரியான அளவில் செய்யப்பட்ட எந்தவொரு முயற்சியும் தோற்றதாக சரித்திரம் இல்லை.

தோல்வியைவிட தோல்வி பற்றிய பயம்தான் அதிகம் நம்மை ஆட்டிப்படைக்கிறது. ஒரு காரியம் நடைபெற வேண்டி ஒருவரை சந்திக்கிறோம். அந்த செயல் வெற்றி பெற்றாக வேண்டும். அதற்கு குறிக்கோளுடன் கூடிய பேச்சு, தெளிவான சிந்தனை, கவனமுடன் கேட்டல், உபயோகமான செய்திகளைத் தெரிந்து வைத்திருத்தல், சரியான வழிமுறைகளைப் பின்பற்றுதல், சூழ்நிலையை அனுசரித்துப்போதல் ஆகிய 6 சூத்திரங்களைக் கடைப்பிடித்தால் அவை நமது வெற்றிக்கு நிச்சயம் கைகொடுக்கும்.

வேலையால் கரைந்த மனிதர்களைவிட கவலையால் சரிந்த மனிதர்களே இங்கு அதிகம். கவலை என்பது நமக்கு நாமே போட்டுக் கொள்ளும் விலங்கு. நிதானமாக செயற்படும் ஒருவனை எந்த சூழ்நிலையும் முட்டாளாக்க முடியாது.

தோமஸ் அல்வா எடிசன் ஒரு பெரிய விஞ்ஞானி. அவரது மாணவப் பருவத்தில் பாடசாலை ஆசிரியர் ஒருவர் அவருடைய கோணலான தலையைப்பார்த்து இவனுடைய தலை அமைப்பு மோசமாக இருக்கிறது. இவன் என்ன படித்தாலும் அது இவன் மூளையில் ஏறாது என்று கூறினார். இதைக் கேட்ட எடிசனின் தாயார் 'என் மகனை எப்படியும் பெரியவனாக்குவேன்' என்று அவருக்குச் சவால் விட்டதுடன் அவனுக்கு சிரமப்பட்டு பாடங்களை கற்றுக்கொடுத்தார். அன்னையின் விடாமுயற்சியாலும் தன்னுடைய உழைப்பாலும் எடிசன் மாமேதையானார். அப்பொழுது அவர், 'மனிதன் கடமைப்பட்டிருப்பது மூளைக்கு அல்ல, முயற்சிக்கே. கடவுள் வரங்களை விற்பனை செய்கிறார். முயற்சியே அவற்றின் விலை' என்று கூறினார்.

மாவீரன் நெப்போலியன் போர்க்களத்தில் இருந்தாலும் சரி, மற்ற நேரங்களில் தன் அலுவலங்களில் ஏதாவதொன்றில் இருந்தாலும்சரி, தன்னை சந்திக்க வருபவரிடம் கேட்கிற முதல் கேள்வி, 'நீ கொண்டு வந்திருக்கும் செய்திகளில் மோசமான செய்தி ஏதாவது இருந்தால் அதை முதலிலேயே என்னிடம் சொல்லிவிடு' என்பதுதான். 'ஏன் இப்படி கேட்கிறீர்கள்' என்று அவருடைய உதவி தளபதி ஒருநாள் அவரிடம் கேட்டதற்கு நெப்போலியன் இப்படிச் சொன்னான்.

'வாழ்க்கை ஒரு போர்க்களம். அதில் மோசமான எதிரியைத்தான் முதலில் நாம் எதிர்கொள்ள வேண்டும். ஏனென்றால் கெட்ட செய்திகளில்தான் சிந்தித்து செயலாற்ற வேண்டிய விடயங்கள் இருக்கும். நல்ல செய்திகள் வெறுமனே ரசித்து மகிழ்கிற மாதிரி இனிமையானவைகளாக இருப்பதுதான் இயல்பு. அதனால் அந்த நல்ல செய்திகளில் நம் திறமைக்கு சவாலாக எதுவும் இருக்க வாய்ப்பில்லை' என்றார்.

ஒரு அரசனிடம் விலை மதிக்க முடியாத ஒரு பெரிய வைரக்கல் இருந்தது. அதைத் தன் நாட்டின் பெருமைக்குரிய பொருளாக அவன் கருதினான். ஒருநாள் அந்த வைரக்கல்லில் தலைமுடி அளவில் கீறல் ஒன்று விழுந்தது. வைரத்தின் அழகு போயிற்றே என வருந்தினான் மன்னன். தன் நாட்டிலுள்ள நகை விற்பனையாளர்களை வரவழைத்து ஆலோசித்தான். 'இந்த வைரத்தை இனி ஒன்றும் செய்ய முடியாது. அது இன்னும் விரிசல் கொடுக்கும்' என்றனர் வியாபாரிகள்.

'இந்த வைரத்தை அதன் பழைய மதிப்பிற்கு கொண்டு வருபவருக்கு தக்க பரிசு வழங்கப்படும்' என்று அரசன் அறிவித்தான். ஓர் ஏழை பொற்கொல்லன் முன்வந்து 'அரசே! இந்த கீறலை வைத்தே வைரத்தின் மதிப்பை பல மடங்கு உயர்த்த முடியும்' என்றான். வைரக்கல் அவனிடம் ஒப்படைக்கப்பட்டது.

சில நாட்களுக்கு பிறகு அந்த பொற்கொல்லன் ஒரு சிறிய நகைப் பேழையுடன் திரும்பி வந்தான். அதன் மூடியைத் திறந்தான். அரசன் பிரமித்து போனான். வைரத்தின் மீது அழகான ரோஜா செதுக்கப்பட்டிருந்தது. அவனுக்கு கவலை அளித்த கீறல், ரோஜாவின் காம்பாகி விட்டது. இது ஒரு கதைதான். ஆரம்பத்தில் நமக்கு கஷ்டம் என்று தோன்றுபவை காலப்போக்கில் இன்பமானதாகத் தோன்றும்.

முட்களுக்கு மத்தியில்தான் ரோஜாக்கள் அழகாக மலர்கின்றன. பிரச்சினைகளுக்கு மத்தியில்தான் மனிதனின் வாழ்க்கை பிரகாசிக்கின்றது.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மன்மத" வருட இராசி பலன்கள்

## எட்டாம் இடத்தில் குரு வருகை; இறை வழிபாட்டால் வரும் நன்மை!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**எட்டாம் இடத்தில் குரு வருகை இறை வழிபாட்டால் வரும் நன்மை!**

**மற்றவர்கள் கருத்துக்களை ஏற்றுக்கொண்டாலும் தன் மனதில் பட்டதையே முடிவெடுத்துச் செய்யும் மகர இராசி நேயர்களே!**

அவசரக்காரர்களுக்கு மத்தியில் நிதானத்தைக் கடைப்பிடித்து நிம்மதியை வரவழைத்துக் கொள்பவர்கள் நீங்கள். 'மந்தன்' எனப்படும் 'சனி' உங்கள் ராசிநாதனாவார். அந்த அடிப்படையில் உங்களுக்கு படபடப்பும், பதைபதைப்பும் வராமல் பணியாற்றும் அமைப்பு உண்டு. கடமைக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். குடும்பத் தகராறுகள் கொடி கட்டிப் பறந்தாலும் அதை வெளிக் காட்டிக்கொள்ள மாட்டீர்கள்.

**ஆண்டின் தொடக்கம் ஆனந்தம்!**

புத்தாண்டு தொடங்கும்பொழுது குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசியில் பதிவதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். எடுத்த காரியதை எளிதில் செய்து முடிப்பீர்கள. கொடிகட்டிப் பறந்த பிரச்சினைகள் ஒவ்வொன்றாக மாறும். கூட்டுக் குடும் பத்திலிருந்த தகராறுகள் அகலும்.

வக்ர இயக்கத்தில் இருக்கும் குருபகவான் ஆண்டு தொடங்கிய இரண்டு நாளில் வக்ர நிவர்த்தியாகிறார். என்னதான் விரயாதிபதியாக இருந்தாலும், பார்க்கும் குருவிற்கென்று சில பலன்கள் உண்டு. புண்ணிய காரியங்களுக்குச் செலவிடுவது முதல் புதிய ஒப்பந்தங்களை வரவழைத்துக் கொள்வது வரை குருவின் அருட்பார்வை தரும் பலனாகும்.

அந்த அடிப்படையில் களத்திர ஸதானத்தில் சஞ்சரிக்கும் குருவால் களத்திர ஒற்றுமை பலப்படும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். பழக்க வழக்கங்கள் அதிகரிக்கும். பாதியில் நினற பணி மீதியும் தொடரும். தொழில் வளர்ச்சி கூடும. கனிவாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக்கொள்ளும் உங்களுக்கு பணியிலிருந்த தொய்வும் அகலும.

அஷ்டமாதிபதி சூரியனோடு 4 ஆம் இடத்திற்கு அதிபதியான செவ்வாய் மற்றும் 6 ஆம் இடத்திற்கு அதிபதியான புதன் ஆகியவை இணைந்து சஞ்சரிப்பதால் கடன் வாங்கி கட்டிய வீட்டின் விளைவாக வட்டி ஏறி, வட்டி ஏறி அதைக் கட்ட முடியவில்லையே என்ற கவலை அதிகரிக்கலாம். எனவே கட்டிய வீட்டை விற்று ஒரு சிலர் கடனை அடைக்கும் சூழ்நிலை உருவாகலாம்.

வருடத் தொடக்கத்தில் ராகு-கேதுக்களின் ஆதிக்கம் நன்றாக இருக்கிறது. 9 ஆம் இடத்தில் ராகு இருப்பதால் பொன், பொருட்கள் வந்து சேரும என்பர். எனவே தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்குவதில் நீங்கள் ஆர்வம் காட்டுவீர்கள்.

**குரு பார்வை கொடுக்கும் யோகங்கள்!**

நவக்கிரகங்களில் நல்ல கிரகமாக விளங்கும் குருபகவான் ஏழாமடத்தில் சஞ்சரித்து உங்கள் ராசியை பூரண பலத்தோடு பார்க்கிறார். உச்சம் பெற்ற குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிந்ததால் அச்சமில்லாத வாழ்க்கை அமையும் என்பார்கள். ஆனால் அந்த குரு வருடத் தொடக்கத்தில் வக்ரத்தில்தான் இருக்கிறார். இருப்பினும் வருடம் பிறக்கும பொழுது குருச்சந்திர யோகமும், குரு ஹோரையும் அமைகின்றது.

எனவே, பொருளாதார நிலை சிறப்பாகவே இருக்கும் என்று சொல்லலாம். பூரணமாக உடல் நலம் தராவிட்டாலும் 90 சதவிகிதம் தொல்லைகள் அகன்று செயற்படத் தொடங்குவீர்கள். உறவினர் பகை அகலும். குருவின் பார்வை 3, 11 ஆகிய இடங்களிலும் பதிகின்றது.

எனவே, விலகிச் சென்ற சகோதரர்கள் வியாபார நலன்கருதி உங்களைத் தேடி வருவர். வழக்குகளில திசை திருப்பம் ஏற்படும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். வாகன யோகம் உண்டு. புதிய பங்குதாரர்களால் தொழிலில் லாபம் அதிகரிக்கும்.

**எட்டாமிடத்து குரு என்ன செய்யும்?**

இதுவரை உங்கள் ராசிக்கு 7 இல் சஞ்சரித்து வந்த குருபகவான் ஆனி மாதம் 20 ஆம் திகதி முதல் 8 ஆம் இடமான சிம்மத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அஷ்டமத்தில் சஞ்சரிக்கப் போகும் குருவால் உள்ளம் வாடும் சம்பவங்கள் நடைபெறும் என்று சொல்வது வழக்கம்.

ஆனால், உங்கள் ராசியைப் பொறுத்தவரை அந்த நியதியில் கொஞ்சம் மாறுபாடு உண்டு. 12 இற்கு அதிபதியான குரு 8இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில் செயற்படும். எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

குருவின் பார்வை பலம் உங்களுக்கு பக்கபலமாக இருக்கும். குரு 2, 4, 12 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகின்றார்.

**இரண்டினை குருதான் பார்த்தால்**

**திரண்டதோர் செல்வம் சேரும்!**

**நான்கினை குருதான் பார்த்தால்**

**நலம் யாவும் வந்துசேரும்!**

**பனிரெண்டைக் குருதான் பார்த்தால்**

**பண விரயம் சுபமாய் மாறும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது தன ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் தனவரவு தாராளமாக வந்துகொண்டேயிருக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிரபாரத்தபடி அமையும். உடனிருப்பவரகள் உங்கள் பணிக்கு ஒத்துழைப்பு செய்வர். அதே நேரத்தில் 12 ஆம் இடத்தையும் அல்லவா குரு பார்க்கிறார்.

எனவே சேமிக்க இயலுமா என்பது சந்தேகம்தான். குடும்பச் சுமை கூடுதலாக இருக்கும். வீட்டிற்குத் தேவையான தங்கம், வெள்ளி போன்ற விலை உயர்ந்த ஆபரணங்களை வாங்கி வைப்பீர்கள். கட்டிய வீட்டை விற்று விட்டோமே என்ற கவலை மாறும் விதத்தில் புதிய சொத்துக்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். 4 ஆம் இடத்தை குரு பார்ப்பதால தாய்வழி ஆதரவு பெருகும். தாயின உடல் நலம் சீராகும். புதிய வாகனங்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அஷ்டமத்து குரு அலைச்சலையும், இடமாற்றத்தையும் ஒரு சிலருக்கு ஏற்படுத்தினாலும் ஆதாயத்தைக் கொடுப்பதில் குறை ஏற்படாது.




**நலம் தரும் ராகு-கேது பெயர்ச்சி!**

மார்கழி மாதம் 23 ஆம் திகதி அன்று சிம்ம ராசியில் ராகு சஞ்சரிக்கப் போகிறார். அதே நேரத்தில் கும்ப ராசியில் கேது சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் உங்களுக்கு ஒரு சோதனைக் காலமாகவும், சாதனைக்காலமாகவும் இருக்கும்.

மறைந்த ராகு நிறைந்த தனலாபதைத் தரும் என்றாலும், சூரியன வீட்டில் அல்லவா சஞ்சரிக்கப் போகின்றார். சூரிய ராகு சேர்க்கை சுகங்களை குறைக்கும் என்பார்கள். அதோடு வாக்கு ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியுமா என்பது சந்தேகம்தான்.

எனவே சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை தக்க விதத்தில் செய்து கொண்டால் ராகு-கேதுக்களால் மேலும்நன்மையை அடைய முடியும்.

**சனியின் சஞ்சார நிலை!**

சனி பகவான் வருடத் தொடக்கத்திலேயே வக்ர இயக்கத்தில் தான் இருக்கிறார். 12.6.2015 முதல் துலாம் ராசியில் வக்ரமடைகின்றார். 30.07.2015 இல் வக்ர நிவர்த்தியாகிறார். பிறகு 05.09.2015 இல் விருச்சிக ராசியில் வக்ர நிவர்த்தியடைகிறார். பிறகு 26.03.2016 இல் மீண்டும் விருச்சிக ராசியில் சனி வக்ரமடைகின்றார். இங்ஙனம் புத்தாண்டில் சனி வக்ர இயக்கத்திலும் இருக்கிறார்.

உடனுக்குடன் வக்ர நிவர்த்தியாகியும் சஞ்சரிக்கின்றார். வக்ரத்தில் பின்னோக்கிச் சென்று துலாத்தில் சஞ்சரிக்கும் பொழுது உங்களுக்கு தொழில் மேன்மை உண்டாகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். மற்ற வக்ரங்களில் மனதில் நினைத்தவற்றை மறுநிமிடமே செய்ய இயலாது. மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை உயரும். கூட்டாளிகள் குண மறந்து நடந்துகொள்ள மாட்டார்கள். வீட்டிலும் எதிர்ப்பு, வெளியிலும் எதிர்ப்பு என்ற நிலை உருவாகலாம்.


போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண வேண்டிய நேரமிது. ஆற்றல் மிக்க கூட்டாளிகள் விலகாமல் பார்த்துக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். குழந்தைகளின் படிப்பு செலவிற்காகவும், அன்னிய தேசம் சென்று எண்ணியபடி படிக்கவும் ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உண்டு. இக்காலத்தில் அனுமனை வழிபட்டால் ஆனந்தம் பிறக்கும்.

**குருவின் வக்ர காலம்!**

குரு 20.12.2015 இல் கன்னி ராசியில் அதிசாரம் பெறும்பொழுது 07.02.2016 இல் சிம்ம ராசிக்குள் வக்ரம் பெறும் பொழுதும் நீங்கள் எதிர்பார்க்கும் பலன்கள் ஓரளவு கிடைக்கும். அதிசார காலத்தில் உங்கள் ராசியைக் குரு பார்க்கிறார். வக்ரம் பெறும் பொழுது வளர்ச்சியைக் கூட்டுவர். எனவே இக் காலத்தில் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி நன்றாக இருக்கும்.

**வருடம் முழுவதும் வசந்தம் வர வழிபாடு!**

ராசிநாதனாகச் சனி விளங்குவதால் சனிக்கிழமை தோறும் விரதமிருந்து ஆனைமுகப் பெருமானையும், சனி பகவானையும்,



அனுமனையும் வழிபடுவது நல்லது. காகத்திற்கு எள் கலந்த சோறு வைக்கலாம். நிலவு வழிபாடும், கிரிவலமும் நிம்மதியை வழங்கும். மேலும் தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளையும் மேற்கொள்வதன் மூலம் அனைத்து நன்மைகளையும் பெறலாம்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

மகர ராசியில் பிறந்த பெண்களே, ஆண்டின் தொடக்கத்தில் குருவின் பார்வை பலத்தால் மனதற்கினிய சம்பவங்கள் நடைபெறும. குடும்பத்தில் ஏற்பட்ட குமுறல்கள் மாறும். தாய்வழி ஆதரவோடு தனவரவு அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

உறவினர்களும், நண்பர்களும் உதவிக்கரம் நீட்டுவர். குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் அஷ்டமத்து குருவின் ஆதிக்கம் இருப்பதாலும், ராகு-கேது பெயர்ச்சி, அஷ்டமத்திலும், இரண்டாம் இடத்தில் அடியெடுத்து வைப்பதாலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

உறவினர் பகை உருவாகும். குழந்தைகளால் விரயங்கள் ஏற்படலாம். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் தொல்லைகளுக்கு ஆளாக நேரிடலாம். பொதுநலத்தில் இரு ப்பவர்களுக்குப் பொறுப்புகளில் மாற்றம் ஏற்படும். ஆரோக்கியத் தொல்லையுண்டு.

குடும்பத்தில் விழாக்கள் நடத்திப் பார்க்க உகந்த நேரமிது. ஆஞ்சநேயர் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

**நாளை கும்பம்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்பதற்கு 145 மீனவர்கள் இன்று இலங்கை பயணம்!

**(இராமேஸ்வரம்)**

**இலங்கைக் கடற்படையினால் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளை மீட்க 145 மீனவர்கள் இன்று காலை இலங்கைக்கு புறப்பட்டுச் செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**



இராமேஸ்வரம், மண்டபம் மற்றும் புதுக்கோட்டை, நாகப்பட்டிணம் மாவட்டங்களில் இருந்து கடந்த ஆண்டு மீன்பிடிக்கச் சென்ற 300 இற்கும் அதிகமான மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். மீனவர்களின் 73 விசைப்படகுகளையும் பறிமுதல் செய்தனர்.


பின்னர் மீனவர்களை விடுவித்த இலங்கை அரசு, படகுகளை விடுவிக்க மறுத்துவிட்டது. பிரதமர் மோடியின் வற்புறுத்தல் காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் கட்டமாக 31 விசைப்படகுகளை இலங்கை அரசு விடுவித்தது.

2 ஆவது கட்டமாக 21 படகுகளை மீட்க . இராமேஸ்வரம் மற்றும் மண்டபத்தில் இருந்து 16 படகுகளில் 129 மீனவர்களும், புதுக்கோட்டை ஜெகதாபட்டிணத்தை சேர்ந்த 2 படகுகளில் 16 மீனவர்களும் இன்று கரைநகர், மன்னார் கடற்கரைக்கு புறப்பட்டு செல்லவுள்ளனர்.

இந்த மீனவர்களை மண்டபத்தல் உள்ள இந்திய கடலோர காவல் படையினர் அழைத்துச் சென்று இலங்கை கடற்படை அதிகாரிகளிடம் ஒப்படைக்கிறார்கள்.

பின்னர் இலங்கையில் மீனவர்கள் ஓரிரு தினங்கள் தங்கி இருந்து சேதம் அடைந்த படகுகளை மீட்டு இராமேஸ்வரம் மற்றும் ஜெகதாபட்டிணம் கரைக்கு திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

## ஐ.என்.எஸ்.விசாகப்பட்டினம் போர்க்கப்பல் வெள்ளோட்டம்



மும்பையில் உள்ள மஜோகான் கப்பல் கட்டும் தளத்தில் நேற்று முன்தினம் தொடக்கி வைக்கப்பட்டது.

இந்திய கடற்படை தளபதி ஆர்.கே. தவானின் மனைவி மினு தவான், இந்த வெள்ளோட்டத்தை தொடக்கி வைத்தார். "முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ள இந்த போர்க்கப்பல், எதிர்வரும் 2018ல், முறைப்படி கடற்படையில் இணைக்கப்படும் என, தெரிகிறது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட, "ஐ.என்.எஸ்., விசாகப்பட்டினம்" ஆயுதம் தாங்கி போர்க்கப்பலின் வெள்ளோட்டம், நேற்று முன்தினம் மும்பையில் தொடக்கி வைக்கப்பட்டது.

நவீன ஏவுகணைகள் பொருத்தப்பட்ட, ஐ.என்.எஸ்., விசாகப்பட்டினம் என்ற ஆயுதம் தாங்கி போர்க்கப்பலின் வெள்ளோட்டம்,

இந்த கப்பலின் வருகையால், இந்திய கடற்படையின் பலம் மேலும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 8 ஆயிரம் கொலைகள் 85000 கொள்ளைகள்

### தமிழகத்தில் கடந்த நான்கு ஆண்டில்

(தஞ்சாவூர்)

தமிழகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 8 ஆயிரம் கொலைகளும் 85 ஆயிரம் கொள்ளைச் சம்பவங்களும் 5 ஆயிரம் பாலியல் குற்றங்களும் இடம்பெற்றுள்ளதாக பா.ம.கவின் இளைஞர் அணித் தலைவர் டாக் டர் அன்பு மணிராமதாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகேயுள்ள ஆடுதுறை மருத்துவக்குடியில் பாமக நிகழ்ச்சி ஒன்றில் நேற்று பங்கேற்று அவர் பேசினார்.

அப்போது அவர் கூறுகையில்,

"தமிழர்களிடையே ஒற்றுமை இல்லை. இதனால் காவிரி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு உரிமைகளை இழந்து வருகிறோம்.

மேகேதாட்டுவில் கர்நாடக அரசு அணை கட்டினால் தமிழகத்தில் 25 இலட்சம் ஏக்கர் நிலங்கள் வீணாகிவிடும்.

ஏறத்தாழ 5 கோடி பேர் குடிநீருக்கு அவதியுறும் நிலை ஏற்படும். எனவே, உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டி, பிரதமரை சந்தித்து முறையிட தமிழக அரசு முன்வர வேண்டும்.

சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து ஜெயலலிதா விடுதலையாவார் என கருதி, தமிழகம் முழுவதும் 400 புதிய அரசுப் பேருந்துகளை இயக்காமல் வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால், அரசுப் போக்குவரத்துக் கழகத்துக்கு ரூ.200 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இதேபோல, சென்னை மெட்ரோ ரயில் பணி முடிந்த நிலையிலும், கடந்த 6 மாதங்களாக முடக்கி வைக்கப்பட்டுள்ளதற்கான காரணம் என்ன? இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இந்தியாவிலேயே நிர்வாகத்தில் மோசமான மாநிலமாக இருந்த பீகாரை தற்போது தமிழகம் பின்னுக்குத் தள்ளிவிட்டது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)




## 6 மாதம் வேலை செய்தால் 6 மாதம் விடுமுறையாம்

(லக்னோ)

உத்தரப் பிரதேச அரசு ஊழியர்கள் இனி 6 மாதம் வேலை பார்த்தால் போதும் 6 மாதம் விடுமுறை எடுத்துக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் உத்தரப் பிரதேச மாநிலத்தில் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் பிறப்பித்த உத்தரவில் முன்னாள் பிரதமர்களான சரண்சிங், சந்திரசேகர் மற்றும் பீகார் முன்னாள் முதலமைச்சர் கர்பூரி தாக்கூர் ஆகியோரின் பிறந்த நாட்களை அரசு விடுமுறையாக அறிவித்து உத்தரவிட்டார்.

இதன் மூலம் அரசு விடுமுறை நாட்கள் எண்ணிக்கை 35 லிருந்து 38 ஆக உயர்ந்துள்ளது. இதற்கு முன் முதலமைச்சராக பதவி வகித்த பகுஜன் சமாஜ் கட்சியின் மாயாவதி, தனது கட்சியின் நிறுவனரான கன்சிராம் பிறந்த நாள் உள்ளிட்ட தனது கட்சியின் மூத்த தலைவர்களின் பிறந்த நாளினை அரசு விடுமுறையாக அறிவித்தார். அதே போன்றதொரு விடுமுறை அரசியல் கொள்கையை அகிலேஷ் அரசும் பின்பற்றி வருவதாக கூறப்படுகிறது.

மேலும் அரசு ஊழியர்கள் வருடத்தில் மொத்தம் 6 மாதங்கள் பணியாற்றினால் போதும். எஞ்சிய 6 மாதங்களை விடுமுறை எடுத்துக் கொள்ளலாம் என அறிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## முன்னாள் முதல்வர் காலமானார்

ஒடிசா மாநிலத்தின் முன்னாள் முதல்வரும், அசாமின் முன்னாள் ஆளுநருமான ஜே.பி.பட்நாயக் நேற்று முன்தினரவு காலமானார்.

அவருக்கு வயது 89. நேற்று முன்தினம் நள்ளிரவு அவருக்கு திடீர் நெஞ்சு வலி ஏற்பட்டதையடுத்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலன் இன்றி அவர் காலமானர் அவரது உடல் புவனேஸ்வர் கொண்டு செல்லப்பட்டது.

அவரது இறுதிச் சடங்கு புரி நகரில் நடைபெறவுள்ளது. ஜானகி பல்லப்பட்நாயக், 3 முறை ஒடிசா முதல்வராக இருந்துள்ளார்.

அவரது மறைவுக்கு முதல்வர் நவீன் பட்நாயக், ஆளுநர் எஸ்.சி. ஜமீர் மற்றும் அனைத்து கட்சி தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மேலும், ஒருவார காலமாக துக்கம் அனுசரிக்கப்படுவதாக ஒடிசா அரசு அறிவித்துள்ளது. (இ-5)

## கட்டப்பஞ்சாயத்து கட்சி ஆம்ஆத்மி; அரவிந்த் கெஜ்ரிவால் சர்வாதிகாரி



(புதுடில்லி)

ஆம் ஆத்மி கட்சி தற்போது கட்டப்பஞ்சாயத்து கட்சியாக உருவெடுத்துள்ளது என்றும், ஒரு சர்வாதிகாரி இந்த கட்சியை வழி நடத்தி செல்கிறார் என்றும் கட்சியில் இருந்து விலக்கப்பட்டுள்ள மூத்த நிர்வாகியான பிரசாந்த்பூஷன் குற்றம் சாட்டினார்.

ஆம் ஆத்மி கட்சியில் முக்கிய நிர்வாகிகளான பிரசாந்த் பூஷன், யோகேந்திர யாதவ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் அண்மையில்ள நீக்கப்பட்டனர். இந்நிலையில் பிரசாந்த் பூஷன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,


ஆம் ஆத்மி கட்சியில் இருந்து என்னை விலக்கியது நியாயமற்றது. இது நீதிக்கு எதிரானது. கட்சியில் ஆரம்ப கட்ட வளர்ச்சியில் எனது பங்கு முக்கியமானதாக இருந்தது. இதனை கெஜ்ரிவால் மறந்து விட்டார்.என்னை கட்சியில் இருந்து நீக்கியது திட்டமிட்டு நடத்தப்பட்ட சதி. கட்சியில் கெஜ்ரிவால் தான் நினைத்ததை சர்வாதிகாரி போல் செயற்பட்டு முடிவு எடுக்கிறார். இவரது போக்கு நல்லதல்ல. மேலும் கட்சி கட்டப்பஞ்சாயத்து போல் காட்சி அளிக்கிறது . இவ்வாறு பூஷன் தெரிவித்தார்.

ஆம் ஆத்மியின் நிறுவன தலைவர்களில் ஒருவரான சாந்திபூஷன் செய்தியாளர்களிடம் பேசுகையில், "நாடு தன் மீது வைத்திருந்த நம்பிக்கை தன்மையை கடைப்பிடிக்காமல் ஏமாற்றி வருகிறார். தனது கட்சி மற்ற கட்சிகளை காட்டிலும் வித்திய சமானது என்று கூறுகிறார். எனக்கு தெரிந்த வரையில் அப்படி எதுவும் இல்லை," என்று தெரிவித்தார்.(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவையும் தன்னையும் அழிக்க சூழ்ச்சித் திட்டமாம்

## திஸ்ஸ அத்தநாயக்க புலம்பல்



(கொழும்பு)

முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவையும், தன்னையும் அவ மதிப்பதற்காக தற்போதைய அரசாங்கம் முயற்சித்து வருகின்ற தென பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநா யக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு திட்டத்திற்கமைய ஜனாதிபதி ஒருவரால் எந்த ஒரு உறுப்பினரையும் அமைச்சராக நியமிப்பதற்கான அதிகாரம் உள்ளதாகவும் அது ஊழல் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தன்னையும் முன்னாள் ஜனாதிபதியையும் துரத்தி துரத்தி அடிப்பதற்கான சூழ்ச்சிகளை தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்தவர் யார் என்பதும் தனக்கு தெரியும் எனவும் அவர் தெரிவித் தார்.

ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து விலகி முன்னாள் ஜனாதிபதியுடன் இணைந்தது எனது தனிப்பட்ட அரசியல் தீர்மானம் அது அரசியல் பழிவாங்கல் அல்ல என தெரிவித்துள்ளதோடு,

சட்ட ரீதியாக மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நான் தயார் எனவும் தன்மீது போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தி என்னை அவமதிப்பது மிகுந்த மன வேதனைக்குரிய விடயம் எனவும் தெரிவித்தார்.

திருடர்களை பாதுகாத்துக்கொண்டு குற்றமற்றவர்கள் மீது போலியாக குற்றம் சுமத்தப்படுவதாகவும் தன்னையும் முன்னாள் ஜனாதிபதியையும், சிரமத்திற்குப்படுத்த சில உறுப்பினர்கள் முனைந்து வருவதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# யுத்தம் இல்லை என்பது சமாதானம் என்றாகிவிடாது

## தந்தை செல்வா நினைவுப் பேருரையில் சந்திரிகா



**(கொழும்பு)**

**"யுத்தம் இல்லை என்பது சமாதானம் என்றாகி விடாது" - என்ற தலைப்பில் கொழும்பு பம்பலப்பிட்டியில் எதிர்வரும் சனிக்கிழமை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரையாற்றவுள்ளார்.**

இலங்கைத் தமிழரசுக் கட்சியினது கொழும்பு மாவட்டக் கிளை வருடாந்தம் நடத்தும் தந்தை செல்வா நினைவுப் பேருரைத் தொடரில் மேற்படி தலைப்பில் முன்னாள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரை நிகழத்துவார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 38 ஆவது நினைவு தினத்தை ஒட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளையின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில் இந்த நினைவுப் பேருரை இடம்பெறும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோர நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிப்பர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# எம்.பியிடம் விசாரணை செய்தால் சபாநாயகருக்கு அறிவிக்கப்படும்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக விசாரணை செய்யும் போது சபாநாயகருக்கு அது குறித்து முன்கூட்டியே அறிவி க்கப்படும், என இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழு வின் தலைவர் ஜகத் பாலபட்ட பெந்தி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் ஊழல் மோசடிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் விசாரணை செய்யப்பட்டால் அது குறித்து முன்கூட்டியே சபாநாயகருக்கு அறிவிக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதிகள், முனனாள் பிரதமர்கள் குறித்து விசாரணை நடத்தப்படுமாயின் அது தொடர்பில் பதவி வகிக்கும் ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை சந்தித்த போது அவர் இந்த உறுதிமொழிகளை வழங்கியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வாக்குமூலம் ஒன்றை அளிப்பதற்காக இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவிற்கு அழைத்தமை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை குறித்து பேசும் நோக்கில் சபாநாயகர் நேற்று முன் தினம் ஆணைக் குழுவின் தலைவர பாலபட்டபெந்தியை அழைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# புனரமைப்பு பணிகளுக்கென 49.58 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு பிரதேச சபையில் 2015ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 49.58 மில்லியன் ரூபாய் செலவில் வீதி புனரமைப்பு மற்றும் கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக வலி.தெற்கு பிரதேச சபை (சுன்னாகம்) தவிசாளர் தி.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி.தெற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள 10 வீதிகளை போக்குவரத்துக்கு உகந்ததாகவும் புனரமைப்பு செய்வதற்கும் பராமரிப்பதற்கும் 31. 662 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் கந்தரோடை கந்தசாமி ஆசிரியர் வீதி, புன்னாலைக்கட்டுவன் வடக்கு திடற்புலம் மயானவீதி, ஏழாலை வடக்கு 2ஆம் குறுக்கு வீதி,, சுன்னாகம் மத்தி அந்தோனியார் வீதி, உடுவில் வடக்கு காளி கோவில் வீதி, இணுவில் வல்வகுட்டையன் வீதி, தாவடி வடக்கு மயான வீதி, ஏழாலை வடக்கு ஆலங்கட்டை பிள்ளையார் வீதி, புன்னாலை க்கட்டுவன் வடக்கு ஜீ.ஜீ பொன்னம்பலம் வீதி, குப்பிளான் தெற்கு விவசாய வீதி ஆகிய வீதிகள் புனரமைப்பு செய்யப் படவுள்ளன.

அத்துடன் சபைக்கு சொந்த மான காணிகள் கட்டடங்களை உரிய முறையில்பேணுவதற்கும், புனரமைப்பு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இந்த வேலைகள் அனைத்தும் இந்த வருட இறுதிக்குள் நிறைவடையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமையை பாதுகாத்துக்கொள்ள 25 கட்சிகள் முயற்சி

(கொழும்பு)

தற்போதைய தேர்தல் முறைமையை பாதுகாத்துக்கொள்ள 25 சிறிய கட்சிகள் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, லங்கா சமசமாஜ கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட பல கட்சிகள அண்மையில் கொழும்பில் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன.

தற்போதைய விருப்பத் தெரிவு தேர்தல் முறைமை மிகவும் நியாயமானது என புதிய இடதுசாரி முனணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த முறைமையில் மாற்றம் கொண்டு வர வேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய தேர்தல் முறைமை நீக்கப்பட்டால் சிறிய கட்சிகள் பாரியளவில் பாதிக்கப்படும்.

இந்த முறைமை மாற்றப்பட மாட் டாது என ஜனாதிபதியும் பிரதமரும் இணங்கியுள்ளனர் என விக்ரமபாகு கருணாரட்ன சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



**சிதம்பரநாதன் பத்மநாதன்**

மண்டைதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி கூடலேன் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாதன் பத்மநாதன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



**திருமதி தம்பிஜயா பூமணி**

வரணியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா பூமணி கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன் கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி தணிகாசலம் குகேசமலர்**

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி பத்தமேனி, கனடா Toronto ஐ வதிவிடமாகவும் கொண்ட தணிகாசலம் குகேசமலர் கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 26 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் மு.ப.11 மணிவரை Chepel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**ஆறுமுகம் கிருஸ்ணபிள்ளை**

புங்குடுதீவு 3ஆம் வட்டாரம் குறிகாட்டுவானைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கிருஸ்ணபிள்ளை கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று பிரான்சில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை முற்பகல் 10மணிதொடக்கம் நண்பகல் 12மணிவரை 7Boulvard de Menilmontant, 75011 Paris, France (Philippe Auguse) என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**மோசஸ் சூசை மாணிக்கம்**

(மொன்றியல் மீட்பின் அன்னை மறைத்தளத்தின் ஆன்மீகப் பணியாளர்)

சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டம், இந்தியா திருநெல்வேலி பாளையம்கோட்டை, கனடா Montreal ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மோசஸ் சூசை மாணிக்கம் கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி எதிர்வரும் சனிக்கிழமை மு.ப 11.45 மணி தொடக்கம் பிற்பகல் 12.45 மணிவரை Our Lady of Deliverance Church, 9400 Rue Lajeunesse, Montreal, QC H2M 1S4, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவம் அவசியம்

## மனோ கணேசன் வலியுறுத்து

(கொழும்பு)

**சிறுபான்மை கட்சிகளின் அச்சத்தை கவனத்தில் எடுக்காமல் கொண்டு வரப்படும் எந்த ஒரு யோசனை திட்டத்தையும் தாம் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்களின் நியாயமான பிரதிநிதித் துவங்கள் உறுதி செய்யப்பட அதிக எண்ணிக்கையில் பல் அங்கத் தவர் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.**



ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், தேசிய நிறைவேற்று சபை உறுப்பினருமான மனோ கணேசனுக்கும், தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைத்துள்ள குழு அங்கத் தவர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்த கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பாக அமைச்சர்கள் டிலான் பெரேரா, எஸ். பி. திசாநாயக்க ஆகியோரும், ஜனநாயக மக்கள் முன்னணி சார்பில் மனோ கணேசனுடன் கட்சியின் உப செயலாளர் சண். குகவரதன், நிர்வாக செயலாளர் பிரியாணி குண ரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வீடமைப்பு அமைச்சு அலுவலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடல் தொடர்பில் மனோ கணேசன் தெரிவிக்கையில், சிறுபான்மை கட்சிகளின் அச்சத்தை கவனத்தில் எடுக்காமல் கொண்டு வரப்படும் எந்த ஒரு யோசனை திட்டத்தையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இன்று எங்களுடன் இனரீதியான சிறுபான்மை கட்சிகள் மட்டுமல்ல, சிங்கள மக்களை பிரதி நிதித்துவம் செய்யும் சிறு கட்சிகளும், இடது சாரி கட்சிகளும் இணைந்து கொண்டுள்ளன.

வடக்கு கிழக்கில், தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் தேசிய கூட்டமைப்பு, பிரேரிக்கப்பட்டுள்ள புதிய முறைகளின் காரணமாக பாரிய சிக்கல்களை எதிர்நோக்காவிட்டாலும் கூட, வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவ உரிமைகள் தொடர்பில் தனக்குள்ள அக்கறையை வெளிப் படுத்தும் முகமாக, நமது சிறு கட்சிகளின் பேரவையில் கலந்துக்கொண்டுள்ளது.

இந்நிலையில் இந்நாட்டில் நாம் ஓர் மிகப்பெரிய மக்கள் தொகையை பிரதிநிதித் துவம் செய்கின்றோம். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்களின் நியாயமான பிரதிநிதித்துவங்கள் உறுதி செய்யப்பட அதிக எண்ணிக்கையில் பல்-அங்கத்தவர் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும். தற்போது கொழும்பு மத்தி, பேருவளை, ஹரிஸ்பத்துவ, நுவரெலிய-மஸ்கெலிய ஆகிய நான்கு தொகுதிகள் மாத்திரமே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே பல்-அங்கத்தவர் தொகுதிகளாக இருக்கின்றன. இந்த தொகை குறைந்த பட்சம் இன்னமும் மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டு, இங்கு வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் நியாயமான பிரதிநிதித்துவங்களை நமது சனத்தொகைகளுக்கு ஏற்ப உறுதி செய்ய வேண்டும்.


குறிப்பாக, கண்டி, இரத்தினபுரி, கம்ப ஹா, பதுளை மாவட்டங்களிலும் புதிய பல்-அங்கத்தவர் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும். கொழும்பு மாவட்டத்தில் இன்னமும் மூன்று மேலதிக புதிய பல்-அங்கத்தவர் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும். நுவரெலிய மாவட்டத்தில் குறைந்தபட்சம் நான்கு தமிழ் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் வகையில் மறு சீரமைப்பு நடைபெற வேண்டும். இவற்றுக்கான உத்தரவாதங்கள் கிடைக்காத வரைக்கும் நாம் புதிய மாற்றங்களுக்கு உடன்பாடு தெரிவிப்பது கடினமான காரியம் ஆகும்.

எங்களது இந்த கருத்துகளை தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைத்துள்ள குழு அங்கத்தவர்களான அமைச்சர்கள் டிலான் பெரேரா, எஸ். பி. திசாநாயக்க ஆகியோரிடம் தெரிவித்தோம்.

தங்களது யோசனைகள் இறுதி தீர்மானங்கள் இல்லை எனவும், அவற்றை மாற்றி அனைவரும் குறிப்பாக சிறுபான்மை தமிழ் பேசும் மக்கள் ஏற்று கொள்ளும் வண்ணம் திருத்தி அமைக்க தாம் தயார் என்றும் அவர்கள் பதில் கூறினர். பல்-அங்கத்தவர் தொகுதிகள் தொடர்பான உங்கள் அக்கறையை நாம் புரிந்து கொள்கிறோம். நீங்கள் இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிடம் தீவிரமாக வலியுறுத்தியுள்ளதும் எமக்கு தெரிய வந்துள்ளது. தேர்தல் ஆணையாளர் பல்-அங்கத்தவர் தொகுதிகள் புதிதாக மேலும் அமைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளார். இதனடிப்படையில் நமது யோசனை திட்டம், பதினைந்து புதிய பல்-அங்கத்தவர் தொகுதிகளை உருவாக்குவதை அடிநாதமாக கொண்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைச்சர்கள் எம்மிடம் தெரிவித்தனர். நமது கலந்துரையாடல்களை மேலும் தொடருவதற்கு இரு தரப்பினரும் எண்ணியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## இரவும் பகலும் மகிந்தவுக்காக மன்றில்...







முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விசாரணைக்கு அழைக்கும் நடவடிக்கையை கைவிடுமாறு வலியுறுத்தி எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் ஆரம்பித்த எதிர்ப்பு நடவடிக்கை நேற்று நண்பகல் வரை முன்னெடுக்கப்பட்டது. இதேவேளை நேற்றுமுன்தினம் இரவு இந்த உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்திலேயே தங்கியிருந்தனர்.

## வடமராட்சி திக்கம் வடிசாலை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது

(கரணவாய்)

நீண்டகாலமாக மூடப்பட்டிருந்த வடமராட்சி திக்கம் வடிசாலை மீண்டும் கடந்த 13 ஆம் திகதி முதல் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த 16 மாதங்களாக பூட்டப்பட்டிருந்த திக்கம் வடிசாலை சித்திரைப் புதுவருடத்திற்கு முந்தைய நாள் திறக்கப்பட்டு தற்பொழுது சிரமதானம் நடைபெற்று வருகிறது.

இப்பணிகளில் 9 ஊழியர்கள் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. பற்றைகள் வளர்ந்து பெரும் காடு போன்று காட்சியளிக்கும் திக்கம் வடிசாலையை புனரமைக்கும் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள.

திக்கம் வடிசாலை புனர் நிர்மாணம் செய்யப்பட்டு வடமராட்சிப் பகுதியிலுள்ள சீவல் தொழிலாளர்களின் உற்பத்திகளை முழுவதும் பெறக்கூடிய வகையில் திக்கம் வடிசாலை வளப்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன் திக்கம் வடிசாலையில் பணியாற்றி வேலையிழந்த பணியாளர்களுக்கு வேலை வழங்குவதுடன் அவர்களில் வயது வந்தவர்களுக்கு பணிக்கொடை வழங்கப்பட வேண்டும்.

மேலும் பனை, தென்னை வளங்கள் அழிக்கப்படுவதை நிறுத்தி அவற்றின் உற்பத்திகளை மேலும் பெருக்க வழிசமைக்கப்பட வேண்டும்.

இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு தமது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-3-60)

## விளையாட்டு நிகழ்வு

வடக்கு மாகாணத்தின் கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கிடையிலான மாகாண மட்ட செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற வுள்ளதாக வடக்கு மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் பி.செல்வின் இரேனியஸ் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள ஆரம்பகல்வி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெறவுள்ள மாகாண மட்ட செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வில் பங்கு பற்றும் மாணவர்களையும் நடுநிலை வகிக்கும் ஆசிரியர்களையும் அன்றையதினம் காலை 8.30மணிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு மேலும் அறிவித்துள்ளார். (இ-3-15)

## வடக்கு மாகாணத்திலிருந்து சென்று இந்தியாவில் தமது கல்விசார் பயிற்சிகளை பெற்றுக் கொண்டவர்கள் பதிவு செய்யவும்

யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதரகமானது 2010 நவம்பரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. தூதரகமானது தற்பொழுது, இந்தியாவில் தமது கல்வி சார் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்ட வடக்கு மாகாண மாணவர்களது தரவுகளைச் சேகரித்து வருகின்றது.

வடக்கு மாகாணத்திலிருந்து சென்று இந்தியாவில் எந்திரவியல், கட்டடவியல், தொழில்நுட்பம், மருத்துவம், பாரம்பரியக் கலைகள் உட்பட அனைத்து பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் கலாநிதிப் பட்டப்படிப்புகளை அல்லது குறுகிய காலப் பயிற்சி நெறிகளை (ITEC/TCS) தமது சுயநிதியிடல் மூலமாகவோ அல்லது இந்திய அரசின் புலமைப்பரிசில் மூலமாகவோ மேற்கொண்டவர்கள் தமது சுயவிபரங்களை, பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தூதரக இணையத்தளத்திலிருந்து (www.cgijaffna.org) பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை cgi.jaffna@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது இந்தியத் துணைத்தூதரகம், இல.14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ, 10 மே, 2015 இற்கு முன்னர் கிடைககக் கூடியவாறு அனுப்பி வைக்கும் படி கேட்டுக்கொள்கின்றோம் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 700 அகதிகள் கடலில் மூழ்கியமை

# படுகொலையே



## ஐ.நா. ஆவேசம்

(ரோம்)

**ஐரோப்பாவுக்கு சட்டவிரோதமாக அகதிகளை ஏற்றிச் சென்ற படகு மத்திய தரைக் கடலில் கவிழ்ந்து 700 பேர் மூழ்கியதை ஐ.நா. அகதிகள் உரிமை ஆணையம் படுகொலையென குற்றம் சாட்டியுள்ளது.**

இதுகுறித்து அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் கார்லோட்டா சமி தெரிவிக்கையில், மத்திய தரைக்கடலில் இதுவரை கண்டிராத மாபெரும் படுகொலையை நாம் தற்போது கண்டுள்ளோம் என்றார்.

மேலும், அந்த அமைப்பின் தலைவர் ஆன்டனியோ கியூட்ரெஸ் கூறியதாவது,

அகதிகளை நடுக்கடலில் மீட்பதற்கான ஏற்பாடுகளை பன்மடங்கு பெருக்க வேண்டியதன் அவசியத்தையும், அவர்கள் ஐரோப்பா வருவதற்கு நம்பத்தகுந்த, சட்டபூர்வ வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் இந்த விபத்து உணர்த்தியிருக்கிறது.

இந்த நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளாவிட்டால் பாதுகாப்புக்காக வரும் அகதிகள் பரிதாபகரமாக உயிரிழப்பது தொடர்கதையாகிவிடும் என்றார் அவர்.

இந்த விபத்து குறித்து சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு கூறியதாவது, மாபெரும் உயிரிழப்பை ஏற்படுத்தியுள்ள இந்த விபத்து, முன்கூட்டியே கணிக்கக் கூடிய ஒன்றே. எனினும், விபத்தைத் தடுப்பதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, 700 பேர் கடலுக்குள் மூழ்கிய சம்பவம் மனிதர்கள் உருவாக்கிய பேரழிவே ஆகும் என்று அந்த அமைப்பு கருத்து தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் ஃபெடரிகா மோகேரினி " இனி இதுபோல் ஒரு விபத்து நிகழக் கூடாது" என நாம் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் விபத்துகளும் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கின்றன. எனவே, இனியும் தாமதிக்காமல், இதுபோன்ற துயரச் சம்பவங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கையில் ஐரோப்பிய யூனியன் உடனடியாக இறங்குவதற்கான நேரம் இது என்றார் அவர்.

இந்த விபத்தைத் தடுக்க போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என ஐரோப்பிய யூனியன் அமைப்பின் மீது பல்வேறு ஊடகங்களும் குற்றஞ்சாட்டியுள்ளன.

இந்தச் சம்பவத்தை "ஐரோப்பிய யூனியனின் கறுப்பு தினம்" என ஊடகங்கள் வர்ணித்துள்ளன.

"உயிர்களை துச்சமாக மதிக்கும் ஐரோப்பிய யூனியனின் அகதிகள் குறித்த இரக்கமற்ற கொள்கைகளை இந்த விபத்து துகிலுரித்துக் காட்டுகிறது'' என்று அவை குறிப்பிட்டுள்ளன. ஒரு சில பத்திரிகைகள், அகதிகளைத் தேடவும், மீட்கவும் இத்தாலி மேற்கொண்டு வந்த "மாரே நாஸ்டிரம்" நடவடிக்கையை அந்த நாடு மீண்டும் தொடங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளன.

அதிக செலவு பிடிப்பதாலும், ஐரோப்பாவை நோக்கி மேலும் பல அகதிகளை இந்த நடவடிக்கை ஈர்க்கும் என ஐரோப்பிய யூனியன் விமர்சித்ததாலும் "மாரே நாஸ்டிரம்" நடவடிக்கையை இத்தாலி நிறுத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)



## தாய்லாந்தில் பெரிய அளவில் யானைத்தந்தங்கள் பறிமுதல்



தாய்லாந்தில் வரலாறு காணாத அளவில் கடத்தப்பட்ட யானைத்தந்தங்கள் பிடிபட்டுள்ளதாக அந்நாட்டின் சுங்கவரித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு மாத காலமாக கண்காணித்து கொங்கோ ஜனநாயக குடியரசிலிருந்து கடத்தப்பட்ட நான்கு தொன் யானைத் தந்தங்களை தாங்கள் கைப்பற்றியதாக சுங்கத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச சந்தையில் கிட்டத்தட்ட 6 மில்லியன் டொலர் மதிப்பு வாய்ந்த இந்தத் தந்தங்கள் முதலில் லாவோஸ் நாட்டுக்கு அனுப்பப்பட்டு பின்னர் அங்கிருந்து தாய்லாந்து, சீனா அல்லது வியடநாமைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு விற்கப்படும் என தாம் நம்பியதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சட்டவிரோதமான யானைத் தந்தங்கள் வர்த்தகத்தை நிறுத்த, தாய்லாந்து வேண்டியதைச் செய்யவில்லை எனில், சட்டபூர்வமாக தாயிலாந்திலிருந்து வனவிலங்குகள் மற்றும் அதன் பகுதிகள் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு சர்வதேச அளவில் தடைகள் ஏற்படும் சூழல் கட்டாயமாக அமையும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. கிழக்கு ஆசியாவில் அதிகரித்து வரும் யானைத் தந்தங்களின் தேவைக்காக, சமீபத்திய ஆண்டுகளில் சட்டவிரோதமாக 10 ஆயிரத்துக்கும் அதிகமான யானைகளை ஆபிரிக்காவில் கொல்லப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## படை நகர்த்தும் ஐ.எஸ்.ஐ.எஸ்.

## பதறியடித்தோடும் ஈராக்மக்கள்

(பக்தாத்)

ஈராக் நாட்டில் அன்பர் மாகாணம் நோக்கி ஐ.எஸ். ஐ.எஸ். படைகள் முன்னேறி வருவதால், சுமார் 90 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அந்த மாகாணத்தில் இருந்து வெளியேறி உள்ளார்கள்.

இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்கள் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,

அன்பர் மாகாணத்தை நோக்கி ஐ.எஸ். ஐ.எஸ். படைகள் வேகமாக முன்னேறி வருகின்றன. சில நாட்களுக்கு முன்பு அந்த மாகாணத்தின் தலைநகரான ரமதி மற்றும் சில கிராமங்கள் ஐ.எஸ்ஐ.எஸ் அமைப்பினரால் கைப்பற றப்பட்டன.

அதன் காரணமாக மக்கள் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

இதுவரை சுமார் 90 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் வெளியேறி இருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு, நீர் மற்றும் இருப்பிடம் ஆகியவற்றை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் பலரும் வெளியேறி வருவதாலும், கடைகள் பலவும் மூடப்பட்டிருப்பதாலும், ரமதி ஆள் நடமாட்டம் இன்றி காட்சியளிக்கிறது என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## இத்தாலி அருகே மீண்டும் அகதிகள் படகு மூழ்கியது

## 20 பேர் பலி

லிபியாவில் உள்நாட்டு போர் மற்றும் கிளர்ச்சி படையினரின் தாக்குதல் உள்ளிட்ட காரணங்களால் அங்கிருந்து மக்கள் அகதிகளாக வெளியேறுகின்றனர். அனுமதியில்லாத படகுகள் மூலம் திருட்டுத்தனமாக புறப்பட்டு ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

அண்மையில் லிபியாவில் இருந்து 700 பேருடன் வந்த படகு இத்தாலியில், மத்திய தரைக்கடலில் மூழ்கியது. அதில் பயணம் செய்த 600 பேர் தண்ணீரில் மூழ்கி பலியானார்கள்.

இந்த நிலையில் லிபியாவில் இருந்து வந்த மற்றொரு படகு மத்திய தரைக்கடலில் மூழ்கியது. அந்த படகில் பயணம் செய்த அகதி ஒருவர் ரோம் நகரில் உள்ள சர்வதேச குடியுரிமை அலுவலகத்துக்கு தொலைபேசியில் பேசினார்.

லிபியாவில் இருந்து 3 படகுகளில் அகதிகள் வந்துள்ளதாகவும், அதில் ஒரு படகு கடலில் மூழ்கியதாகவும் தெரிவித்தார். மூழ்கி கொண்டிருக்கும் படகில் 20 பேர் கடலில் மூழ்கி பலியாகி விட்டதாகவும் தெரிவித்தார்.

உடனே மீட்பு குழுவினர் அப்பகுதிக்கு விரைந்துள்ளனர். மத்திய தரைக்கடல் பகுதியில் அகதிகள் படகுகள் அடிக்கடி மூழ்கி உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன. இந்த ஆண்டில் (2015) மட்டும் இதுவரை 1600 அகதிகள் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். அதை தடுக்க அகதிகளை சட்டவிரோதமாக அழைத்து வரும் கடத்தல்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க இத்தாலி அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கிடையே கிரேக்க நாட்டின் ரோதஸ் தீவில் நேற்று முன்தினம் அகதிகளை ஏற்றி வந்த படகு ஒன்று கடலில் மூழ்கியது. இதில் 3 பேர் பலியாகினர். அந்த படகில் 80 பேர் பயணம் செய்தனர். அப்படகு துருக்கியை கடந்து வந்தபோது கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையற்றுப் போவான்; சிறையுற்றுச் சாவான். – தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இலங்கை ஆட்சியின் அழகு கண்டோம்

நாடு என்பதற்கு ஒரு அதிகாரத்தை ஒதுக்கியவன் வள்ளுவன். ஒரு நாடு என்றால் அங்கு என்னென்ன விடயங்கள் இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்ட வள்ளுவன், ஒரு நாட்டில் என்ன இருக்கக் கூடாது என்பதையும் தெளிவுபடுத்தினான்.

வள்ளுவன் கண்ட நாட்டை எங்கு காண்பது என்பதல்ல இங்கு வேதனை. மாறாக எங்கள் இலங்கைத் திருநாட்டில் எப்படி எல்லாம் ஆட்சி நடக்கிறது என்பதைப் பார்க்கும்போதுதான் வேதனை இதயத்தை அடைக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விசாரிப்பதற்காக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அவருக்கு அழைப்பாணை அனுப்பி இருந்தது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு என்பது இந்த நாட்டில் இருக்கக்கூடிய ஒரு சுயாதீன அமைப்பு. எனவே இந்த அமைப்பு அழைக்கும் போது அதற்கு மதிப்பளித்து செயற்படுவதே ஒழுங்கும் கடமையுமாகும். எனினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விசாரிக்கும் பொருட்டு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அழைப்பு விடுத்ததை எதிர்த்து பாராளுமன்றத்தில் மகிந்தவுக்கு ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்கள் அட்டகாசம் செய்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விசாரிக்க முடியாது– விசாரிக்கக் கூடாது என்பதாக அவர்களின் ஆர்ப்பாட்டம் இருந்தது.

ஊழல் அல்லது இலஞ்சம் தொடர்பில் விசாரணை நடத்துகின்ற பொறுப்பு, குறித்த ஆணைக்குழுவுக்கு இருக்கும் போது அந்த சுயாதீன அமைப்பு தனது கடமையை செய்வதை எவரும் தடுக்கக் கூடாது.

அவ்வாறு தடுத்தால், இலஞ்ச ஊழல் விடயத்தில் தடுத்தவர்களுக்கும் தொடர்பு உண்டு எனக் கருதி அவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி என்பதற்காக அவர் மீது இலஞ்ச ஊழல் விசாரணை செய்யக்கூடாது எனக் கூறுவதன் ஊடாக சட்டத்தின் முன் சகலரும் சமன் என்ற தத்துவம் தோற்கடிக்கப்படுகிறது. இத்தகையதொரு ஏற்ற இறக்கம் இலங்கையில் இருப்பதன் காரணமாகவே தமிழர்களுக்கு உரிமைகள் கிடைக்காமல் உள்ளது என்பது உறுதியாகின்றது.

சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானது. இதன் காரணமாகவே குறித்த சட்டம் எனக்குத் தெரியாது என்று கூறி எந்தக் குற்றவாளியும் தப்பித்துக் கொள்ள முடியாது. நிலைமை இதுவாக இருக்கையில், இலஞ்ச ஊழல் தொடர்பில் விசாரிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு முன்பாக ஆஜராகுமாறு விடுத்த அழைப்புத் தொடர்பில், மகிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக விமர்சித்து வருகிறார்.

இவ்வாறு விமர்சிப்பதானது, ஆணைக்குழு என்ற சுயாதீன அமைப்பை கேலி செய்வதாக இருப்பதுடன் சுயாதீன ஆணைக்குழுகளாலும் எதுவும் செய்து விடமுடியாது என்றொரு சூழ்நிலையையும் தோற்றுவித்து விடுகிறது.


அதேநேரம் இப்படியான விமர்சனங்களை எல்லோரும் செய்யமுடியும் என்றொரு தோற்றப்பாடும் ஏற்படுவிடும்.

ஆக சட்டங்கள் தனது கடமையைச் செய்வதில் எவர் தலையிட்டாலும் அவர்கள் தண்டிக்கப்படுவதுடன் இத்தகையவர்கள் எக்காலத்திலும் மக்கள் பிரதிநிதிகளாக முடியாது என்ற இறுக்கமான தீர்ப்புகளும் வழங்கப்பட வேண்டும்.

அப்போதுதான் இந்த நாட்டில் சட்டம் சகலருக்கும் சமம் என்ற உண்மை நிலைநாட்டப்படும்.

# எனக்குப் பிள்ளைகள் இல்லாவிடினும் நான் போதைப்பொருள் கடத்தவில்லை

## டி.எம்.ஜயரட்னவுக்கு பிரதமர் ரணில் பதில்



(கொழும்பு)

எனக்கு பிள்ளைகள் இல்லை என்பது உண்மைதான். ஆனால் நான் போதைப் பொருள் கடத்துவதில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரட்ன, ரணில் விக்கிரமசிங்கவை தனிப்பட்ட வாழ்க்கையைத் தொடர்புபடுத்தி நாடாளுமன்றில் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார். பிள்ளைகள் இல்லாதவர் என டி. எம். ஜயரட்ன, பிரதமரை விமர்சனம் செய்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ மட்டுமன்றி தற்போது எல்லோரும் கள்வர்கள். நாடாளுமன்றில் உள்ள அனைவரும் கள்வர்கள், கொலைகாரர்கள், கொள்ளையர்கள் என அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

இந்த குற்றச்சாட்டுக்கள் வரலாற்றுக்குச் செல்லும். சிறுவர்கள் இதைப் பற்றி என்ன நினைப்பார்கள். குற்றம் சுமத்தப்படுபவரின் பிள்ளைகளுக்கு எவ்வாறான உணர்வு ஏற்படும்.

பிரதமருக்கு என்றால் பிரச்சினையில்லை. ஏனென்றால் அவருக்கு பிள்ளைகள் இல்லைதானே" என டி.எம்.ஜயரட்ன குறிப்பிட்டுள்ளார்.

இதற்குப் பதிலளித்த ரணில்,

"முதலில் நான் சொல்ல வேண்டும். எனக்கு பிள்ளைகள் இல்லை. என்றாலும் நான் போதைப் பொருளை நாட்டுக்கு கொண்டு வரவில்லை. பிள்ளைகள் இருப்பவர்கள் போதைப் பொருளை கடத்துவது கொலைக் குற்றச் செயலை விடவும் பாரிய குற்றமாகும்.

அவ்வளவுதான் நான் சொல்வேன். வேறு எதனையும் சொல்ல விரும்பவில்லை" என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்துள்ளார். (செ-11)

# நேரில் வந்து வாக்குமூலமளிக்க மகிந்த பின்வாங்குவது ஏன்?

## கிரியெல்ல கேள்வி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு வந்து வாக்கு மூலமளிக்க முடியாது என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும், அமைச்சு பதவி நியமனங்களின் போதும் பணக்கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பில் திரிபுபடுத்தப்பட்ட தகவல்களை சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளியிட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

19-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படுவதனை தடுக்கும் நோக்கில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர் அல்ல எனவும் அவர் தொடர்பில் சிறப்புரிமை கேள்விகளை எழுப்ப முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்தின் போதே அவ்வாறான சிறப்புரிமை கேள்விகளை எழுப்ப முடியும் என தெரிவித்த அமைச்சர்,

ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின் 79 ஆவது சரத்தின்படி ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பணம், பதவிகள், அன்பளிப்புகள், வரப்பிரசாதங்கள், நன்கொடைகள் போன்றவற்றை ஒரு வேட்பாளருக்கு சாதகமான நிலைமை ஏற்படும் வகையில் வழங்கினால் அது சட்ட மீறலாகும் எனவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னரே திஸ்ஸ அத்தநாயக்க சுகாதார அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்டார் என சுட்டிக்காட்டிய அமைச்சர்,

ஜனாதிபதி, சபாநாயகர் மற்றும் பிரதமர் போன்ற எவரும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விவகாரங்களில் தலையீடு செய்ய முடியாது எனவும் தெரிவித்தார்.

தான் குற்றமற்றவர் எனில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் முன்னிலையில்வாக்கு மூலமொன்றை அளிக்க முடியும், ஆனால் முன்னாள் ஜனாதிபதி எதற்காக குறித்த ஆணைக்குழுவில் ஆஜராவதை தவிர்த்து வருகிறார் என்பது கேள்விக்குறியாகியுள்ளது என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# வளலாய் தமிழ்க் கலவன் பாடசாலை 20 வருடங்களுக்குப் பின் மீள ஆரம்பிப்பு

## வடக்கு கல்வி அமைச்சு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நடைபெற்ற போர் காரணமாக கடந்த 20 வருடகாலமாக இயங்கு நிலையின்றி காணப்பட்ட வளலாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை நேற்றைய தினம் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவினால் மீள ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. பாடசாலை ஆரம்பமான நேற்றைய தினம் 21 மாணவர்கள் இணைந்து கொண்டுள்ளனர்.

1882ஆம் ஆண்டு இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. போர் காரணமாக 1990ஆம் ஆண்டு வளலாய் மக்கள் இடம்பெயர்ந்ததை அடுத்து இப்பாடசாலை ஆவரங்கால் மகாஜன பாடசாலையுடன் இணைத்து கல்வி செயற்பாட்டை முன்னெடுத்தது. அதன் பின்னர் 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வினை அடுத்து பாடசாலையின் கல்வி செயற்பாடுகள் முற்றாக தடைப்பட்டது. 1996ஆம் ஆண்டு மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட போது பாடசாலை முற்றாக சேதமடைந்து காணப்பட்டது. போர் முடிவடைந்ததை அடுத்து 2010ஆம் ஆண்டு முதல் இப்பாடசாலையை மீள ஆரம்பிக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் மற்றும் பாடசாலை பழைய மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயமென இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டிருந்த 6381 ஏக்கர் நிலப்பிரதேசத்தில் மக்களின் மீள்குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்ட சுமார் 1007 ஏக்கர் பகுதிக்குள் உள்ளடங்கும் வறுத்தலைவிளான் பிரதேசத்தில் அமைந்திருந்த யா/வறுத்தலைவிளான் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையைக் கடந்த வியாழக்கிழமை 16.04.2015 அன்று வடமாகாண கல்வியமைச்சருமமாகாணசபை உறுப்பினர்களுமாக சென்று பார்வையிட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த பாடசாலையை, மீண்டும் குறித்த இடத்தில் புதுப்பொலிவுடன் இயங்க வைக்க கல்வியமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்னும் வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயம் எனும் போர்வையில் விடுவிக்கப்படாமல் உள்ள விடுவிக்கப்பட்ட ஆயிரம் ஏக்கர் நிலம் தவிர்ந்த 5 ஆயிரத்து 374 ஏக்கர் நிலப் பிரதேசத்தைச் சேர்ந்த, சொந்த நிலத்தில் இயங்கமுடியாமல் இன்னும் 12 பாடசாலைகள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## அகங்காரம் இருக்கும்வரை முக்தி இல்லை



✦ பாலும் நீரும் கலந்தது போன்றது உலகம். நீங்கள் ஓர் அன்னம் போன்று இருந்து, நீரைத் தவிர்த்து பாலைப் பருகுங்கள்.

✦ ஏகாந்தத்திலே (தனிமை) இருந்து நீங்கள் தியானம் புரியும்போது உங்கள் குடும்பத்தவரிடமிருந்து உங்களை முற்றிலும் பிரித்துக் கொண்டு தனித்திருங்கள்.

✦ இல்லறத்தாருக்கு ஜீவர்களிடத்து அன்பு, .பக்தர்களுக்குச் சேவை் கடவுளின் புனித நாம உச்சாடனம் ஆகியவை கடமைகளாகும்.

✦ பணம் நமக்குப் பெற்றுத் தருவதெல்லாம் சோறும், கறியுமேயாகும். பணத்தையே உங்களுடைய உயிரும் உடலுமெனவோ, உங்களது ஒரே குறியும் நோக்கமும் எனவோ கருதாதீர்கள்.

✦ அகங்காரம் இருக்கும் வரையில் ஞானமும் முக்தியும் கைகூடாது பிறப்பும் இறப்பும் இருந்தே தீரும் நீங்காது.

✦ இல்லறத்தில் நம்பிக்கை கொள்ளுங்கள். கடவுளை நம்பி இருங்கள் பின்னர் நீங்களாக எதையுமே செய்ய வேண்டியிராது. அன்னை காளி உங்கள் பொருட்டு யாவற்றையும் தாமே செய்வாள்.

✦ சம்சாரமாகிய பெருங்கடலில் ஆறு முதலைகள் உள்ளன. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பவையே அந்த முதலைகளாம்.

✦ பெண்ணாசையை ஒழித்தவன் உலகத்தையே துறந்தவன் ஆவான். அவனுக்கு இறைவன் வெகு அருகில் இருக்கிறார்.

✦ மாயை என்பது தாய், தந்தை, சகோதர, சகோதரிகள், மனைவி, மக்கள், உற்றார், உறவினர் முதலியவர்களிடம் ஒருவனுக்கு உண்டாகும் பாசமாகும். எல்லா உயிர்களிடமும் சமமாகப் பரவும் அன்புக்கு தயை என்று பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருநாள் போட்டியில்

## முச்சதம் அடித்த இங்கிலாந்து வீரர்



ஒருநாள் போட்டிகளில் இரட்டைச் சதம் அடிப்பதென்பது சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த காலம் மாறி இன்று 200 அடிப்பது இலகுவான காரியமாகிவிட்டது.

இந்நிலையில் இங்கிலாந்து கழக மட்டப் போட்டிகளில் லியாம் லிவிங்ஸ்டன் 350ஓட்டங்களை வெறும் 137 பந்துகளில் அடித்து வரலாற்றில் இடம்பெற்றுள்ளார்.

நண்ட்விச் மற்றும் கல்டி அணிக ளுக்கு இடையில் இடம்பெற்ற கழக மட்டத்திலான போட்டியின் போதே இந்த சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இவரது 350 ஓட்டங்களில் 34 நான்கு ஓட்டங்களும் 27 ஆறு ஓட் டங்களும் உள்ளடங்கும்.

இப்போட்டியில் நண்ட்விச் அணி 45 ஓவர்களில் 579 ஓட்டங்க ளைப் பதிவு செய்து தனது ஆட்ட த்தை நிறுத்திக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கல்டி அணி வெறுமனே 79 ஓட்ட ங்களுக்குள் சுருண்டது. இதன் மூலம் 500 ஓட்டங்களால் படு தோல்வியடைந்தது. (க)

# டெல்லியுடனான வெற்றிக்கு பந்து வீச்சாளர்களே காரணம்

## கப்டன் கம்பீர்



நடப்பு சம்பியனான கொல் கத்தா நைட்ரைடர்ஸ் அணி டெல் லியை வீழ்த்தி 3 ஆவது வெற் றியை பெற்றது. முதலில் விளை யாடிய டெல்லி டேர்டெவில்ஸ் 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 146 ஓட்டங்கள் எடுத்தது. மனோஜ்தி வாரி 32 ஓட்டங்களும், ஹரியாஸ் அய்யர் 31 ஓட்டங்களும் எடுத்தனர்.

உமேஷ்யாதவ் 18 ஓட்டங்கள் கொடுத்து 2 விக்கெட் கைப்பற்றி னார். மார்னே மோர்கல், பியூஸ் சாவ்லா தலா 2 விக்கெட்டும், சுனில் நரீன் 1 விக்கெட்டும் எடுத்தனர்.

பின்னர் விளையாடிய கொல் கத்தா நைட்ரைடர்ஸ் 18.1 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 147 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. கப்டன் காம்பீர் 49 பந்தில் 60 ஓட்டங்களும் (8 பவுண் டரி), யூசுப் பதான் 26 பந்தில் 40 ஓட்டங்களும் (6 பவுண்டரி, 1 சிக்சர்) எடுத்தனர்.

இந்த வெற்றி குறித்து கொல் கத்தா அணியின் கப்டன் கம்பீர் கூறியதாவது,

பந்து வீச்சாளர்களே வெற் றிக்கு காரணமானவர்கள். அவர்களுக்கு தான் எல்லா பெருமையும் சேரும். குறிப்பாக உமேஷ்யாதவ் பந்துவீச்சு நம்ப முடியாத வகையில் அபார மாக இருந்தது. கடைசி ஓவரை அவர் மிகவும் சிறப்பாக வீசினார்.

மார்னே மோர்கல், உமேஷ் யாதவ், சுனில்நரீன் ஆகிய 3 பேரும் எங்கள் அணியில் இருப் பது சிறப்பானதாகும். எத்தனை ஓட்டங்கள் எடுப்பது என்பதை விட எத்தனை புள்ளிகள் பெறுவது என்பது தான் முக்கியமானது.

இவ்வாறு அவர் கூறினார்.

டெல்லி டேர்டெவில்ஸ் அணி 3 ஆவது தோல்வியை தழுவியது. தோல்வி குறித்து அந்த அணி கப்டன் டுமினி கூறும்போது, எங் களது தொடக்கமே மோசமாக அமைந்தது. விக்கெட்டுகள் சரிந்த தால் ஒன்றும் செய்ய முடியாமல் போனது.

146 ஓட்டங்கள் என்பது இந்த ஆடுகளத்தில் போதுமான இலக்கு தான். ஆனால் பந்து வீச்சாளர்க ளால் சிறப்புடன் செயற்பட முடிய வில்லை. இனிவரும் ஆட்டங்க ளும் சவாலாகவே இருக்கும் என் றார். (க)

# கிரிக்கெட்டினை தொடர்ந்து வியாபாரத்தில் குதித்த கோலி



கிரிக்கெட் வீரர்கள் ஆட்டத்தில் மட்டுமல்லாமல் விளம்பரங்கள் மூலம் கோடிக்கணக்கில் சம்பாதிக்கி றார்கள். அவர்கள் இந்த பணத்தை வியாபாரத்தில் முதலீடு செய்தும் பல கோடிகளாக்கி விடு கிறாரகள்.

இந்திய அணி கப்டன் டோனி பல்வேறு நிறுவனங்களில் முத லீடு செய்து இருக்கிறார். அதிக பணம் சம்பாதிக்கும் கிரிக்கெட் வீரர் களில் முன்னிலையில் உள்ளார்.

டோனியை தொடர்ந்து விராட் கோலியும் வியாபாரத்தில் குதிக் கிறார். நாடு முழுவதும் நவீன தரத்தில் உடற்பயிற்சி மையங்களை அமைக்க இருக்கிறார். இதற்காக அவர் 90 கோடிரூபா முதலீடு செய் கிறார். ஹிசல் பிட்னஸ் சென்டர் என்ற பெயரில் இந்த உடற்பயிற்சி மையம் அமைக்கப்படுகிறது.

யுவராஜ்சிங், ராபின் உத்தப்பா போன்ற வீரர்களும் பல்வேறு வியாபாரங்களில் முதலீடு செய்து உள்ளனர. (க)

# ஐ.பி.எல். போட்டியில் அதிரடி; வெளிவந்த டோனியின் ரகசியம்





ஐபிஎல் தொடரில் அதிரடியாக ஆட வேண்டும் என்ற நோக்கத் தில் டோனி உட்பட பலர் தங்களது பேட் எடையை குறைத்துள்ளனர்.

கிரிக்கெட்டில் வீரர்கள் பயன் படுத்தும் பேட்டுகளுக்கு என, எவ்வித வரையறையும் கிடை யாது. பேட்டின் எடை, உயரம் மற்றும் அகலத்தை தங்கள் விருப் பத்துக்கு ஏற்ப மாற்றிக் கொள்வர்.

இது தொடர்பாக, பேட் எடையை மாற்றி அமைப்பதில் அனுபவம் வாய்ந்த ராம் பண்டாரி கூறுகை யில்,

டோனியின் பேட்டுகளை, வருண் ஆரோன் என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார்.

அந்த பேட்டுகள் 1.250 கிராம் எடை இருந்தன. இதை 50 முதல் 60 கிராம் எடை குறைத்து தரு மாறு டோனி கேட்டுள்ளார்.

அதேபோல, பேட் கம்பனிகள் டோனியின் பேட்டுகளை என்னிடம நேரடியாக அனுப்பும். அப்போது மற்றவற்றுடன் கலந்து விடக்கூடாது என்பதற்காக பேட் நுனியில் அவ ரது பெயரை ஒட்டி அனுப்புவர்.

இதே போல ரெய்னா தனது பேட்டுகளை (1.170 முதல் 1.1[illegible] கிராம்) லோகேஷ் ராகுல் மூல மாக கொடுத்து நுனிப்பகுதி அதிக எடை யுடன் இருப்பதாக தெரிவித்தார். அதையும் சரி செய்து கொடுத்தேன் என்று தெரிவித்துள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ரோஹித் சர்மாவிற்கு ரூ.12 இலட்சம் அபராதம்

ஐபிஎல் சீசன்-8 கிரிக்கெட் சுற்றுப்போட்டி இந்தியா முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் நடை பெற்று வருகிறது.


சுற்றுத்தொடரின் 19ஆவது லீக் போட்டி பெங்களூர் சின்னசாமி ஸ்டேடியத்தில் நடைபெற்றது.

இதில் பெங்களூர் அணியை 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி வீழ்த்தியது.

இந்த ஐபிஎல் போட்டியில் தொடர் ச்சியாக 4 தோல்விகளை கண்ட மும்பை அணிக்கு இது முதல் வெற்றியாகும்.

இந்த போட்டியில் மும்பை அணி மெதுவாக பந்து வீசியது தெரிய வந்தது. இதனால் அ[illegible] அணியின், தலைவர் ரோஹித் சர்மாவிற்கு 12 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த சீசனில் விதிக்கப்படும் முதல் அபராதம் இதுவாகும். (க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரபரப்பான சுப்பர் ஓவரில்

# ராஜஸ்தானின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்தது பஞ்சாப்




பரபரப்பான சுப்பர் ஓவரில் ராஜஸ்தான் றோயல்ஸை வீழ்த்தியது கிங்ஸ் லெவின் பஞ்சாப்.

ஐ.பி.எல். திருவிழாவின் நேற்றைய லீக் போட்டியில் பஞ்சாப் - ராஜஸ்தான் அணிகள் அகமதாபாத் மைதானத்தில் மோதின. பஞ்சாப் அணியின் தலைவர் பெய்லி நேற்றைய போட்டியில் இடம்பெறவில்லை. இதனால் அவருக்குப் பதிலாக சேவாக் தலைமை தாங்கினார்.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி ராஜஸ்தான் அணியைச் சேர்ந்த ரகானே, வோட்சன் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இருவரும் தொடக்கம் முதலே சிறப்பாக விளையாடினார்கள். இதனால் முதல் பவர் பிளேயின் 6 ஓவர்களில் ராஜஸ்தான் அணி விக்கெட் இழப்பின்றி 43 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

9ஆவது ஓவரை சிவம் சர்மா வீசினார். இந்த ஓவரில் வோட்சன் 3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் விளாசினார். அடுத்த ஓவரை அக்சார் பட்டேல் வீசினார். அந்த ஓவரிலும் வோட்சன் சிக்ஸ் ஒன்று விளாசினார். ஆனால், அக்சார் பட்டேல் வீசிய 12ஆவது ஓவரின் 2ஆவது பந்தில் வோட்சன் ஸ்ரம்பிங் ஆகி வெளியேறினார்.

அவர் 35 பந்துகளில் 5 பவுண்டரி, இரண்டு சிக்ஸருடன் 45 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து ராஜஸ்தான் அணியில் அதிரடி வீரராக உருவாகியிருக்கும் ஹூடா களம் இறங்கினார்.

ஹூடா 13ஆவது ஓவரில் இரண்டு சிக்சர் அடித்து அசத்தினார். 14ஆவது ஓவரில் ரகானே சிக்ஸர் அடித்து அரை சதம் அடித்தார். அதிரடியாக விளையாடிய ஹூஹடா 9 பந்துகளில் இரண்டு சிக்ஸர், ஒரு பவுண்டரியுடன் 19 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சிவம் சர்மா பந்தில் போல்டாகி வெளியேறினார்.

அதன்பின்னர் 3-வது விக்கெட்டுக்கு களமிறங்கிய ஸ்மித், தான் சந்தித்த முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார். அப்போது ராஜஸ்தான் அணி 15.3 ஓவரில் 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 137 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அடுத்து கருண் நாயர் களம் இறங்கினார். நாயர் தான் சந்தித்த முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டினார்.

17ஆவது ஓவரில் ராஜஸ்தான் அணிக்கு ஒரு பவுண்டரியுடன் 12 ஓட்டங்கள் கிடைத்தன. 18ஆவது ஓவரை ஜோன்சன் வீசினார். இந்த ஓவரின் 4ஆவது பந்தில் ரகானே ஆட்டமிழந்தார். அவர் 54 பந்துகளில் 6 பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்களுடன் 74 ஓட்டங்கள் குவித்தார். 5ஆவது விக்கெட்டுக்கு நாயருடன் போல்க்னர் ஜோடி சேர்ந்தார். 18ஆவது ஓவரில் 12 ஓட்டங்கள் கிடைத்தது.

19ஆவது ஓவரை சந்தீப் சர்மா வீசினார். இந்த ஓவரின் முதல் பந்தில் போல்க்னர் ஒரு ஓட்டம் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார் அடுத்து பின்னி களம் இறங்கினார். 2ஆவது பந்தை நாயர் சிக்ஸருக்கு விளாசினார். இந்த ஓவரில் ராஜஸ்தான் 10 ஓட்டங்கள் எடுத்தது.

கடைசி ஓவரை அனுரீத் சந்தீப் வீசினார். இதன் முதல் பந்தில் கருண் நாயர் ஆட்டமிழந்தார். அவர் மொத்தம் 25 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து சாம்சன் களம் இறங்கினார். இவர் தான் சந்தித்த முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டினார். 5ஆவது பந்தை பவுண்டரிக்கு விரட்டிய பின்னி, கடைசி பந்தை சிக்ஸருக்கு தூக்கினார். இதனால் 20 ஓவர்கள் முடிவில், ராஜஸ்தான் றோயல்ஸ் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 191 ஓட்டங்கள் குவித்தது.

பின்னி 12, சாம்சன் 5 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

பின்னர் 192 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்று களமிறங்கிய பஞ்சாப் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 191 ஓட்டங்களை எடுத்தது.

இதனால் போட்டி சுப்பர் ஓவருக்கு சென்றது.

துடுப்பாட்டத்தில் பஞ்சாப் அணி சார்பாக மார்ஷ் 65, மில்லர் 54 ஓட்டங்கள் எடுத்தனர்.

சிறப்பு விதிகளின் படி, சுப்பர் ஓவர் வீசப்பட்டது. தவற விட்ட வெற்றியை திரும்பப் பெறும் வெறியுடன் களமிறங்கியது பஞ்சாப். முதல் பந்திலேயே அதிர்ச்சிகரமாக மில்லர் ஆட்டமிழந்தார். அடுத்த பந்தில் மக்ஸ்வெல் ஒரு ஓட்டம் எடுத்தார். 3ஆவது பந்து நோ போலாக அந்த போலில் 4 அடிக்கப்பட்டது. திரும்ப வீசப்பட்ட 3ஆவது பந்திலும் 4 ஓட்டங்கள். 4ஆவது பந்திலும் 4 ஓட்டம். 5ஆவது பந்தில் ஓட்டம் இல்லை. 6ஆவது பந்தில் ஒரு ஓட்டம், என மொத்தமாக 15 ஓட்டம் எடுத்தது பஞ்சாப் அணி.

6 பந்துகளில் 16 ஓட்டம் எடுத்தால் வெற்றி பெறலாம் என்ற நிலையில் களமிறங்கியது ராஜஸ்தான். முதல் பந்திலேயே க்ளீன் போல்டாகி வோட்சன் ஆட்டமிழுந்தார் . 2ஆவது பந்து நோ போல அதே நேரம் 4. திரும்ப வீசப்பட்ட 2ஆவது பந்தில் ஒரு ஓட்டம். மைதானமே உச்சகட்ட பரபரப்பில் இருந்தது. 3ஆவது பந்தில் போல்க்னர் ரன் அவுட் ஆக சுப்பர் ஓவர் விதிகளின்படி 2 விக்கெட்டுக்கள் வீழ்ந்ததால் பஞ்சாப் அணி வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக பஞ்சாப் அணியின் ஷோன் மார்ஷ் தெரிவானார். (க)




## அட்சய திருதியையில் மக்கள் ஆர்வம் கடைகள் எங்கும் விழாக் கோலம்

(யாழ்ப்பாணம்)

அட்சய திருதியை தினமான நேற்றைய தினம் யாழ். நகரிலுள்ள நகைக்கடைகளில் நகைகள் கொள்வனவு செய்வதில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். வாடிக்கையாளர்களை கவரும் வகையிலும் சமய முறைப்படியும் நகைக் கடைகள் அனைத்தும் அலங்கரிப்பு செய்யப்பட்டிருந்ததால் யாழ்.நகர் மற்றும் பிற நகர்கள் என்பன விழாக்கோலம் போல் காட்சியளித்திருந்தது.

இத்தினத்தில் நகைகள் கொள்முதல் செய்தால், தொடர்ந்து நகைகள் கொள்வனவு செய்யலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பெருமளவு பொதுமக்கள் திரண்டு நகைகளை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டியிருந்தனர். நகைகளை கொள்வனவு செய்திருந்தவர்களுக்கு பரிசுப் பொதிகள், தங்க நாணங்கள் என்பன நகைக்கடை உரிமையாளர்களால் வழங்கப்பட்டிருந்தது.

22 கரட் உடைய ஒரு பவுண் நகை 43,000 ரூபாய் என்ற விலையில் விற்பனை நிலைவரம் காணப்பட்டிருந்தது,

நகைக் கடைகள் முன்பாக வாழை, தோரணம் கட்டி பூரண நிறைகும்பம் வைத்து சம்பிரதாய முறைப்படி நேற்றைய தினம் யாழ்., கிளி., முல்லை., வவு., மன்னார் மாவட்டங்களில் உள்ள நகைக் கடைகளிலும் நகை விற்பனை இடம்பெற்றிருந்தது. இதனால் பிரதான நகர்களில் நேற்றைய தினம் சன நெரிசல்களும் அதிகரித்து காணப்பட்டிருந்தது.



இதேவேளை அட்சய திருதியை தினமான நேற்றைய தினம் யாழில திருட்டு கொள்ளை போன்ற அசம்பாவிதங்கள் இடம்பெறவில்லை என யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (செ-4)

## மகிந்தவிடம் சென்று விசாரிக்கவுள்ளது இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு வருகை தருவதை தடுக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அதற்காக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மகிந்த ராஜபக்ஷ விடம் சென்று வாக்குமூலம் பெற்றுக்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை பாராளுமன்ற வளாகத்தில் கட்சி தலைவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது சபாநாயகர் இதனை அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தனக்கு தகவல் வழங்கியதாக சபாநாயகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பாராளுமன்றத்திற்குள் முன்னெடுத்து வந்த எதிர்ப்பு நடவடிக்கை முடிவுக்கு வந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதியை லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவிற்கு அழைப்பதற்கு அதிகாரம் உள்ளதாக நீதியமைச்சர் ஏற்கெனவே வெளியிட்டிருந்த கருத்து வாபஸ் பெறப்பட்டதை சபாநாயகர் அறிவித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அவர் இருக்கும் இடத்திற்குச் சென்று, வாக்குமூலம் பதிவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

தமது கோரிக்கைக்கு நியாயமான பதில் கிடைத்துள்ளதால், மேற்கொண்டுவந்த எதிர்ப்பு நடவடிக்கையை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் முடிவுக்கு கொண்டு வருவதாகவும் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார். (ஜ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தவை பிரதமராக்கி...

இந்திய ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே கோத்தபாய இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக மக்களினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் ஆறு ஆண்டுகள் பதவி வகிப்பார்.

அவர் அவரது கடமைகளை முன்னெடுக்க தடைகள் இருக்கக் கூடாது. எனவே விரைவில் பாராளுமன்றத்தை கலைத்து தேர்தல் நடத்தி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இருவரும் இணைந்து மீண்டும் செயற்பாட்டு ரீதியான ஸ்திரமான அரசாங்கமொன்றை உருவாக்கி நாட்டை முன்னோக்கி நகர்த்த வேண்டும் என்றார்.

மகிந்த ராஜபக்ஷ மீளவும் வரவேண்டுமென மக்கள் விரும்புகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் மகிந்த ராஜபக்ஷவிற்கு 5.8 மில்லியன் மக்கள் வாக்களித்திருந்தனர்.

அதனை விடவும் தற்போது மக்கள் ஆதரவு பல்கிப் பெருகியுள்ளது.

நாட்டில் யார் ஆட்சி செய்கின்றார்கள் யார் உண்மையில் நாட்டின் தலைவர் என்பது தொடர்பில் மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

வானொலி நாடகங்கள் எழுதுவதில் நீங்கள் திறமை மிக்கவர்களா? உங்கள் திறமையை உலகளாவிய ரீதியில் வெளிப்படுத்த ஓர் அரிய சந்தர்ப்பம். வெளிநாட்டு, உள்நாட்டு வாழ்வியலை மையமாகக் கொண்ட நாடகங்கள் விரும்பத்தக்கது. சிறந்த நாடகங்களுக்கு பரிசு வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:- வைகுந்தம் 62/1, K.K.S Road, சுன்னாகம். (145)

இவ்வறிவித்தலை உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தெரியப்படுத்துங்கள். அவர்களும் பயன் அடையட்டும்.

## வந்தார் பசில்...

கள் விமான நிலையத்துக்கு செல்லும் வீதியில் இருமருங்குகளிலும் காத்திருக்திருந்தனர்.

சட்டத்தை மதிக்கும் குடிமகன் என்ற வகையில் எனக்கு எதிரான விசாரணைகளுக்கு முகம்கொடுப்பதற்காகவே நான், இலங்கைக்கு வந்தேன் என்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கட்டுநாயக்கவில் குழுமியிருந்த மூவாயிரத்துக்கும் மேற்பட்ட ஆதரவாளர்களின் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரமுகர்கள் வெளியேறும் வாயிலின் ஊடாக வெளியேறிய அவர், அதன் மூலையில் இருந்த அதிவிசேட பிரமுகர்கள் வெளியேறும் வாயிலின் அடியில் நுழைந்து வெளியேவந்தார்.

பசிலின் ஆதரவாளர்கள் நடத்திய போராட்டம் காரணமாக பிரமுகர்கள் வெளியேறும் மூலையில் இருந்த அதிவிசேட பிரமுகர்கள் வெளியேறும் வாயில் மூடப்பட்டிருந்தது.

விமான நிலைய வளாகத்தில் இருந்த மஞ்சள் பூக்கள் பூக்கும் மரத்தின் கிளையில் ஏறியிருந்த அவருக்கு பிரித் நூல் கட்டப்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தைச் சேர்ந்த பிரபல்யமானவர் என்ற போதிலும் அவரை வரவேற்பதற்கு கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த முக்கியஸ்தர்கள் எவரும் சமுகமளிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

ஒரு புறத்தில் பிரதமர் ரணில் விக்ர மசிங்க அரச நிர்வாக கடமைகளை ஆற்றி வரும் அதே வேளை, சந்திரிகா, சம்பிக்க ரணவக்க மற்றும் ராஜித போன்றவர்களும் அரச நிர்வாகத்தை தாங்கள் கட்டுப்படுத்து வதாக அறிவித்து வருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பிக்கப்பட்ட அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது.

இதனால் கட்டுமான பணிகளில் ஈடுபட்டிருந்த ஒரு இலட்சத்திற்கும் அதிகமான பணியாளர்கள் தொழில்களை இழந்துள்ளனர்

நாங்கள் எந்தவொரு குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை. எம் மீது அப்பட்டமாகவே குற்றம் சுமத்தப்படுகிறது என முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் யுத்தத்தை தாமே வெற்றியீட்டியதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறி வருகின்ற போதிலும், 30 ஆண்டுகளாக இராணுத்தில் இருந்த போதும் அவரால் யுத்தத்தை வெற்றிகொள்ள முடியவில்லை எனவும், ராஜபக்ஷ சகோதரர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதன் பின்னரே யுத்தம் வெற்றிகொள்ளப்பட்டது எனவும் கோதபாய ராஜபக்ஷ இந்திய ஊடகத்திற்கு செவ்வியளித்துள்ளார். (செ-11)

## மகிந்தவிற்கு...

பினர் பந்துல குணவர்தன அளித்த வாக்குறுதியை அடுத்தே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்தும் அவரை, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அழைத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நாடாளுமன்ற வீதியில், நேற்று காலை முதல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

நாடாளுமன்ற வீதியை மறித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தமுடியாது என்றும் அது சட்டவிரோதமானது என்றும் கடுவெல நீதிமன்றத்தினால் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையிலும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

## மீளக்குடியமர்ந்த மக்களு...

தொடர்பில் யாழ் மாவட்டச் செயலகத்தில் உயர்மட்டக் கலந்துரையாடலொன்று யாழ மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலையில் நடைபெற்றது.

நீண்ட காலமாக இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் இருந்த வலி வடக்கு பகுதியில் முதற்கட்டமாக ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை மீள்குடியேற்றத்திற்காக விடுவிப்பதாக புதிய அரசு அறிவித்திருந்தது.

ஆயினும் 613 ஏக்கர் மட்டுமே தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள வலி.வடக்குப் பகுதியில் இருந்து விடுவிக்கப்பட்டது. ஏனைய பகுதிகள் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பகுதிகளே முதற்கட்டமாக விடுவிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு மக்கள் சென்றுவர முதலில் அனுமதிக்கப்பட்ட இந்தப் பிரதேசங்களை ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களும் யாழ்ப்பாணத்திற்கு நேரடியாக வருகை தந்து மக்களின் காணிகளை மக்களிடமே கையளித்திருந்தனர்.

பொது மக்களின் பாவனைக்கென விடுவிக்கப்பட்ட இந்தப் பகுதிகளைப் பார்வையிடச் சென்ற மக்கள் தமது காணிகள் வீடுகளைத் தேடி அலைந்து திரிந்து கண்ணீர் விட்டு கதறியழுதனர். இருந்தும் மக்கள் தமது சொந்த நிலத்தில் மீள் குடியேறுவதில் ஆர்வமாகவே இருந்தனர்.

இதற்கமைய வலி கிழக்கின் வளலாய் பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் சில குடும்பங்கள் மளக் குடியமர்ந்திருக்கின்றன. அதே போன்று வலி வடக்கிலும் சில தினங்களிற்கு முன்னதாக ஒரு குடும்பம் மீளக் குடியமர்ந்துள்ளது.

இவ்வாறு மீளக் குடியமர்ந்திருக்கும் குடும்பங்களுக்கு எந்தவித அடிப்படை வசதிகளும் இதுவரையில் எவருமே ஏற்படுத்திக் கொடுக்காத நிலையில் பெரும் கஷ்டங்களையும் துன்பங்களையும் நாளாந்தம் எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே தற்போது அங்கு மீளக் குடியமர்ந்திருக்கும் குடும்பங்களுக்கு அவசரமானதும் அடிப்படையானதுமான தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் இக் கூட்டத்தின் போது பல்வேறு தரப்பினர்களினாலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய குடிநீர், உணவு, வீட்டு வசதிகள் உள்ளிட்ட அடிப்படைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அங்குள்ள பிரச்சினைகள் தேவைகள் என்பன குறித்தும் விரிவாக ஆராயப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (செ-4)

## 27-ம் திகதியே...

பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினமும் மறுநாளும் அது குறித்த விவாதம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## தலைக்கவசம்...

போதும் சிகிச்சை பலன் இன்றி நேற்று இரவு உயிரிழந்துள்ளார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-78)

## ரவி - விமல்...

செய்ய வேண்டும் எனவும் அவர் நல்லாட்சியின் அவசியத்திற்கேற்ப செயற்படுவதாகவும் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

அதன் போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அவர்களின் எதிர்ப்பை சட்டை செய்யாத விமல் என்னை பேச விடுங்கள், அமருங்கள் நான் கூறுவதை மாத்திரம் கேளுங்கள் எனவும், மகா திருடனும், திருட்டு குண்டனுமான ஒருவனுக்கு நிதி அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது.

ரவி ஒரு உலக மகா திருடன் என விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் கூக்குரலிட்டுள்ளார்.

இதேவேளை, யார் திருடன் என தெரியவில்லை வாயை மூடிக் கொண்டு அமரவும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பதிலுக்கு விமலிடம் தெரிவித்துள்ளார். (செ-11)

## மகிந்த - மைத்...

பல் கலந்துரையாடப்படவுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பில் இந்த சந்திப்பில் கவனம செலுத்தப்பட உள்ளது.

இருவரும் சந்திப்பதற்கு பொதுவான ஓர் இடமொன்று ஒழுங்கு செய்யப்படும்.

இருவரும் சந்திப்பு நடத்துவதற்கு உசிதமான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என ஏக்க நாயக்க தெரிவித்துள்ளார். (செ-11)

GRANTON நிறுவனம்

"முகாமைத்துவ பயிற்சி, பதவி வெற்றிடங்கள்"

சொற்ப நாட்களே இருப்பதால் சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்...

பரீட்சைக் கட்டணம் இல்லை | வயது 18-32 | அழைக்க 0774458134 | O/L போதுமானது

(151)

No. : 225, 3rd Cross Hospital Road, Jaffna.

பதவி வெற்றிடங்கள்

முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய பிரதேசத்திலுள்ள O/L,A/L படித்தவர்களுக்கான புதிய வேலை வெற்றிடங்கள்.

வயதெல்லை :- 18-30

சம்பளம் :- 15000 - 18000 (C-767)

T.P :- 0777981471,0773366453

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



af

வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.

உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.

INTERNATIONAL DIPLOMAS.

ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள் (147)

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

af FRENCH MOVIES - JAFFNA

Alliance Française de Jaffna

cordially invites you to the screening of

GAMES & TOYS

4 Short Movies From Africa.

(1988 - 1998, 84 min.)

on

Thursday 23 April 2015 at 4:00 p.m.

at

Alliance Française de Jaffna

61, Kachcheri-Nallur Road, Jaffna.

Phone: 021 222 8093

(148)

French Languages. English subtitles. Free entrance

CNR WORLD WIDE EXPRESS & TRAVELS

யாழ்ப்பாணத்தில் மங்களகரமான ஆரம்பம்

'அலுவலக திறப்பை முன்னிட்டு நீங்கள் அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படுகிறது'.

- வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
- அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் [உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி]
- சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் ( AirTicket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
- கடல் /ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)



சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை

401, Clock Tower Road, Jaffna (பெருமாள் கோவில் அருகில்) அழையுங்கள்:077 293 1062

(C-761)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.